உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 புரட்டாதி 29 வியாழக்கிழமை (16-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:322

மன்னாரில் ஊர்வலங்களுடன் நடந்த பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுகள்

பிரபாவின் உருவப்படம் தாங்கி மக்கள் பங்கேற்பு

மன்னார்,ஒக.16

'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வுகள் நேற்று மன்னாரில் உணர்வு பூர்வமாக நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் ஊர்வலத்திலும், பொது விளையாட்டரங்கு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டனர்.

நகரின் மூன்று முக்கிய இடங்களிலிருந்து நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் ஊர்வலங்கள் பொது விளையாட்டரங்கை நோக்கிப் புறப்பட்டன. ஊர்வலத்தில் பங்குபற்றிய மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் உருவப்படங்களைத் தாங்கிஎந்தனர்.

'பொங்குதமிழ்' நிகழ்வைக் குறிக்கும் விதத்தில் பெரிய அளவிலான பானையொன்று ட்ரக் வண்டியில் ஏற்றப்பட்டு ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. பொதுவிளையாட்டரங்கு வாயிலில் 'எமது நிலம் எமக்குவேண்டும்' என எழுதப்பட்ட பாரிய வளைவொன்று நிறுவப்பட்டிருந்தது. விளையாட்டரங்கில் பாரிய மேடை அமைக்கப்பட்டிருந்தது.

'விடுதலைப் புலிகளே எமது ஏக பிரதிநிதிகள்', 'இராணுவமே நாங்கள் எமது வீடுகளுக்குப் போவதற்காக நீங்கள் உங்கள் வீடுகளுக்குச் செல்லுங்கள்', 'பேனா ஏந்தும் கைகள் சுடுகலன் ஏந்தத் தயங்கா!', 'ஸ்ரீலங்கா இராணுவமே எமது தாயகத்தை விட்டு வெளியேறு!' என்ற சுலோக அட்டைகளை ஊர்வலத்தில் வந்திருந்தோர் தாங்கியிருந்தனர்.

பேரணிகள் மைதானத்தை வந்தடைந்ததும் பொங்கு தமிழ்ச் சுடரினை மாவீரன் வீரவேங்கை அன்சாரின் தந்தையார் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை வீரவேங்கை புலோவின் தந்தையாரான மரியாம்

(16ஆம் பக்கம் பார்க்க)

எழுதுமட்டுவாழில் பணிபுரிந்த

சிப்பாயைக் காணவில்லையென ஆணைக்குழுவில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம்,ஒக.16

எழுதுமட்டுவாழ் பகுதியில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவரைக் காணவில்லையெனத் தெரிவித்து, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கண்டி, தொலபில என்னும் இடத்தைச் சேர்ந்த டி.ரி.றணசிங்க (வயது 20) என்ற சிப்பாயே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

எழுதுமட்டுவாழில் நிலைகொண்டுள்ள 552 ஆவது பிரிகேட் படைமுகாமில் இருந்து கடந்த 8ஆம் திகதி மாலை ஆயுதத்துடன் வெளியில் சென்ற இவர், மீண்டும் முகாமிற்கு திரும்பவில்லை எனக் கூறப்படுகிறது.

சிப்பாயின் தந்தையான றணசிங்க யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

குறிப்பிட்ட சிப்பாய் இராணுவத்தில் இணைந்து ஒருவருடம் பூர்த்தியாகியுள்ளது என்றும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பாளர் குமான் சந்திரசேகரா மேற்கொண்டு வருகின்றார். (எ-7)

தலதா மாளிகைக் குண்டு வெடிப்பு

வழக்கில் மூவருக்கு மரணதண்டனை!

இரண்டாவது எதிரி மு.சீவராஜா நிரபராதி என்று விடுதலை

கண்டி,ஒக்ரோபர்16

கண்டி ஸ்ரீ தலதாமாளிகை மீதான குண்டுத் தாக்குதல் வழக்கில் மூன்று எதிரிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ஓர் எதிரி நிரபராதி என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இவ்வழக்கின் முதலாம், மூன்றாம், நான்காம் எதிரிகளுக்கே கண்டி மேல்நீதிமன்ற நீதிபதி நேற்று மரணதண்டனை விதித்தார். இண்டாம் எதிரியான முத்துலிங்கம் சீவராஜா விடுதலையானார். முதலாம் எதிரி சுப்பிரமணியம் ரவீந்திரன் இன்றியே இவ்வழக்கு விசாரணை நடைபெற்றது.

ஜனாதிபதி நிர்ணயிக்கும் ஒரு திகதியில் மூன்று எதிரிகளும் கண்டி, போகம்பரைச் சிறைச்சாலையில் தூக்கிலிடப்பட்டு மரணதண்டனை நிறைவேற்றப் படவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி டி.எல்.லேக்கம் வசம் இவ்வழக்கின் தீர்ப்பை நேற்று வழங்கினார்.

1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி தலதா மாளிகைக்கு அனாத்தம் உண்டுபண்ணியமை, சதி செய்தமை, 15 பேருக்கு மரணத்தை ஏற்படுத்தியமை, 19பேருக்கு காயங்களை உண்டுபண்ணியமை போன்ற 128 குற்றச்சாட்டுக்களில் பலவற்றுக்கு குறிப்பிட்ட மூன்று எதிரிகளும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர் என்று நீதிபதி அறிவித்தார்.

சுப்பிரமணியம் ரவீந்திரன் (திருகோணமலை - இவர் தலைமறைவாகியிருக்கிறார்), முத்துலிங்கம் சீவராஜா அல்லது மாஸ்ரர் (கரடியனாறு), முத்துசாமிப்பிள்ளை தர்மலிங்கம் (திருகோணமலை), கிருஷ்ணசாமி இராமசந்திரன் உடபோதனை) ஆகிய நால்வருமே இந்த வழக்கில் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் எதிரிகளாவர். ஜூரர்கள் இன்றி ட்ரயல் அட்பார்

(16ஆம் பக்கம் பார்க்க)

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹாவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கைலாகு கொடுத்து வரவேற்கின்றார்.

காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் உடனடியாக வேறு இடத்துக்கு மாற்றம்

திருக்கோவில் வைத்தியசாலை முகாம் அகற்றப்படும்

மட்டக்களப்பு,ஒக.16

அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படைமுகாம் உடனடியாக வேறு இடத்துக்கு இடம் மாற்றப்படவுள்ளது. திருக்கோவில் வைத்தியசாலையில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படை முகாமும் மிகவிரைவில் அகற்றப்படவுள்ளது.

இத்தீர்மானம் நேற்றுக் காலை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் விடுதலைப் புலிகளுக்கும் விசேட அதிரடிப்படையின ருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின்போது எடுக்கப்பட்டது என்று புலிகளின் அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் தகுபிலின்பன் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் படையினர் தரப்பில் பொலீஸ் அத்தியட்சகர் உபுல செனவிரத்ன தலைமையில் பொலீஸ்

(16ஆம் பக்கம் பார்க்க)

திருமலை எண்ணெய்க் குதங்களுக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்தா?

இல்லவே இல்லை என்கிறார் ஜஸ்வந் சின்ஹா!

கொழும்பு,ஒக.16

திருகோணமலையில் உள்ள இந்தியாவுக்குச் சொந்தமான எண்ணெய்க் குதங்களுக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து என்று இலங்கை ஜனாதிபதி உட்பட எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த அபாய அறிவிப்பை இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் அடியோடு மறுத்துவிட்டார்.

இந்திய நிலையங்களுக்கு எந்த வித அச்சுறுத்தலும் இல்லை. அவை பாதுகாப்பாக இருக்கின்றன. இனியும் அவ்வாறே தொடர்ந்தும் இருக்கும் என நான் நம்புகிறேன் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சின்ஹா நேற்றுக் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது :-

(16ஆம் பக்கம் பார்க்க)

அரியாலையில் நேற்றும் வீபத்து!

யாழ்ப்பாணம்,ஒக.16

அரியாலை மாம்பழம் சந்திப்பகுதியில், இராணுவ பிக்கப் ஒன்றும் மோட்டார் சைக்கிளும் நேற்று மாலை மோதிக்கொண்டன.

கண்டி வீதியூடாக யாழ்நகர் நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவப் பிக்கப் வாகனம் மாம்பழம் சந்திப் பகுதியில் ஒழுங்கை ஒன்றிலிருந்து பிரதான வீதிக்கு வரமுற்பட்ட மோட்டார் சைக்கிளை மோதியது.

எனினும், இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் சிறுகாயங்களுடன் தப்பிவிட்டார். உடனடியாக அப்பகுதியில் கலகம் அடக்கும் பொலீஸார் பலர் குவிக்கப்பட்டிருந்த போதிலும் எதுவித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை.(ஐ-129)

நெடுங்கேணியில் கிணற்றில் இருந்து 22ஷெல்கள் மீட்பு!

கிளிநொச்சி,ஒக.16

வவுனியா நெடுங்கேணி நாவலர் வதிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து 22ஷெல்கள் நேற்று மீட்கப்பட்டன.

வீட்டு உரிமையாளரால் கிணறு துப்புரவு செய்யப்பட்டபோதே இந்த ஷெல்கள் மீட்கப்பட்டன எனக் கூறப்பட்டது. (எ-12)

பேச்சுக்குத் திரும்புமாறு புலிகளை கோருகின்றார் கனேடிய அமைச்சர்

கொழும்பு,ஒக.16

சமாதான பேச்சுமேசைக்கு திரும்பும்படி புலிகளைக் கோருகின்றார் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹம்.

இலங்கையில மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் அவர் நேற்று மாலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றினார். அப்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கனடாவில் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்திருந்தாலும், இலங்கையில் புலிகள் இயக்கம் சமாதான முன்னெடுப்புக்களில் ஆர்வம் கொண்டிருப்பதை தாங்கள் பெரிதும் வரவேற்பதாக அவர் சொன்னார்.

இந்நாட்டின் இனப்பிரச்சினை கனேடிய சமூகத்தில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு லட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் கனடாவைத் தமது சொந்த நாடாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இரு நாடுகளுக்குமிடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. எனவே, இலங்கையில் நிரந்தர அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டும் என்பதில் கனடா அதிக அக்கறை கொண்டுள்ளது - என்றார் அவர்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் மேற்கொள்ளப்படும்

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

புதிய பொலீஸ்மா அதிபரை தெரிவு செய்வதில் சிக்கல்!

ஜனாதிபதியின் சிபார்சை அரசமைப்புச் சபை நிராகரிப்பு

கொழும்பு,ஒக்.16

வெற்றிடமாகவிருக்கும் பொலீஸ்மா அதிபர் பதவியை(ஐ.ஜி.பி.) நிரப்புவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அப்பதவிக்கு ஒரு சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபரான இந்திரா டி சில்வாவை நியமிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா செய்த சிபார்சை அரசமைப்புச் சபை நிராகரித்திருப்பதும் - இந்திரா டி சில்வாவின் சேவை மூப்பு சம்பந்தமான பிரச்சினை எழுத்திருப்பதுமே இச்சிக்கலைத் தோற்றுவித்திருக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது திருத்தத்தின்படி, அரசமைப்புச் சபையின் சிபார்சுக்கேற்ப ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்படவேண்டிய உயர் பதவிகளில் பொலீஸ்மா அதிபர் பதவியும் ஒன்றாகும்.

இவ்வாறான ஒரு பதவியில் வெற்றிடம் ஏற்படும்போது - அப்பதவிக்கான ஒருவரை சிபார்சு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தாலும் - ஜனாதிபதியின் சிபார்சை அரசமைப்புச் சபை அங்கீகரிக்காவிடின் குறிப்பிட்ட நபரை அப்பதவிக்கு நியமிக்க ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை.

பொலீஸ்மா அதிபர் பதவிக்கு இந்திரா டி சில்வாவை நியமிக்க ஜனாதிபதி செய்த சிபார்சை அரசமைப்புச் சபை கடந்த 13ஆம் திகதி கூடி ஆராய்து நிராகரித்திருக்கிறது. சேவை மூப்பு சம்பந்தமாக எழுந்த பிரச்சினையின் அடிப்படையிலேயே ஜனாதிபதியின் சிபார்சு நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் தலைமயில் கூடிய அரசமைப்புச் சபைக் கூட்டத்தில் பதவி வழி உறுப்பினர்களான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் சபையின் ஏனைய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

சேவைமூப்பில் சிரேஷ்ட பொலீஸ்மா அதிபர் பதவிக்கு நியமிப்பதே வழக்கமாகும்.

தற்பொழுது நான்கு சிரேஷ்ட பொலீஸ்மா அதிபர்கள் சேவையிலுள்ளனர். இந்திரா டி சில்வா, சந்திர பெர்ணான்டோ, காமினி ரன்தெனிய, ஜயதிஸ்ஸ ஹேரத் ஆகியோரே இந்நால்வருமாவர். இவர்களில் சேவை மூப்பு குறித்து அரசமைப்புச் சபை பொலீஸ் ஆணைக்குழுவிடம் விவரம் கோரியிருக்கிறது.

புதிய பொலீஸ்மா அதிபரை நியமிப்பதில் எழுந்திருக்கும் இச்சிக்கல் நிலை காரணமாக பொலீஸ்மா அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்ப இன்னும் கொஞ்சக்காலம் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

ஜனாதிபதி அறிவிப்பு இல்லை!

பொலீஸ்மா அதிபர் நியமனத்துக்கு ஜனாதிபதி செய்த சிபாரிசை அரசமைப்புச் சபை நிராகரித்தது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு இதுவரை ஜனாதிபதி செயலகத்துக்குக் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார். (எ)

பட்ஜெட் விவாதத்துக்கு முன்னரே நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதம்

அரசின் அரசியல் குழு கூடித் தீர்மானம்

கொழும்பு,ஒக்.16

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பொ.ஐ.முன்னணி கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரரேணையை வரவு - செலவுத் திட்ட விவாதத்துக்கு முன்னர் விவாதித்து முடிப்பதென அரசின் அரசியல் குழு தீர்மானித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் கூடி அரசின் அரசியல் குழு மேற்கொண்ட தீர்மானத்தின்படி இந்த நம்பிக்கையில்லாப் பிரரேணை மீதான விவாதம் நடைபெறும் திகதி, எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவிக்கப்படும்.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவருவதென பொ.ஐ.மு. நாடாளுமன்றக் குழு தீர்மானித்திருக்கிறது. ஆயினும், பிரதமர் ஐ.நா. பொதுச் சபையில் ஆற்றிய உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் மிகவிரைவில் நடத்தப்படவேண்டுமென்று ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழு கோரி வருகிறது.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் ஆகியவை சம்பந்தமாக எதிர்க்கட்சிகளிடையே காணப்படும் இந்தக் கருத்து மோதல்கள் காரணமாக அடுத்தவாரம் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டம் காரசாரமானதாக அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

மினிபஸ் சேவை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

சுன்னாகம் - சாவகச்சேரி இடையிலான 775ஆம் இலக்க பாதையில் இன்றுமுதல் மினிபஸ்கள் சேவையில் ஈடுபடும் என யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. (எ)

இணக்கம், சமாதானம், மத்தியஸ்தம் மூலம் பத்திரிகை ஆணைக்குழு தீர்வு காணும்

அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் தலைவர் உரை

கொழும்பு,ஒக்.16

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் அடிப்படை நோக்கம் சுதந்திரமான கடமைப்பாடுடைய பத்திரிகை செயல் திட்டங்களை இலங்கையில் நடைமுறைப்படுத்தவேண்டுமென்பதேயாகும் - என்று அந்த ஆணைக்குழுவின் தலைவரான சாம் விஜயசிங்க கூறினார்.

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவை நேற்றுக் காலை கொள்ளுப்பிட்டி, காமெல் வீதியிலுள்ள அலுவலகத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய சாம் விஜயசிங்க, இலங்கை பத்திரிகைகளில் வெளியாகும் விடயங்கள் தொடர்பாக முறைப்பாடுகளை ஆணைக்குழுவிடம் தெரிவிக்கலாம் எனவும் அவற்றை விசாரித்து தீர்வு முறைகளை செயற்படுத்த ஆணைக்குழு செயற்படும் எனவும், 11 உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழு சுயமான சொந்த நெறிமுறைக் கமைய நடைமுறையில் விசாரணை நடத்தும் எனவும், இணக்கம், சமாதானம், மத்தியஸ்தம் ஆகியவற்றின் மூலம் தீர்வினைக் காணும் எனவும் குறிப்பிட்டார். (எ)

கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் ச.முருகநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தவாரம் இடியுடன் கூடிய மழை பெய்யும்

யாழ்ப்பாணம்,ஒக்.16

இந்த வாரம் ஆங்காங்கே இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யவுள்ளதால் மக்கள் மின்பாவனைப் பொருள்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு திருநெல்வேலி வானிலை அவதானிப்பு நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் கடந்த திங்கட்கிழமை காலை 9மணி முதல் நேற்றுக் காலை 9மணி வரைக்கும் 8.2மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது.

இந்த மாதம் முதலாம் திகதி முதல் கடந்த செவ்வாய்க்கிழமை வரைக்கும் குடாநாட்டில் 149மில்லி மீற்றர் மழை பெய்துள்ளது. இந்த வருடம் மட்டும் 642.8 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளது. (ம-6)

கொடிதின நிகழ்வு நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

மக்கள் நலன்புரிச் சங்கமும், படையணிகளினதும் கொடிதின நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின. எதிர்வரும் 30ஆம் திகதி வரை கொடிதின நிகழ்வுகள் நடைபெறும்.

பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் சிரமதானப் பணிகள் இடம்பெற்று வருவதுடன், குடாநாட்டில் தற்பொழுது அதிகரித்து வருகின்ற வீதி விபத்துக்கள் தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு கருத்தரங்குகளும் வீதி ஒழுங்கு தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், வறுமைக்கோட்டுக்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான இலவசக் கணனிப் பயிற்சி நிலையம் கொக்குவிலில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன், மாணவர்களுக்கிடையில் ஓவியப் போட்டியும் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் மேலதிக ஆணையாளர் பி. சஞ்ஜித்குமார் அறிவித்துள்ளார்.(எ-10)

கலை, பண்பாட்டுக்கழக ஏற்பாட்டில்

கொழும்பில் இரு தினங்கள் மூவின கலைஞர்கள் மாநாடு

யாழ்ப்பாணம்,ஒக்.16

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், மூவின கலைஞர்கள் மற்றும் எழுத்தாளர்கள் சங்கமிக்கும் பேராளர் மாநாடு எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மற்றும் மலையகம் உட்பட இலங்கையின் சகல பகுதிகளையும் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்துதல் மற்றும் சமாதான முயற்சிகளுக்கு வலுச் சேர்த்தல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

வடக்குக்கும் தெற்குக்குமான ஓர் இணைப்புப் பாலமாக இம்மாநாடு அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள விருக்கின்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி இங்கிருந்து கொழும்புக்குப் புறப்படவிருக்கின்றனர்.

இவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளை கலைபண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பிரிவினர் செய்துள்ளனர்.

மாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கும் பேராளர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதிகள் மற்றும் உணவு வசதிகள் என்பனவும் செய்து கொடுக்கப்படும். (எ-4)

கொழும்பு வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சின்ஹா இந்தியத் தூதரகத்தில் வைத்து யாழ்.பல்கலைக்கழகத்துக்கு பஸ் ஒன்றையும் யாழ்.ஆஸ்பத்திரிக்கு நவீன ஸ்கானர் ஒன்றையும் முறையே நுணைவேந்தர் மற்றும் ஆஸ்பத்திரி பணிப்பாளர் ஆகியோரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

மாம்பழம் சந்தி விபத்துச் சம்பவம்:

சிகிச்சை பெற்ற இருவரும் நேற்று பிணையில் விடுதலை

அரியாலை, மாம்பழம் சந்திக்கு அருகில் கடந்த 11ஆம் திகதி இராணுவ வாகனமும், ஓட்டோவும் மோதிக் கொண்ட சம்பவத்தையடுத்து அங்கு ஏற்பட்ட களேபரம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டு காயம் காரணமாக யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவரையும் பிணையில் செல்ல யாழ்நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா நேற்று அனுமதித்தார்.

அவர்களை தலா 15 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்லவதற்கு அனுமதித்த நீதிவான் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் முன் சமுகமளித்துக் கையொப்பமிடவேண்டும் என்றும் நிபந்தனை விதித்த நீதிவான், ஒட்டுரவான நீதியை இவ்வழக்கில் நிலைநாட்ட இவ்வழக்கு விசாரணைக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் பணித்தார்.

அத்துடன், இவ்வழக்கு விசாரணைகளைப் பூரணப்படுத்தி சம்பந்தப்பட்டவர்களில் குற்றச்சாட்டு உள்ளவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை எதிர்வரும் 22ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறும் -

யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார். (எ-8)

வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு 10ஆம் திகதி முதல் மீண்டும் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

கடந்த செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப்பரீட்சைகள் பிரிவு மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

இதன் செயற்பாடுகள் கடந்த 10ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக் கழக பதில் பதிவாளர் திருமதி அ. சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

இதேவேளை, ஒத்திவைக்கப்பட்டுள்ள வெளிவாரிப் பரீட்சைகளை மீள நடத்துவது தொடர்பாக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு விரைவில் அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.(ம-9)

கலைவிழாவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,ஒக்.16

கனடாவில் உள்ள அனலைதீவு கலாசார ஒன்றியத்தின் அனுசரணையுடன அனலை அபிவிருத்தி இளைஞர் கழகம் நடத்தும் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று மாலை 6 மணிக்கு கழகத்தின் தலைவர் பேரூக நேசர் தலைமையில் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபாலும் சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், தீவகக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் செ. மெற்றாஸ்மயில், கலாசார ஒன்றியத்தின் உப செயலாளர் கு.சசிதரன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-10)

கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ்பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை சித்திரம் வடிவமைப்பும் அலகின் முதலாம், இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவர்களது மாணவர் அறையில் நடைபெறவுள்ளதாகவும் -

அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகந்தருமாறும் -

மாணவர் பிரதிநிதி கேட்டுள்ளார். (ம-9)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.16

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்தியில் உள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-150)

இஸ்ரேல் அமைத்துவரும் தடுப்புச்சுவர்:

அரபு நாடுகளின் மற்றொரு பிரேரணை அமெரிக்க வீட்டோவால் முறியடிப்பு!

பலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேல் அமைத்துவரும் தடுப்புச்சுவர் குறித்து அரபு நாடுகள் கொண்டுவந்த மற்றொரு பிரேரணையை அமெரிக்கா வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி ரத்துச்செய்துள்ளது.

மேற்படி தடுப்புச்சுவர் சர்வதேச சட்டங்களுக்கு முரணானது எனவே, நிர்மாணிப்புப் பணிகள் நிறுத்தப்படவேண்டும் என்று அந்தப் பிரேரணையில் கூறப்பட்டிருந்தது.

ஆனால், இஸ்ரேல் அமைத்துவரும் தடுப்புச்சுவர் அவசியமானது என்று கூறி அந்தப் பிரேரணையை வீட்டோ செய்வதாக அமெரிக்கத் தூதர் நீக்ரோபொன்ற அறிவித்தார்.

இதனால் அரபு நாடுகளுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே நிலவிவரும் பகையுணர்வு மேலும் அதிகரித்திருக்கிறது.

இஸ்ரேலின் அராஜகங்களை அமெரிக்கா கண்மூடிக்கொண்டு ஆதரிப்பதாக அரபு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

பலஸ்தீனத் தீவிரவாதிகளிடம் இருந்து யூதர்களையும், இஸ்ரேலையும் பாதுகாக்க மேற்குக்கரையில் அமைக்கப்படும் தடுப்புச் சுவர் மிக அவசியமானது என்று இஸ்ரேல் கூறிவருகிறது.

ஆனால், தமது நிலப்பரப்பை இஸ்ரேல் ஆக்கிரமித்து, தடுப்புச்சுவரை கட்டுகிறது என்று பலஸ்தீனர்கள் கூறுகின்றனர்.

இவ்விடயத்தில் இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்காவும், பலஸ்தீனத்துக்கு ஆதரவாக அரபு நாடுகளும் குரல் கொடுத்து வருகின்றன. அரபு நாடுகள் இவ்விடயத்தில் மேற்கொள்ள முனையும் எந்தவொரு முயற்சியும் அமெரிக்கா தனது வீட்டோவைப் பயன்படுத்தி தோற்கடிப்பது அரபு நாடுகளின் கண்டனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

மத்திய கிழக்கு - குறிப்பாக பலஸ்தீனம் விவகாரங்களில் கொண்டு வரப்படும் எந்தவொரு பிரேரணையும் பலஸ்தீன தீவிரவாதக் குழுக்களைக் கண்டிப்பதாக இருக்க வேண்டும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

ஆனால் அரபு நாடுகள் தீவிரவாதக் குழுக்கள் விடயத்தில் எதுவித கருத்தையும் தெரிவிக்க மறுத்து வருகின்றன.

பலஸ்தீனத்தில் முதன்முறையாக அமெரிக்கர்கள் மீது தாக்குதல்!

பலஸ்தீனப் பிரதேசத்தில் முதன் முறையாக அமெரிக்கர்களை இலக்கு வைத்து நேற்று தாக்குதல் நடத்தப்பட்டது.

காஸாவில் அமெரிக்க இராஜதந்திரிகளின் வாகனத்தொடரணி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர்; ஒருவர் காயமடைந்தார்.

காஸாவில் பெய்ட் கானூன் என்ற கிராமம் அருகே உள்ளூர் நேரப்படி நேற்று முற்பகல் 10 மணியளவில் இத்தாக்குதல் இடம்பெற்றது.

மத்திய கிழக்குக்கான அமெரிக்கத் தூதரின் அலுவலக அதிகாரிகள் மற்றும் சி.ஐ.ஏ. அதிகாரிகள் வாகனங்களில் சென்றுகொண்டிருந்ததாகவும் அப்போது வழியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு வெடித்ததில் தொடரணியில் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்று பலத்த சேதமடைந்ததாகவும் -

அந்த வாகனத்தில் பயணித்த கனிஷ்ட அமெரிக்க இராஜதந்திரியும் அவரது பாதுகாவலர்கள் இருவரும் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் காயமடைந்ததாகவும் இஸ்ரேலியத் தகவல்கள் தெரிவித்தன.

பலஸ்தீன தீவிரவாத இயக்கங்களான ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிகாத் ஆகியவை இத்தாக்குதலுக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று அறிவித்துள்ளன.

ஆயினும், இந்த இரு இயக்கங்களின் செல்வாக்கு மிக்க பகுதிகளில் இத்தாக்குதல் குறித்து சந்தோஷ கொண்டாட்டங்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பலஸ்தீனப் பிரச்சினையில் சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் கூறிக்கொண்டு தலையிட்ட அமெரிக்கா, இஸ்ரேலுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக அரபு நாடுகள் குற்றஞ்சாட்டும் வேளையில் பலஸ்தீனப் பிரதேசத்தில் முதன்முறையாக அமெரிக்கர்களை இலக்குவைத்து தாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

காஸாவில் அமெரிக்கர்கள் மீதான தாக்குதல் நடந்த இடம்

மனிதனை ஏற்றிய விண்கலத்தை சீனா நேற்று விண்ணில் ஏவியது!

மனிதனை ஏற்றிய தனது முதலாவது விண்கலத்தை சீனா நேற்று விண்ணில் ஏவியது. இதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யாவுக்கு அடுத்தபடியாக விண்கலத்தைச் சொந்தமாகத் தயாரித்து தனது நாட்டைச் சேர்ந்த விண்வெளி வீரரையே விண்ணுக்கு அனுப்பும் மூன்றாவது நாடு என்ற பெருமையை சீனா பெற்றிருக்கிறது.

'ஷென்ஷீ - 5' என்ற விண்கலமே விண்வெளி வீரருடன் செலுத்தப்பட்டது. கான்க மாகாணத்தின் வடமேற்குப் பகுதியில் உள்ள கோபி பாலைவனப் பகுதியில் இருந்து நேற்றுக் காலை இந்த விண்கலம் செலுத்தப்பட்டது.



சீன விண்கலம் புறப்படுகிறது.

ரஷ்யாவின் சோயுஸ் விண்கலத்தின் மாதிரியைப் போன்றே 'ஷென்ஷீ - 5' விண்கலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

யாங் லிவெய் (வயது-38) என்ற சீன விண்வெளி வீரரே 'ஷென்ஷீ-5' இல் அனுப்பப்பட்டிருக்கிறார். இவர் சீன இராணுவத்தில் அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

ஏவப்பட்ட பத்து நிமிடங்களில் 'ஷெனஷீ - 5' விண்கலம் பூமியைச் சுற்றத் தொடங்கியிருக்கிறது. 14 தடவைகள் இவ்வாறு சுற்றிய பின் - ஏவப்பட்டதில் இருந்து சுமார் 21 மணித்தியாலங்கள் கழித்து - விண்கலம் மீண்டும் பூமிக்குத்திரும்பும்.

விண்கலம் ஏவப்பட்ட பகுதியைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அப்பகுதியில் போக்குவரத்துத்தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், வாகனங்கள் எவையும் அத்துமீரி பிரவேசிக்க முடியாதபடி படையினர் வீதித்தடைகளையும் போட்டிருக்கின்றனர்.

விண்கலம் ஏவப்பட்ட நிகழ்வில் ஜனாதிபதி ஹூ ஜின்ரோவ் மற்றும் சில உயரதிகாரிகள் மட்டும் கலந்து கொண்டனர்.

'சீனா அனுப்பும் முதலாவது மனித விண்கலம் வெற்றியின் ஆரம்ப அறிகுறி' என்று அங்கு ஜனாதிபதி ஹூ ஜின்ரோவ் கூறினார்.

விண்கலத்தில் ஏறுவதற்கு முன் கருத்துப் பகிர்ந்துகொண்ட யாங் லீவெய், 'நான் மக்கள் விடுதலை இராணுவத்திற்கும், சீனாவுக்கும் பெருமை சேர்ப்பேன் இப்பயணம் நன்றாக இருக்கிறது. இன்று புறப்படுகிறேன் நாளை உங்களை மீண்டும் சந்திப்பேன்' என்று கூறினார்.

விண்கலம் ஏவப்பட்ட காட்சியைப் பார்ப்பதற்கு மக்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆனாலும், அவர்கள் பாலைவனப் பகுதிகளுக்குச் சென்று விண்கலம் மேலெழுந்ததைக் கண்டு களித்தனர்.

விண்கலம் ஏவப்பட்ட காட்சியை அரச தொலைக்காட்சி உடனடியாக ஒளிபரப்பவில்லை. எனினும், விரைவில் அது ஒளிபரப்பப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

சீன விண்வெளி வீரர் யாங் லீவெய்

இதனிடையே -

விண்வெளி வீரர் என்பதற்குச்சரியான சொல்லை உருவாக்குவதில் சீனா குழம்பியிருக்கிறது. அமெரிக்கா தனது விண்வெளி வீரரை 'நட்சத்திரப்பயணி' என்றும் ரஷ்யா தமது விண்வெளி வீரரை 'விண்வெளிப்பயணி' என்றும் அழைக்கின்றன.

இவ்விரு சொற்களையும் தவிர்த்து புதியதொரு சொல்லை உருவாக்கலாமா? என்பது குறித்தே சீனா தீவிரமாக ஆராய்ந்து வருகிறது.

உகண்டாவில் 22 பேர் ஒரே நாளில் சுட்டுக்கொலை!

அபாலாஸ்.ஒக்.16

உகண்டாவில் 22 பேர் நேற்று முன்தினம் கண்மூடித்தனமாக சுட்டுக் கொல்லப்பட்டனர்; 17 பேர் சுட்டுக் காயங்களுக்கு இலக்காகினர்.

எல்.ஆர்.ஏ.கிளர்ச்சிவாதிகளே இத்தாக்குதலை நடத்தினர். உணவகம் ஒன்றிற்குள் புகுந்த இவர்கள் அங்கிருந்தவர்களை சுட்டுத்தள்ளினர். பின்பு அருகில் இருந்து மதுபான நிலையத்தினுள் சென்று அங்கு ரகளையில் ஈடுபட்டபின் அங்கிருந்தவர்கள் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

சுமார் 15 பேர் கொண்ட குழுவே இக்கொடூரத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச்சென்றிருக்கிறது. 1986 ஆம் ஆண்டு ஜனாதிபதி யோவேரி முசெவெனி ஆட்சிக்கு வந்தபின் அங்கு எல்.ஆர்.ஏ.கிளர்ச்சியாளர்கள் சண்டை புரிந்து வருகின்றனர். சண்டையில் இதுவரை பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர்.

கிளர்ச்சியாளர்களை அடக்க அரசபடையினர் அண்மைக்காலமாக கடும் தேடுதல்களை நடத்தி வருகின்றனர். இதனால், இரு தரப்புக்குமிடையே அடிக்கடி சண்டை மூளுகிறது.

கடந்த திங்கட்கிழமை நடந்த சண்டையில் 17 கிளர்ச்சியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதற்குப் பழிவாங்கவே மேற்படி தாக்குல் நடத்தப்பட்டிருக்கின்றது என்று அரச படை அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஹிட்லர் உடலை எரித்தவர் மாரடைப்பினால் மரணம்;

இரண்டாம் உலகப்போருக்குக் காரணமான ஜேர்மனிய சர்வாதிகாரி ஹிட்லரின் உடலை எரித்த உதவியாளர் ஆட்டோ குயன்சே மாரடைப்பால் மரணமானார்.

இரண்டாம் உலகப்போருக்குக் காரணமானவர் கிட்லர். இவரை நிழல் போல் தொடர்ந்த நெருங்கிய உதவியாளர்கள் வரிசையில் முக்கிய இடம் வகித்தவர் ஆட்டோ குயன்சே (வயது86). இரண்டாம் உலகப்போர் நடந்தபோது - 1944 இல் ஜூலையில் ஹிட்லரை கொல்ல முயற்சி நடந்தது. அதில் ஹிட்லர் தப்பினார். அப்போது ஹிட்லருடன் இருந்தவர் குயன்சே.

பின்னர் ஹிட்லரும் அவரது காதலியும் தற்கொலை செய்து கொண்டனர். தற்கொலைக்கு முன் ஹிட்லர் தனது உதவியாளர் குயன்சேயிக்கு உத்தரவொன்றைப் பிறப்பித்தார். அதில் தான் இறந்த பின்பு தனது உடலை நீ எரித்து விடவேண்டும் என்று அவருக்கு ஹிட்லர் உத்தரவிட்டிருந்தார். அந்த உத்தரவை குயன்சே நிறைவேற்றினார்.

அதன் பிறகு ரஷ்யப் படையினர் அவரைக்கைது செய்தனர். பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவரை விடுதலை செய்தனர். இத்தனை ஆண்டுகளும் அவர் மேற்கு ஜேர்மனியில் வாழ்ந்து வந்தார். தற்போது குயன்சே மாரடைப்பால் மரணமானார் என்று அவரது மகள் கூறியிருக்கிறார்.

ஈராக்கில் குண்டுவெடிப்பு!

பக்தாதிலுள்ள துருக்கி தூதரகம் அருகே நேற்றுமுன்தினம் கார்க் குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

இதில் ஒருவர் பலியானார்; தூதரக ஊழியர்கள் இருவர் காயமடைந்தனர். துருக்கி தூதரகம் அமைந்துள்ள பகுதியில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் கார் வெடித்துச் சிதறியது. காரை செலுத்தி வந்தசாரதி அந்த இடத்திலேயே பலியானார். குறித்த இலக்கை அடையும் முன்னரே கார் வெடித்துச் சிதறியதாக ஈராக்கியர்கள் கருகின்றனர்.

கோலாலம்பூரில் தமிழ்த்திரைப்பட விழா

சிறந்த நடிகர், நடிகைக்கான விருது விக்ரமுக்கும், சிம்ரனுக்கும் கிடைத்தது

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானும் அங்கு பிரசன்னம்

மலேஷியாவில் நடைபெற்ற சர்வதேச தமிழ்த் திரைப்பட விருது வழங்கும் விழாவில் சிறந்த நடிகர் விக்ரமும், சிறந்த நடிகையாக சிம்ரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிம்ரன்

இந்த விழாவில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும் கலந்துகொண்டார். சிறந்த நடிகருக்கான விருதை அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் விக்ரமுக்கு வழங்கினார். சிறந்தநடிகைக்கான விருதை தென்னாபிரிக்க நடிகர் ஒருவர் சிம்ரனுக்கு வழங்கினார்.

தலைநகர் கோலாலம்பூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விருது வழங்கும் விழா நடைபெற்றது. உலகம் முழுவதும் உள்ள தமிழர்களிடம் இன்ரநெட்மூலம் பெற்ற கருத்துக்கணிப்புக்களின் அடிப்படையிலேயே விக்ரமுக்கும், சிம்ரனுக்கும் மேற்படி விருதுகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் தமிழ்த் திரைப்பட பிரபலங்கள் பலர் கலந்து சிறப்பித்தனர். திப்புவும், சாவினியும் இணைந்து நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்.

புதுமுக நடிகராக ஸ்ரீகாந், புதுமுக நடிகையாக திரிஷா, நகைச்சுவை நடிகராக விவேக், நகைச்சுவை நடிகையாக கோவை சரளா, குணச்சித்திர நடிகராக பிரகாஷ்ராஜ், குணச்சித்திர நடிகையாக தேவயாணி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் கலந்துகொண்ட நடிகை ரோஜா, கணவர் செல்வமணி, தங்கள் குழந்தையுடன் வந்திருந்தனர். நடிகை குஷ்பு தனது இரண்டு குழந்தைகளுடன் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

நடிகை சிம்ரன் தனது காதலர் தீபக்குடன் வந்திருந்தார். அங்கு மன்மதராசா பாடலுக்கு கவர்ச்சி நடிகை



விக்ரம்

அல்போன்சா குழுவினர் நடனம் ஆடினர். மலேஷிய ரசிகர்கள் இந்த நடனத்தை பெரும் ஆரவாரத்துடன் ரசித்தனர்.

சிம்ரன், விக்ரமிற்கு அடுத்தபடியாக நகைச்சுவை நடிகர் விவேக்கிற்கு மலேஷிய ரசிகர்கள் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்புக்கொடுத்தனர்.

எமுது வினைஞர் தேவை

க.பொ.த. (உ/த) சித்தியடைந்த பெண்கள் 21.10.2003 ஆம் திகதியில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு நேரில் சமுகம்தரவும். கணனிப் பிரயோக அறிவு மேலதிக தகைமையாகும். வயதெல்லை: 25 - 40

யூரோவில், 866,பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(23696)(12-13)

பாடசாலை மலகூடக்குழிக்குள் வெடிக்காத ஷெல்கள் மீட்பு!

தென்மராட்சி,ஒக்.16

சாவகச்சேரி மகளிர் கல்லூரி வளாகத்தில் உள்ள மலகூடக்குழிக்குள் வெடிக்காத நிலையில் பெருந்தொகையான ஷெல்களும் கிரனேட்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் மலகூடக்குழியை துப்புரவு செய்தபோதே இந்த ஷெல்களும், கிரனேட்டுக்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்து தொழிலாளர்களால் அவை வெளியே எடுக்கப்பட்டன.

இச்சம்பவம் படையினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து படையினர் அவற்றை மீட்டுச் சென்றனர்.

2000ஆம் ஆண்டு சாவகச்சேரி நகரில் மோதல் இடம்பெற்றபோது படையினரின் ஷெல்தளம் இக்கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இக்கல்லூரி மைதானத்தை அண்டியுள்ள மலகூடம் சேதமடைந்திருந்தால் பாவனையின்றி இருந்ததாகவும் - அதனைப் புனரமைப்பதற்காக மலசலகூடக்குழி துப்புரவு செய்யப்பட்டபோதே குண்டுகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.(ஒ-117)

படை அதிகாரிகள் குழு தனங்கிளப்பு விஜயம்

தென்மராட்சி,ஒக்.16

இராணுவ உயர் அதிகாரிகள் குழு ஒன்று நேற்றுக் காலை 10.30 மணிக்கு தனங்கிளப்புப் பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டது.

பலாலியிலிருந்து ஹெலிகொப்டரில சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய அதிகாரிகள் குழு படை வாகனங்கள் மூலம் தனங்கிளப்புப் பகுதிக்குச் சென்றனர்.

தனங்கிளப்பு, மறவன்புலோ ஆகிய பகுதி விவசாயிகள் மேற்கொள்ளவுள்ள காலபோக நெற்செய்கை தொடர்பாக ஆராயவே இக்குழு வந்திருந்ததாக நம்பப்படுகிறது.(ஒ-117)

நிலவு . COM இன்

தமிழ் கணினி 2003

மாபெரும் கணினிக் கண்காட்சி

- 50 இற்கு மேற்பட்ட தமிழ் மென்பொருள்கள் மற்றும் குறுவட்டுக்கள் (CDS)
- 35 இற்கும் மேற்பட்ட கணினிக் கல்விக்கான தமிழ்மொழிமூல புத்தகங்கள்

கலந்துரையாடலும் விநாடிவினாவும்

▲காலம்: ஒக்ரோபர் 27 முதல் நவம்பர் 2 வரை

காலை 9 .00 மணிமுதல் மாலை 7.00 மணிவரை

▲இடம்: யாழ். பல்கலைக்கழகம்

அனுசரணை

IT Island | கம்ப்யூட்டர் Info | NIIT

ஊடக அனுசரணை : உதயன்

(சி-30822)(12)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர்

A.T.பொன்னுத்துரை

அவர்களின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(23704) (25-16-18)

ஆத்மசாந்திப் பிரார்த்தனை

எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியை

திருமதி மேரிஞானரோஸ் ஜெயரத்தினம்

அவர்களின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(23703) (25-16-18)

அறிவித்தல்

எமது ஸ்தாபனத்தில் மேற்பார்வையாளராகக்கடமையாற்றி வந்தவரான திரு.சு.கதிர்காமதேவன் 14.10.2003 ஆம் திகதி முதலாக கடமையினின்றும் விலகிக்கொண்டுள்ளார். ஆகவே, அவருக்கும் எமது ஸ்தாபனத்துக்கும் இனிமேல் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம். இனிமேல் அவரோடு மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர்.

பொது முகாமையாளர்,
கிளீன் வெல்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

- நிர்வாகம்.

(23698) (25-12-13)

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம்	517
திகதி	14.10.2003

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல. 4261190-4277450

வெற்றி இலக்கங்கள் **20 23 47 49**

லக்கினம் சிங்கம்

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,811,000/-

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் தொகை	பரிசுத் தொகை(ரூ.)	மொத்தப் பரிசுத் தொகை(ரூ.)
1 இல	363,415	10	3,634,150
2 இலக்கங்கள்	33,310	20	666,200
1 இல + லக்கினம்	32,810	30	984,300
2 இல + லக்கினம்	3,042	100	304,200
3 இலக்கங்கள்	883	500	441,500
3 இல + லக்கினம்	87	5,000	435,000
4 இலக்கங்கள்	05	100,000	500,000
4 இல + லக்கினம்	-	1,000,000	-
மொத்தம்	433,552	-	6,965,350

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,965,350/-

தொடர் இல. 5255403க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஒக்டோபர் 17ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4263391-4-24
4272044-6-23
4277194-1-25
4274886-6-73
4277358-2-55

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

(சி-30824)(12)

11 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை

மலர்வு 01 ‿ 05 ‿ 1979

உதிர்வு 06 ‿ 10 ‿ 2003

அமரர் கந்தசாமி ஸ்ரீகரன்

அன்புக்கு ஓர் உறைவிடமாய் அறிவுக்கு ஆசானாய்
கூடுவிட்டு எரிந்தாய்! கயவர்கள் கொடுமையாம்
அனலாக மாறிவிட்டாய்! அண்ணா உன் உடலைத்தான்
அழித்தார்கள்; உயிரையல்ல! என்செய்வோம் யாம்!

வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஸ்ரீகரன் அவர்கள் 06.10.2003 திங்கட்கிழமை சாவகச்சேரியில் அகாலமரணமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.10.2003 புதன்கிழமை வரணியில் நடைபெற்றன.

அன்னார் கந்தசாமி (ராசன்), பத்மாவதியின் மூத்த புதல்வனும் வனஜாவின் அன்புக் கணவரும் சஜிந்திகா, கேதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிவகரன்(லண்டன்), தயாபரன்(சுதன்), கார்த்திகா, நீலாம்பிகா, பாமிலா, சஜிகரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் வள்ளியம்மா காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் சின்னம்மா ஆகியோரின் பேரனாருமாவார்.

தகவல்:
வே.கந்தசாமி (தந்தை)

இயற்றாலை,
வரணி.

(23700) (25-12-13)

உதயன்

தலை(மை)யின்றி இயங்கும் நாட்டின் பொலீஸ் சேவை

பொலீஸ் மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவுக்கு எதிர்பாராத விதமாக சேவை நீடிப்பு மறுக்கப்பட்டதை அடுத்து பொலீஸ்துறை நிர்வாகம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. தலைவர் இல்லாத நிலையில் - தலை இல்லாத நிலையில் - நாட்டின் பொலீஸ் துறை இயங்கிக் கொண்டிருக்கின்றது.

பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜாவின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கும்படி ஐக்கிய தேசிய முன்னணி அரசு அழுத்தமாக சிபாரிசு செய்த போதும் அந்த சேவை நீடிப்பை வழங்க ஜனாதிபதி மறுத்துவிட்டார். இதனால், அந்தப் பதவியிலிருந்து வெளியேற வேண்டியவரானார் ஆனந்தராஜா.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக சேவை நீடிப்பை வழங்கிய ஜனாதிபதி -

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரிக்கு ஒரேயடியாக மூன்று வருட கால சேவை நீடிப்பை அள்ளி வழங்கிய ஜனாதிபதி -

பொலீஸ் மா அதிபர் ஆனந்தராஜாவின் பதவிக் காலத்தைத்தான் ஒரு வருடம் கூட நீடிக்க முடியாது எனக் கூறி மறுத்திருக்கின்றார்.

அப்படி மறுப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. அதற்கான காரணங்களும் அவருக்கு இருக்கலாம்.

ஆனால், ஆனந்தராஜா தமிழர் என்ற காரணத்தாலேயே அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்படவில்லை என்பதே பொதுவான அபிப்பிராயமாகும்.

நாட்டில் உயர் பதவிகளில் இருக்கும் தமிழர்களுக்கு எதிராக நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும் போக்கு தற்போது தீவிரமடைந்து வருகின்றது. சிங்களப் பேரினவாதிகள் திட்டமிட்ட முறையில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களின் பிரசாரத்துக்கு ஜனாதிபதி குமாரதுங்க எடுபட்டுவிட்டார் என்பதை ஆனந்தராஜாவுக்கு சேவை நீடிப்பு மறுக்கப்பட்டமை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றது.

இப்போது நாட்டின் பொலீஸ் சேவையே, நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது. நாட்டின் பொலீஸ் துறைக்கு தலைவர் இல்லாத நிலைமை, பொலீஸ் மா அதிபரின் பணிகளைக் கவனிக்கும்படி உள்துறை அமைச்சின் செயலாளர் கேட்கப்பட்டுள்ளார். ஆனால், அவ்வாறு அவர் பணியாற்றுவது சட்ட ரீதியானதா என்பதில் சந்தேகம் உள்ளது.

புதிய பொலீஸ்மா அதிபராக தற்போதைய சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் இந்திரா டி சில்வாவை நியமிக்கும்படி ஜனாதிபதி குமாரதுங்க அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு சிபாரிசு செய்திருக்கின்றார். ஆனால், இந்த சிபாரிசை ஏற்க மறுத்து நிராகரித்திருக்கிறது அரசமைப்புக் கவுன்ஸில்.

இப்பதவிக்கு இந்திரா டி சில்வாவை நியமிப்பதற்கு இருக்கக் கூடிய காரணங்களைத் தெரிவிக்குமாறு ஜனாதிபதியைக் கேட்டிருக்கின்றது கவுன்ஸில்.

ரி.ஈ.ஆனந்தராஜா ஓய்வுபெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே அவரது பதவிக்காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்திருந்தது அரசு.

ஆனால், அதற்கு உரிய பதில் தராமல் இழுத்தடித்த ஜனாதிபதி, கடைசி நேரத்தில் அவருக்கு சேவை நீடிப்புத் தராமலேயே, புதிய பொலீஸ் மா அதிபராக இந்திரா டி சில்வாவின் பெயரைக் குறிப்பிட்டு அதனை அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு அறிவித்து விட்டு சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டார்.

ஓய்வுபெற்றுள்ள ஆனந்தராஜா முன்னர் சேவையிலிருந்த சமயம் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்த காலங்களில் பதில் பொலீஸ் மா அதிபராக இரண்டு தடவைகள் சிரேஷ்ட பிரதிப் பொலீஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ நியமிக்கப்பட்டிருந்தார்.

அவர் இருக்கத்தக்கதாக வேறு ஒருவரின் பெயரை பொலீஸ்மா அதிபர் பதவிக்குப் புதிதாக ஜனாதிபதி பிரேரித்திருப்பதை அரசமைப்புக் கவுன்ஸில் ஏற்கவில்லை என்று கூறப்படுகிறது.

இவ்விவகாரத்தால் ஜனாதிபதிக்கும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் இடையில் ஏற்படக் கூடிய இழுபறி சில காலத்துக்கு நீடிக்கக் கூடும் என நோக்கர்கள் கருத்து வெளியிடுகின்றனர்.

அப்படியானால் நாட்டின் பொலீஸ் சேவை தலையின்றி சில காலத்துக்கு இயங்க வேண்டிய இக்கட்டுக்குத் தள்ளப்படும்.

நாட்டின் அமைதி நிலை பேணப்படுவதற்குக் குந்தகமான போக்கு நாட்டின் தலைமையிடமிருந்தே தொடர்ந்து வெளிப்பட்டுக்கொண்டிருப்பது நாட்டுக்கு கிடைத்த துரதிஷ்டமேயன்றி வேறில்லை.

காலத்தின் பதிவு



மகாதான ஒளிக்கீற்று. படம் : தீபன்

வன்முறை அற்ற நிலையை உருவாக்க குடாநாட்டில் சர்வதேச அமைதிப்படை!

யாழ்ப்பாணம்,ஒக.16

குடாநாட்டில் வன்முறைகளற்ற நிலையை உருவாக்க அமைதிப் படை ஒன்று இங்கு செயற்படவுள்ளது.

சர்வதேச நாடுகளைச் சேர்ந்தவர்கள் இணைந்து அமைத்துள்ள "நொன் வயலன்ஸ் பீஸ் போய்' என்ற இந்த அமைப்பு யாழ்ப்பாணத்தில் அலுவலகம் ஒன்றைத் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த அமைப்பின் திட்டப் பணிப்பாளர் வில்லியம் நொக்ஸ் (பிரிட்டனைச் சேர்ந்தவர்) இது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்க யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியைச் சந்தித்து குடாநாட்டு நிலைமை குறித்து விரிவாக ஆராய்ந்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமை மக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் உள்ள நிலைமைகள் என்பன உட்பட பல விடயங்களை இளம்பரிதி எடுத்துக்கூறினார்.

சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 11 உறுப்பினர்களுடன் கொழும்பில் இயங்கும் இந்த அமைப்பு தனது அலுவலகங்களை யாழ்ப்பாணம், வாழைச்சேனை, களுத்துறை, மூதூர் ஆகிய இடங்களில் அமைக்கவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் அமையவிருக்கும் அலுவலகத்தில் கொரியாவைச் சேர்ந்த சாள்ஸ் என்பவரும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த சுசன் அம்மையாரும் பணிபுரியவிருக்கின்றனர்.(ம-3)

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதால் அரியாலையில் விவசாயம் அதிகரிப்பு

வலி.வடக்கு,ஒக.16

அரியாலை மத்தி, வடக்கு கிராம அலுவலர் பிரிவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து இம்முறை நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகள் அதிகரித்துள்ளன.

1995ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வைத் தொடர்ந்து இவ்வயல் நிலங்களில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டமையால் நெற்செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்பட்டது.

கடந்த சில மாதங்களாக 'ஹலோரஸ்ட்' மிதிவெடி அகற்றும் குழுவினர் இப்பகுதியில் உள்ள மிதிவெடிகள் மற்றும் கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுவந்தனர்.

கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலாளர் மற்றும் அரச அதிபருக்கு இப்பகுதியில் இருந்த கண்ணிவெடிகள் மற்றும் மிதிவெடிகள் அகற்றப்பட்டுவிட்டதாக 'ஹலோரஸ்ட்' கண்ணிவெடி அகற்றும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இப்பகுதியில் நெற்செய்கைக்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி கிராம அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ-86)

கசிப்பு விற்பனையில் புதிய உத்திகள் அறிமுகம்

வலி.வடக்கு,ஒக.16

வலி.வடக்கு, வலி.தெற்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துக் காணப்படுவதாகவும், புதிய யுத்திகளைக் கையாண்டு இப்பகுதிகளில் இருந்து வேறு இடங்களுக்கு கசிப்பு எடுத்துச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அளவெட்டி, மல்லாகம் பகுதிகளில் இருந்து கசிப்பு பரல்களைப் பெரிய அளவிலான காட்போட் பெட்டிகளினுள் வைத்து வேறு ஏதோ பொருள்களைக் கொண்டு செல்வதைப் போன்று கடத்திச் செல்லப்படுவதாக அப்பகுதிப் பொதுமக்கள் கூறுகின்றனர்.

பைக்கற்றுகளில் அடைக்கப்பட்ட பானங்கள் போன்று பொலித்தீன் பைகளில் குறிப்பிட்ட அளவுகளில் பொதி செய்யப்பட்ட கசிப்பு இணுவில் பகுதியில் விற்பனை செய்யப்படுகின்றது. அளவுக்கேற்ப பைக்கற்றுகளின் விலைகள் மாறுபடும்.

இதேநேரம், கசிப்பு உற்பத்தியாளர்களின் புதிய முறைகளைக் கண்பிடித்துள்ள சுன்னாகம் பொலீஸார் இத்தகைய முறையில் கசிப்பு கடத்தியவர்கள் மற்றும் பைக்கற்றுகளில் அதனை அடைத்து விற்றவர்கள் எனப் பலரையும் கைதுசெய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-86)

நாளை

புரட்டாதி 30
வெள்ளிக்கிழமை
(17.10.2003)
திதி : ஸப்தமி
பின்னிரவு 1.33 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பிற்பகல்: 06.19 வரை.
சுபநேரம்: 6.02 - 7.32
ராகுகாலம்: 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

உதயவாக்கு

இன்பமும், துன்பமும் எவனிடம் ஏற்கனவே அபரிமிதமாக இருக்கின்றனவோ அவனை நாடிச் செல்லுகின்றன.

சைக்கிளில் வந்த முதியவரை மோதிவிட்டு தப்பிய ஓட்டோக்கள்

தென்மராட்சி,ஒக.16

அருகருகே வேகமாக வந்த ஓட்டோக்கள், சைக்கிளில் வந்தவரை மோதிவிட்டுத் தப்பியோடிய சம்பவம் கடந்த திங்களன்று நுணாவில் 190 ஆம் கட்டையடியில் இடம்பெற்றது.

காயமடைந்த நிலையில் வீதியில் காணப்பட்ட அந்த நபரை அவ்வழியாக வந்த கிளிநொச்சி வைத்தியசாலை அம்புலன்ஸில் வந்தவர்கள் ஏற்றிவந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

புங்குடுதீவு எட்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த நல்லதம்பி சோமாலை (வயது 60) என்ற அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டதால் மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ம-117)

அரியாலையில் சில தினங்களாக இராணுவ ரோந்து அதிகரிப்பு

வலி.வடக்கு,ஒக.16

அரியாலைப் பகுதியில் கடந்த சில நாள்களாக இராணுவ ரோந்து திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 11 ஆம் திகதி அரியாலை, மாம்பழம்சந்தியில் ஏற்பட்ட இராணுவ கவச வண்டி - ஓட்டோ விபத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இராணுவ ரோந்து மீண்டும் அரியாலைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பகல் நேரங்களில் பிரதான வீதிகளில் ரோந்து செல்லும் படையினர் இரவு நேரங்களில் குடிமனைகளுக்குள் உள்ள வீதிகளிலும் ரோந்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இப்பகுதியில் உள்ளவர்கள் இரவு 9 மணிக்குப் பின்னர் வீடுகளுக்கு வெளியில் நடமாடுவதைத் தவிர்த்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-86)

ஓட்டோ சாரதிகள் நேற்றுமுன்தினம் அடையாள சேவை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக.16

அரியாலை, மாம்பழம்சந்திப் பகுதியில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ பவள் கவசவாகன - ஓட்டோ விபத்தானது ஓட்டோ சாரதிக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாததால் ஏற்பட்டது என்ற சாரப்பட பொலீஸார் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதனைக் கண்டித்தும் நேற்றுமுன்தினம் ஓட்டோச்சாரதிகள் ஒருநாள் அடையாள சேவை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இச்சேவை நிறுத்தத்தையடுத்து யாழ். நகரப்பகுதியில் நேற்றுமுன்தினம் வாடகைக்கு ஓட்டோக்கள் எவையும் காணப்படவில்லை. அத்தரிப்பிடங்களில் வேறு வாகனங்கள் தரித்திருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது.

நேற்றுமுன்தினம் முழுநாளும் இச்சேவைநிறுத்தம் நடைபெற்றது. (ம-15)

யாழ். மாவட்ட அஞ்சல் சேவை மேலும் தரமுயர்த்தப்படவேண்டும்

முன்னாள் அஞ்சல் அதிபர் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ். மாவட்ட அஞ்சல் சேவை மேலும் தரமுயர்த்தப்படல் வேண்டும் என்று யாழ். மாவட்ட முன்னாள் அஞ்சல் அதிபர் வி.வீரசிங்கம் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ். அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெற்ற சர்வதேச அஞ்சல் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேசரீதியில் மிகமுக்கிய ஒரு சேவையாகத் திகழ்வது அஞ்சல் சேவை. இச்சேவைக்கு நிகரான சேவை எதுவும் இல்லை. இன்றைய நவீனமயமான உலகிலும் அஞ்சல் சேவை திறம்படச் செயற்படுகின்றது. நவீனமயமாக கலில் இன்னும் பல புதுமைகளையும் அஞ்சல் சேவை உள்ளீர்க்கவேண்டும்.

யாழ்ப்பாணத்தின் அஞ்சல் சேவையும் நவீனத்துவத்தை உள்ளீர்த்துக் கொண்டு உயரவேண்டும் நான் அஞ்சல் அதிபராக கடமையாற்றியபோது கடிதப் போக்குவரத்துக்கே பெரும் சிரமங்கள், தடைகள் இருந்தன. தற்போது அந்த நிலையாறி ஒரு சுமுக நிலை வருகின்றது. இந்த நிலையில் எமது பிரதேச அஞ்சல் சேவையிலும் புதுமை புகுத்தப்படல் வேண்டும் - என்றார்.

அங்கு உரையாற்றிய யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தனது உரையில் தெரிவித்ததாவது:-

எமக்கு முன் அஞ்சல் சேவையில ஈடுபட்டவர்களின் அயராத உழைப்பினாலேயே அஞ்சல் சேவை இந்த அளவுக்கு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதனை நினைவில்கொண்டே இன்றைய விழாவுக்கு முன்னாள் அஞ்சல் சேவையாளர்களை அதிகமாக அழைத்துள்ளேன்.

இந்த அஞ்சல் சேவையில் பல நவீன வசதிகளைப் புகுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

சர்வதேச அஞ்சல் தினப் போட்டிகளில் யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்கள் ஆர்வமாகக் கலந்துகொண்டு அகில இலங்கை ரீதியிலும் பரிசில்களை வெல்லவேண்டும் - என்றார்.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

உலகில் மகத்தான சேவையாகவும், அழியாத சேவையாகவும் அஞ்சல் சேவை உள்ளது. அஞ்சல் சேவை இன்றி உலகில் எந்தவொரு நிறுவனமும் செயற்படமுடியாது - என்றார். (ம-12)

ரயில் நிலைய பகுதிகளில் கண்ணியகற்றும் பணி

கொழும்புத்துறை,ஒக்.16

இராசாவின்தோட்டப் பகுதியில் யாழ். ரயில் நிலையவளவில் உள்ள கண்ணிவெடிகள் மற்றும் வெடி பொருள்களை மீட்கும் பணிகளில் நேற்றுமுன்தினம் முதல் 'ஹலோ ட்ரஸ்ட்' கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

கனரக கண்ணிவெடி மீட்பு வாகனங்களின் உதவியுடன் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராசாவின்தோட்ட வீதியுடான போக்குவரத்துக்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக யாழ். ரயில் நிலையப் பகுதி வெடி பொருள்களின் அச்சுறுத்தல்களால் மக்கள் நடமாட்டமின்றி பெரும் பற்றைக்காடாக மாறி இருக்கின்றது. (ம-30)

சின்னஞ்சிறு விளம்பரம்

வீடு விற்பனைக்கு

27/17, புங்கன்குளம் வீதியில் நல்ல சூழலில் 3 பரப்புக் காணியில் அமைந்த மேல்மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (ஆறு அறைகள்) பாசையூர் அந்தோனியார் கோயிலுக்கு அருகில். தொடர்பு: T.P. 0777 570279 0777 305533. (23656)

விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பியாச்சோ டீசல் ஆட்டோ விற்பனைக்குண்டு. தொடர்பு: A.H.M. அக்ரம், 67/42, சீனிவாசகம் றோட், கொட்டடி, யாழ்ப்பாணம். T.P. 222 - 2916. (23682)

விற்பனைக்கு

இசுசு எல்வ் (ELF) (1 கியூப்) வெள்ளைநிறம். P.உதயகுமார் (உதயன்) பலாலி றோட், கோண்டாவில். (23689) 021-222-5092 (21-15-19)

திக்திக்கும் தீபாவளியை முன்னிட்டு.....!

உங்களுக்குத் தேவையான அனைத்து ஜவுளி, ஆடை, சாறி வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்

0777 311486

10, மின்சார நிலைய வீதி, பெரிய கடை, யாழ்ப்பாணம். (மலாயன் கபே முன்)

3000/= நோவுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு சிறுவர்களுக்கான ஸ்கூல்பாக் இலவசமாக வழங்கப்படும். (21-15-19) (C/30690)

கேள்வி அறிவித்தல்

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

கமநல அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

வேலை விவரம்	ஆகக்குறைந்த இக்ராட் (ICTAD) தரம்	மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை	மீளளிக்கமுடியாத தொகை
1. காரைநகர் கமநல சேவை நிலையக் கட்டட நிர்மாண வேலை	எம் 7	ரூ. 38,000/- பணமாக அல்லது வங்கி உத்தரவாதம் ரூ.75,000/-	ரூ.250/-

2. அரச நிறுவனங்கள் அல்லது இலங்கை நிர்மாண வேலைகள் ஒப்பந்தகாரர்களின் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நிர்மாண வேலைகள் அபிவிருத்தி நிறுவனங்களின் (இக்ராட்) பெறுமதி அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதி காட்டப்படுகின்ற ஒப்பந்தகாரர்களுக்கு இதற்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கமுடியும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணத் தொகுதிகளை கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூ. 38,000 மும் மீளளிக்க முடியாத தொகையாக ரூ. 250/- ஐயும் செலுத்தி 22.10.2003 பி.ப. 3.00 மணிவரை கடமை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.
5. பூர்த்தியாக்கப்பட்ட கேள்விப்பத்திரப் படிவங்களின் முதற் பிரதியையும் இரண்டாவது பிரதியையும் தனித்தனியாகத் தபால் உறையிலிட்டு (சீல்) முத்திரையிடப்பட்டு பின்னர் இரண்டு தபாலுறைகளையும் ஒரு தபால் உறையிலிட்டு 31.10.2003 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கக்கூடியதாக மாவட்ட உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும் அல்லது இதே முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும்.
6. கேள்விப்பத்திரப் படிவத்துடன் அட்டவணையிற் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்விப் பத்திரப் பிணையாக (மீளச் செலுத்தப்படுகின்ற) உரிய தொகையைக் குறிப்பிட்ட / உதவி ஆணையாளருக்குச செலுத்திப் பெற்றுக்கொண்ட மற்றுச்சீட்டினை அல்லது கேள்விப்பத்திர காகிதாதிகளுடன் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கான விவரங்கள் இணைக்கப்பட்டிருப்பின் குறிப்பிட்ட வங்கிப் பிணை / உத்தரவாதத்தைக் கேள்விப்பத்திரப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பித்தல் வேண்டும்.
7. சகல தபால் உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன் முதற்பிரதி, இரண்டாம் பிரதி என்பதும் தபால் உறைகளில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு முடிவடைந்தவுடனேயே கேள்விப்பத்திரங்களைத் திறத்தல் குறிப்பிட்ட அலுவலகத்தில் நடைபெறுவதுடன், அந்தச் சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரகாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்கமுடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி யாழ்ப்பாண கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

ஒப்பம்:
லூகஸ் இந்துருகல்ல
கமநல அபிவிருத்தித் திணைக்கள
ஆணையாளர் நாயகம்.
தலைவர்.
திணைக்கள கேள்வி சபை.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
42, ஸ்ரீமத் மார்க்கஸ் பெர்ணாண்டோ மாவத்தை,
த.பெ. 537 - கொழும்பு - 07.

(efi-30814) (24-21-15-19)

சாயி சிந்தனை

பேதங்கள் உடையதே வாழ்க்கை

பகவத்கீதையின் சொற்படி அனைவரும் தெய்வீகப் பெருநெருப்பின் சிறிய தீப்பொறிகள். எல்லா உயிரிலும் என் ஆத்மாவே இருக்கிறது என்ற சத்தியத்தை உணர்ந்துகொண்ட மனிதனுக்கு எல்லாவற்றையும் சமமாகக் காணமுடிகிறது. ஆனால், பௌதிகமான உலகில், நிரந்தரமற்ற உலகியல் வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் மனிதனுக்கு பாவம் புண்ணியம், நன்மை, தீமை என்ற பேதங்கள் எழாமல் போக வாய்ப்பில்லை. இத்தகைய இரட்டை நிலையை எடுக்காமல் இவ்வுலகில் வாழ்வது என்பது கடினம். இத்தகைய சுகதுக்கங்களுக்கிடையேதான் நமது சாந்தியும், பாதுகாப்பும் அமைகின்றன. நம் ஆனந்தம் துன்பத்துடன் தொடர்புடையது. வாழ்க்கை என்பது என்ன? வெயிலும் நிழலும் கலந்த ஒன்றுதான் வாழ்க்கை. துக்கமேயில்லையெனில் சுகத்தை அனுபவிக்க இயலாது. வெயிலில் சென்று திரும்பிய பிறகே நிழலின் அருமை புரிகிறது. மனித வாழ்க்கை என்பது சுக, துக்கம் இரண்டும் இணைந்த ஒன்றே. சுகத்தை மட்டும் தனியாகப் பிரித்துப் பார்ப்பது என்பது இயலாது.

ஆதாரம்: சனாதனசாரதி

வெள்ளி முதல்...

கொழும்பு நகரில் பிரபலம் பெற்ற ரெடிமெட் ஆடைகளின் சங்கமம்

House of Fashion
ஹவுஸ் ஒவ் பஷன்

பாழ்.றொட்டரிக் கழக ஆதரவில் உங்கள் நகரில்

தீபாவளிக் கொண்டாட்டம்

விற்பனையில்
* சிறுவர்களுக்கான ஆடைகள் * குடை
* ரீ சேட், சேட் * மழைஅங்கி
* பஞ்சாபி * சப்பாத்து வகை
* இரா உடை

மாபெரும் விற்பனை

இடம்:-
IT ISLAND கட்டடம்
(பழைய அருண்ஸ் ஸ்போர்ட்)
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(21-15-19) (C/30815)

கண்ணீர் அஞ்சலி

கொடிகாமம் அஞ்சலகத்தில் அஞ்சலராகக் கடமையாற்றியவரும் அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்கத்தின் அங்கத்தவருமான

ஐயாத்துரை இராசகுலசிங்கம்
(சந்திரன்)

அவர்கள் 13.10.2003 இல் அகாலமரணம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு சங்கத்தின் சார்பில் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

ச.மோகனராஜ்,
செயலாளர்.
அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்கம்,
யாழ். பிராந்தியம்.

(23694) (25-21-15-19)

போக்குவரத்து விழிப்புணர்வை தூண்டும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய அழைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம் அடுத்த மாதம் முதல்வாரத்தில் அனுஷ்டிக்கவுள்ள போக்குவரத்து, பாதுகாப்பு விழிப்புணர்வு வாரத்தின் போது போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வைத் தூண்டும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள், சனசமூகநிலையங்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களில் போக்குவரத்துப் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்துமாறும் விபத்துக்களை தடுப்பது தொடர்பாக மாணவர்கள் மத்தியில் போட்டிகளை ஏற்பாடு செய்து நடத்துமாறும் யாழ்.பகவான் ஸ்ரீசத்ய சாயி சேவா நிலையம் கேட்டிருக்கிறது.

வீதியோரங்களில் விபத்துகளைத் தடுக்கும் வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளுடன் மனித சங்கிலியாக நின்று விழிப்புணர்வைத் தூண்டும் வகையில் பிரசாரங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் சாயி சேவா நிலையத்தினர் கேட்டிருக்கின்றனர்.

போக்குவரத்து பாதுகாப்பு வாரத்தை ஒட்டி சத்யசாயி சேவா நிலையம் விழிப்புணர்வு சுலோகங்களை வெளியிட்டிருக்கிறது. அவை வருமாறு:-

★ மெதுவாகச் செல்லுங்கள்!
★ வேகத்தைக் கட்டுப்படுத்துங்கள்!
★ உயிர் வாழ உதவுகின்ற வாகனம் அது உயிரைப் பறிக்கலாமா?
★ எமது பாதுகாப்பு சாரதிகளின் கைகளில்!
★ ஒரு நிமிடம் சிந்தி! சில நிமிடம் நில்!! பல்லாண்டு வாழ்!!!
★ மெதுவாகச் செலுத்துங்கள்! வளமாக வாழுங்கள்!! (ஐ)

நல்லூர் லயன்ஸ் கழகம் / வண்ணார்பண்ணை "லக்கி" முன்பள்ளி மாணவர்களுக்கு 22.09.2003 முதல் ஒரு வாரத்திற்குச் சத்துணவு வழங்கியது. இறுதிநாள் நிகழ்வில் நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்குச் சாப்பாட்டுப் பெட்டிகளையும் வழங்கினர். சிறுவர்களுடன் லயன்ஸ் கழக நிர்வாகிகள் எடுத்துக்கொண்ட படம் இது.

5 வயது வரையாவது குழந்தை தாயிடம் வளர வேண்டும்!

தீர்ப்பொன்றில் நீதிவான் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஒக்.16

ஒரு குழந்தை 5 வயதுவரை தனது தாயிடமே வளர வேண்டும். இவ்வாறு தீர்ப்பொன்றில் யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் குறிப்பிட்டுள்ளார்.

4 மாதக்குழந்தை ஒன்று தாயிடமிருந்து பிரிய நேரிட்டமை தொடர்பான வழக்கின் தீர்ப்பிலேயே நீதிவான் இதனை சுட்டிக்காட்டியுள்ளார்.

குடும்பத்தகராறையடுத்து தனது மாமியாரும், கணவரின் தங்கையும் தனது 4 மாதக் குழந்தையை எடுத்துச் சென்று விட்டதாகவும் - தனது குழந்தையை மீண்டும் தன்னிடம் சேர்ப்பிக்கும்படியும் - இளம்தாய் ஒருவர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான வழக்கின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது. அப்போது நீதிமன்ற உத்தரவின்படி குழந்தை நீதிமன்றத்துக்கு எடுத்துவரப்பட்டது.

விசாரணை நடத்திய மேலதிக நீதிவான் ஒரு குழந்தை 5 வயது வரையிலாவது தாயிடம் வளரவேண்டும் என்பதை சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்ட 4 மாதக் குழந்தையை தாயிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (ஒ-8-9)

கனேடிய வெளிவிவகார அமைச்சர் புலிகளைச் சந்திக்காதது கவலை

யாழ். மாவட்ட பொது அமைப்புகள் கடிதம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் பில் கிரஹம் விடுதலைப் புலிகளைச் சந்தித்துக் கலந்துரையாட ஏற்பாடு செய்யாதது கவலை அளிக்கின்றது என்று யாழ். மாவட்டத்தில் இயங்கும் பொது அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் உள்ள கனேடியத் தூதரகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு அந்த அமைப்புக்கள் கவலை தெரிவித்துள்ளன.

யாழ். மாவட்ட அதிபர் சங்கம், தமிழாசிரியர் சங்கம் உட்பட பல அமைப்புக்கள் இக்கடிதத்தை அனுப்பியுள்ளன.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும். இலங்கைக்கு வரும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதாக முன்னர் செய்திகள் வெளிவந்தன.

இப்போது விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அவர் சந்திக்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த அறிவிப்பு எமக்கு கவலை அளிப்பதுடன் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சு நடத்தி தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும் என்பதே எமது விருப்பமாகும் - என்றுள்ளது.(ம-3)

கட்சியுடன் என்னை முரண்படுத்திக் காட்ட தேவையற்ற பிரசாரங்களே காரணம்!

தமிழோசைக்கு அளித்த செவ்வியில் ஆனந்தசங்கரி தெரிவிப்பு

லண்டன்,ஒக்.16

கட்சி அங்கத்தவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் என்னை ஆதரித்தே வருகின்றனர். தேவையற்ற பிரசாரங்களே என்னைக் கட்சியுடன் முரண்பட்டுக் காட்டுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி.

நேற்றுமுன்தினமிரவு டி.பி.எஸ்யின் தமிழோசைக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அதில் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக்கட்சியின் கூட்டம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுவது ஆச்சரியத்திற்குரிய விடயமாகும். ஏனெனில் 1972 இல் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டபின் தமிழரசுக் கட்சி அற்றுப்போய் விட்டது. அப்படிப்பட்ட நிலையில் தமிழரசுக்கட்சி என்ற பெயரிலான கூட்டத்திற்கு நானோ எனது அங்கத்தவர்களோ செல்லவேண்டிய தேவை இல்லை.

ஒருசிலர் கூறுவது போல் எமது கட்சிக்குள் எந்தவித முரண்பாடும் இல்லை. அப்படியான முரண்பாடு இருந்திருந்தால் நான் 36 ஆயிரம் வாக்குகள் பெற்று நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கமாட்டேன்.

கடந்த ஜூன் 6 ஆம் திகதி எனது கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் ஏதேனும் அதிருப்தி இருக்கிறதா எனக் கேட்டபோது அனைவரும் மறுத்துவிட்டார்கள்.

என்னில் நம்பிக்கை இருப்பதாகவே பலர் தெரிவித்தனர். கட்சிகளில் வேற்றுமை இருப்பது வழமை ஆனால் எனது கட்சியில் தற்போது எந்த முரண்பாடும் கிடையாது.

மூன்று மாதங்களின் முன்னர் கூடி கட்சிக்குள் ஏதேனும் முரண்பாடுகள் உண்டா எனக்கேட்டபோதும் எவரும் எந்தவித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

நான் வெளிநாடுகளில் அதிகம் தங்கியிருப்பதாகக் கூறுகின்றனர். கடந்த இருமுறை எனது சொந்த விடயத்திற்காக வெளிநாட்டிற்கு விஜயம் செய்தேன். எனினும், வேலை நிமித்தம் வெளிநாடுகளுக்குச் செல்வது வழக்கம். அது நாடாளுமன்ற உறுப்பினரின் கடமைகளில் ஒன்று.

தமிழ்த் தேசிய காங்கிரஸில் எனக்கு நம்பிக்கையில்லை. அதனால் அக்கட்சிக் கூட்டங்களில் கலந்துகொள்ளவில்லை. விடுதலைப் புலிகள் அழைப்பு விடுக்காததால் அவர்களின் கூட்டங்களிலும் கலந்துகொள்வதில்லை.

இந்தியாவுடன் மட்டுமல்லாது எல்லா நாட்டுடனும் நான் தொடர்பு கொண்டுதான் இருக்கின்றேன். ஒவ்வொரு இலங்கையனும் எந்தவொரு ஆபத்து நிலையிலும் உதவிகோருகின்ற ஒரு நாடு இந்தியா. இந்தியாவின் எதிர்க்கட்சியில் உள்ளவர்களின் அழுத்தமே இன்று இலங்கைவிடயத்தில் இந்தியா பின்னடிக்கப் பிரதான காரணமாகவுள்ளது.

இந்நிலையில் இந்தியாவுடன் நாம் நல்ல உறவைப் பேணவேண்டும். நாளை அந்த எதிர்க்கட்சியே ஆளும் கட்சி ஆகலாம்.

என்னுடன் முட்டிமோதப் பலர் முயற்சிக்கின்றபோதும், நான் யாருடனும் மோதவில்லை. எமது மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கின்றேன். மக்களுக்காக என்றும் குரல் கொடுப்பேன் - என்றார். (ஒ-12)

மாம்பழம்சந்தி விபத்துத் தொடர்பாக பொலீஸாரின் நடவடிக்கையில் திருப்தி

கட்டளைக் குறிப்பில் நீதிவான் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

'கடந்த சனிக்கிழமை மாம்பழம் சந்திப் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தின் போது பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் நீதிமன்றம் பூரண திருப்தி அடைகின்றது. எதேவேளை சட்டத்தின் தேவைக்கமைய பொலீஸார் எடுத்த நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்க முனைந்ததை குறிப்பாக எமது தாய்நாட்டின் கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய வகையில் கண்காணிப்புக்குழு வாகனம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையை யாழ். நீதிமன்றம் பாராமாகக் கருதுகின்றது.'

மாம்பழம்சந்தியில் இராணுவ கவச வாகனம் ஒன்றும் ஓட்டோ ஒன்றும் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பான விசாரணைகள் கடந்த திங்களன்று யாழ். நீதிமன்றில் இடம்பெற்றன.

அந்த விசாரணைகளின் போது நீதிவான் ஆர்.விக்னராஜா வழங்கிய கட்டளைக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விபத்துச் சம்பவம் பற்றி உடனே பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரியின் தலைமையில் சம்பவ இடத்துக்குப் பொலீஸார் சென்றுள்ளனர். சட்டத்தின் தேவைக்கமைய ஒரு விபத்து நடந்த பின்னர் பொலீஸார் மேற்கொள்ள வேண்டிய பூர்வாங்க விசாரணைகளை நிறைவேற்றியுள்ளன் என்பதை யாழ் பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரியின் அறிக்கையில் இருந்தும் ஓட்டோச் சாரதியான அருமைத்துரை சஞ்சீவனின் வாக்குமூலத்தில் இருந்தும் அறிந்து நீதிவானாகிய நான் பூரண திருப்தி அடைகின்றேன்.

விபத்தில் சம்பந்தப்பட்ட இராணுவ வாகனத்தையும் ஓட்டோவையும் சட்டத்தின் தேவைக்கமைய நியாயாதிக்கம் கொண்ட இந்த நீதிமன்றத்தில் நிறுத்துவது பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தாலும் -

விபத்துச் சம்பந்தமான வாகனங்களை பொலீஸ் நிலையத்தில் பாதுகாப்பாக விடுமாறு ஏற்கனவே நீதிமன்றம் பணித்தமையாலும் -

பொலீஸார் வாகனங்களை பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்ல முற்பட்டுள்ளார்கள்.

இதற்கமைய பொலீஸார் இராணுவ வாகனத்தையும் ஓட்டோவையும் அவ்விடத்தில் இருந்து எடுக்க முயன்றபோது அங்கு கூடியிருந்தவர்கள் அதனைத் தடுத்தனர். இதன்போது பொலீஸார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக மக்களின் கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சட்டத்தின் தேவைப்பாட்டுக்கமைய இச்சம்பவத்தில் நடுநிலையாக நின்று நீதியை நிலைநாட்ட வேண்டியது நீதிவானது கடமையாகும்.

இதனால் ஓட்டோ சாரதியான அருமைத்துரை சஞ்சீவனுடைய வாக்குமூலத்தை நேரிலே பதிவுசெய்து அதன் பின் அவர் முன்னிலையில் வாசித்துக்காட்டி அவர் சரி என்று ஏற்றுக்கொண்ட பின்னர் அவருடைய கையொப்பத்தையும் பெற்றுக்கொண்டேன்.

இதன்படி யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பொறுப்பதிகாரி சேனாரத்தினவின் சாட்சியப்படியும் ஓட்டோ சாரதியின் வாக்குமூலத்தின்படியும், இவ்விபத்து நடப்பதற்கு சற்று முன் மாம்பழம்சந்திப் பகுதியில் இருந்து ஓட்டோவை விலத்திக் கொண்டு முன்சென்ற இராணுவ வாகன சாரதியும் சாவகச்சேரியில் இருந்து மாம்பழம்சந்தி நோக்கி வந்த விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தில் இருந்த சாரதியும் குறுகிய தூரத்தில் கதைத்தார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை ஓட்டோ சாரதி தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

ஓட்டோ சாரதி கூறிய வாக்குமூலத்தில் இருந்து இவ்விடயம் தொடர்பாக ஆழமாக ஆராய வேண்டியிருக்கிறது. இரு இராணுவ வாகனங்களிலும் பிரயாணம் செய்தவர்கள் ஓட்டோ சாரதி குறிப்பிட்டது போல இவ்விபத்துக்கு முன் கலந்துரையாடியிருந்தால் இவ்விபத்தில் சம்பந்தப்பட்டிருந்த இராணுவ வாகனம் அதிவேகமாக வந்திருப்பதற்கு சாத்தியம் இருக்காதென நினைக்கின்றேன். எனவே, யாழ். போக்குவரத்துப் பொலீஸ் பொறுப்பதிகாரி இச்சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவரையும் பூரணமாக விசாரணை செய்து அறிக்கையை மன்றுக்குச் சமர்ப்பிக்கப் பணிக்கின்றேன்.

இச்சம்பவத்தில் ஈடுபட்ட எட்டு சந்தேக நபர்களையும் மூன்று நிபந்தனைகளின் அடிப்படையில் பிணையில் விடுவிக்கின்றேன்.

சந்தேக நபர்கள் பெரும்பாலானோர் மாணவர்கள் என இவர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி எனது கவனத்திற்குக் கொண்டு வந்தமையால் ஒவ்வொருவரும் தலா 15ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

இவ்வழக்கு முடியும்வரையும் சந்தேகநபர்கள் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடக்கூடாது.

பிணையில் செல்லும் சந்தேக நபர்கள் ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் யாழ். நீதிமன்றப் பதிவாளர் முன்னிலையில் கையொப்பம் இடவேண்டும்.

இவ்வழக்கு விசாரணைக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஆகிய நிபந்தனைகளுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் 24 ஆம் விடுதியில் சேர்க்கப்பட்டிருக்கும் ஓட்டோ சாரதியான அருமைத்துரை சஞ்சீவன் என்பவரை உள்ளக நோயாளியாகத் தொடர்ந்தும் அங்கு வைத்திருப்பதற்கான வைத்திய காரணங்கள் குறித்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எதிர்வரும் 15 ஆம் திகதி (நேற்று) அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் - இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.(ம)

இதோ!

இளமைத்துடிப்பு மிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியை பெருகச்செய்து, பூரிக்கச் செய்வதற்கும், வீரியமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, முட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்.

சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chillaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சீவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 222 - 2567
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(24-15-19) (சி-30455)

மிதிவெடி வெடித்து பணியாளர் காயம்!

யாழ்ப்பாணம்.ஒக்.16

மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர் தவறுதலாக மிதிவெடி வெடித்ததில் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை உரும்பிராய் விளாத்தியடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 'ஹலோரஸ்ட்' நிறுவனத்தைச் சேர்ந்த வி.இராகுலதாஸ் என்பவரே காயமடைந்தார். காயமடைந்த இவர் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

(ஒ-6-15)

பயிற்சி வகுப்புகள்

கேக்ஐசிங், Wedding Cakes, ஐசிங்பூக்கள், Facial வகைகள், முகப் பருசிகிச்சை, மணமகள் அலங்காரங்கள், கூந்தல் அலங்காரங்கள், Fabric Painting ஆகியவை திறமையான முறையில் பயிற்றுவிக்கப்படும்.

ஓடர்களுக்கும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு: **JEYA**

T.P: 021 222 5583

56/5, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(மாத்தனை முருகன் கோயிலுக்கு அருகில்)

(23676) (25-15-19)

யா/கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் மகா வித்தியாலய
மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக
பழைய மாணவர் சங்கம் நடத்திய

அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

முதலாம் பரிசு இல. 201 இரண்டாம் பரிசு இல.1579
மூன்றாம் பரிசு இல. 353

ஆறுதல் பரிசுகள்:
1312, 513, 1134, 760, 750

பழைய மாணவர் சங்கம், - செயலாளர்.
கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் ம.வி.

(23680) (25-15-19)

யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி

விசேடமாக (HOLLAND) ஒல்லாந்தில் இருந்து தருவிக்கப்பட்ட நல்ல இன விதை உருளைக்கிழங்குகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகொள்ள வேண்டிய இடம்:

பவானி களஞ்சியம்
இராச வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.
தொ.பே.இல: 222 2371

(23081) (25-15-19)

சேவையின் நிறைவுநாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்

உயர்திரு. அம்பலவாணர் இராசரத்தினம்

அதிபர், இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை (02.03.1994 - 16.10.2003)

அன்புள்ளம் கொண்ட எம் அதிபர் அகவை அறுபதில் நிறைவு கண்டு சேவையால் பிரிந்த போதும் எம் இதயங்களில் நிறைந்திருக்கும் பெருந்தகையை நலமெல்லாம்பெற்று நீடுவாழ்ந்திருக்க இறைஆசி வேண்டி வாழ்த்துகின்றோம். என்றென்றும் வாழியவே!

இருபாலை சீ.சீ.த.க. பாடசாலை. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(23678) (25-15-19)

PRINCE

பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.

துருபிடிக்காத உலோக கிச்சன் சின்க்

ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
காட்சியறை: 516, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 2324261-5, 2337283-5, 2436779 பேக்ஸ்: 2446554
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 2575066

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு
சர்வதேச ரீதியிலான
வங்கியியல் கற்கைநெறிகள்

B.Sc.(Hons) Degree & ACIB
DBF, ACBF, CBF (CIB/IBSL)

Medium - Tamil & English Exam:- March & September
Minimum Requirement:- G.C.E O/L 6 Passes (iC) & G.C.E A/L 2 Passes

External Degree
(Jaffna University & Peradeniya University)

G.A.Q. 1st in Com. B.A. B.Com.

2003/2004 இற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

CIMA

Foundation level & Intermediate level
Medium:- English Exam:- May & November
Minimum Requirement:- G.C.E O/L (3C) Passes & G.C.E. A/L 2 Passes

aat (Sri Lanka)

Stage I & Stage II
Medium:- Tamil & English Exam:- June & December
Minimum Requirement:- G.C.E O/L 5 Passes

வகுப்புகள் 18.10.2003 ஆரம்பமாகின்றன

Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.

(21-15-19) (சி-30802)

இலங்கையின் அரசியலை ஆட்டிப் படைக்கும் பிக்குகள்....

பெரும்பான்மையின மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி குறுக்கு வழியில் ஆட்சிக்கு வர எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா முற்பட்ட காலத்திலிருந்து (1956) இன்றுவரை இந்நாட்டு அரசியலில் பௌத்த பிக்குகள் இரண்டறக் கலந்துவிட்டனர். பல முறை ஆட்சியை அமைத்தவர்களும் அவ்வாறு அமைக்கப்பட்ட ஆட்சியை வீழ்த்தியவர்களும் அவர்களே, "பௌதத துறவிகள் யாசித்தே உணவைப் பெறவேண்டும். அவ்வாறு பெற்ற உணவை நீரில் கழுவிய பின்னரே (அதிலுள்ள ருசி போன பின்பே) உண்ணவேண்டும்" எனப் புத்தபிரான் கூறியுள்ளார். ஆனால், இந்நாட்டில் நடப்பதேவேறு. நாட்டை, ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். உப்புல் ஜோசெப் பெர்னான்டோ எழுதி 'லங்காதீப' நாளிதழில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.

களனி விகாரையின் புத்தரக்கித தேரோவே ஸ்ரீல.சு.கட்சியை 1956 ஆம் ஆண்டு ஆட்சியில் அமர்த்தினர். அதே புத்தரக்கித தேரோதான் 1959 ஆம் ஆண்டில் அமைச்சரவையில் பிளவை ஏற்படுத்தியதன் மூலம் கட்சியையும் அரசையும் இரண்டாகப் பிளவுபட வைத்தார். 1959 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவைக் கொலைசெய்து ஸ்ரீல.சு.கட்சியை முற்றுமுழுதாக அழித்துவிடத் திட்டமிட்டவரும் அதே புத்தரக்கித தேரோவே.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா கொலை செய்யப்பட்ட பின்னர், கட்சியைக் கட்டிக்காத்து வளர்த்தெடுக்கப் புதியதொரு தலைமையைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தவர் மற்றொரு பௌத்த துறவியான ஞானசீக தேரராவார். அவர் எழுதிய நூலொன்றில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. "பிரதமரின் அகால மரணத்தின் பின்னர் கட்சியின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்க சிறிமாவோ விரும்பாததால் கட்சி மீதான பொதுமக்களின் நம்பிக்கை குறைவடைவதாகக் கேள்விப்பட்டேன். 'நாங்கள் எங்கள் கிராமங்களுக்கு திரும்பிச் செல்வதெனத் தீர்மானித்துவிட்டோம். ஏனெனில், கட்சியின் தலைமைப் பொறுப்பைத்தான் ஏற்க முடியாதென சிறிமாவோ கூறுகிறார். இதற்கு உங்களால் ஏதாவது செய்ய இயலுமானால் செய்யுங்கள்' என அவ்வேளையில் பிரபலமான அமைச்சரொருவர் தொலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு தெரிவித்தது மட்டுமே எனக்கு இப்போது ஞாபகத்தில் இருக்கிறது"

உண்மையில் ஞானசீக தேரர் அந்த விடயத்தில் தன்னால் செய்ய முடிந்ததைச் செய்துகாட்டினார்.

"நீங்கள் தயங்காது தலைமைப் பதவியை ஏற்றுக்கொள்ளுங்கள், மற்றைய சகல விடயங்களிலும் நாங்கள் உங்களுக்கு உதவி செய்கின்றோம். வெறுமனே பெயருக்கு மட்டும் பதவியை ஏற்றுக்கொண்டால் அதுவே எங்களுக்குப் போதும்" என ஞானசீக தேரர் கூறியதை மறுக்க இயலாத சிறிமாவோ கடைசியில் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்கச் சம்மதித்தார்.

புத்தரக்கித தேரரால் உருவாக்கப்பட்டு அவரே அழிக்க முற்பட்ட ஸ்ரீல.சு.கட்சியையும் அதன் தலைமைத்துவத்தையும் இவ்வாறு ஞானசீகதேரர் மீண்டும் கட்டியெழுப்பி அத்திவாரமிட்டார். அவர் தனது முயற்சியை அந்தோடு நிறுத்திக் கொள்ளவில்லை. 1960 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மீண்டும் ஸ்ரீல.சு.கட்சி ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அவரது விடாமுயற்சியே காரணமாயிற்று. அதேபோன்று ஸ்ரீல.சு.கட்சி அரசமைத்து ஆட்சியை நடத்திச் சென்ற வேளையில் அதனை இரண்டாகப் பிளவுபடச் செய்யவும் அத்தேரரே காரணமானார்.

அந்த அரசை இடதுசாரிக் கைகளைக் பக்கம் இடுச்செல்ல ஞானசீகதேரர் முயன்றவேளையில், அதனை விரும்பாத, அரசில் அங்கம் வகித்த வலதுசாரிக் கொள்கை கொண்டோர் அரசிலிருந்தும் வெளியேறியமையால் அரசு இரண்டாகப் பிளவுபட்டது. இதன் காரணமாக 1964 ஆம் ஆண்டில் அரசு வீழ்ச்சியடைய நேர்ந்தது.

1956 இல் புத்தரக்கித தேரர் ஸ்ரீல.சு.கட்சியை அதிகாரத்தில் அமர்த்தினார். அந்த அரசு இடதுசாரிகள் பக்கம்சார முயன்றமையால் கடைசியில் அரசு வீழ்ச்சியுற்றதுடன், கட்சியும் இரண்டாகப் பிளவுபட்டது. அதுபோன்றே ஞானசீக தேரோவும் தான் அதிகாரத்தில் அமர்த்திய அரசை இடதுசாரிகள் பக்கம் இழுத்துச்செல்ல முயன்றமையால் அரசு வீழ்ச்சியடைந்ததுடன் கட்சியும் இரண்டாகப் பிளவுபட நேர்ந்தது.

அன்று புத்தரக்கித தேரரும் பின்னர் ஞானசீக தேரரும் அந்தப் பாத்திரத்தை ஏற்றுக்கொண்ட காரணத்தாலேயே இன்றும் ஸ்ரீல.சு.கட்சி தப்பிப்பிழைத்திருக்கின்றது. அன்று இத்தேரர்கள் இருவரும் கட்சியைக் கடைசியில் நாசப்படுத்தியதென்னவோ உண்மைதான். ஆனால், அத்தேரர்கள் தலையிட்டிருக்காது விட்டிருந்தால் இந்நாட்டில் ஒருபோதும் ஐ.தே.கட்சிக்கு எதிரான தேசிய சக்தி வளர்ச்சியடைந்திருக்க முடியாது. 1956 ஆம் ஆண்டில் பௌத்த மதம், வைத்திய, கல்வி, விவசாய மற்றும் தொழிளாளர்க்கத்தினரை ஒன்று திரட்டி ஐ.தே.கட்சிக்கு எதிரான விரோத மனப்பாங்கை உருவாக்கிக் காட்டியவர் புத்தரக்கித தேரராவார்.

1960 ஆம் ஆண்டு முதல் பத்து வருட காலமாக ஐக்கிய தேசியக்கட்சிக்கெதிராக இடதுசாரிச்சக்தி மற்றும் தேசியவாத சக்திகளை ஒன்று திரட்டி வளர்த்தவர் ஞானசீக தேரராவார்.

புத்தரக்கித தேரரின் முயற்சியால் 1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பிரதமராக ஆக்கப்பட்டார்.

அன்று புத்தரக்கித தேரரும் ஞானசீக தேரரும் ஏற்ற பாத்திரங்களை இன்று அல்லே குணவன்ச தேரர் ஏற்க முயன்றுள்ளார். அதற்காக அவர் ஐ.தே.கட்சிக்கு விரோதமாக இயங்கத்தக்க தேசப்பற்று அமைப்பை உருவாக்க முன்னிற்கிறார். உண்மையில் அவரது இம்முயற்சி இன்றோ நேற்றோ ஆரம்பிக்கப்பட்டதல்ல

நீண்ட நாள்களுக்கு முன்பே அவர் இம்முயற்சியை ஆரம்பித்துவிட்டார். இதனாலேயே ஸ்ரீல.சு.கட்சி ஜே.வி.பி.கட்டுத் தொடர்பான பேச்சுக்கள் தோல்வி அடைந்ததையடுத்து, இவ்விரு கட்சிகளின் முக்கியஸ்தர்களை ஒன்று சேர்த்து தேசிய ரீதியில் தேசப்பற்று அமைப்பை அவரால் உருவாக்கமுடிந்தது.

அல்லே குணவன்ச தேரர் சிறந்த அரசியல் அனுபவம் வாய்ந்தவர் அவரது விகாரையில் மதவழிபாடும், தர்ம உபதேசமும் மட்டுமன்றி அரசியல் நடவடிக்கைகளும் இடம்பெறுவது வழக்கம்.

யார் இந்த அல்லே குணவன்ச தேரர்?

அவரைப் பற்றிய விவரங்களை இன்று எவரும் அறிய விரும்புவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. அவரைப் பற்றி அறிய விரும்பினால் நாம் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தாகவேண்டும். எமது நாட்டுப் பயங்கரவாதம் குறித்து எழுதப்பட்ட பிரபலமான நூலொன்றின்படி 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற கறுப்பு ஜூலை கலவரங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவரே இந்த குணவன்ச தேரர் எனத் தெரிய வருகின்றது.

"சிங்கள மக்கள் முன்னணியின் முக்கிய அமைப்பாளரான அல்லே குணவன்ச தேரர் பொரளை கனத்தை மயானத்துக்கு வந்து யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்கள் இறுதிச்சடங்குகளுக்காகக் கொண்டுவரப்படுவதை எதிர்பார்த்துக் காத்திருந்த பொதுமக்களின் உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் கருத்து வெளியிட்டவண்ணம் இருந்தார். இறுதிச்சடங்குகள் நடத்தப்படுவதற்கு முன்னர் அந்த இராணுவத்தினரின் பூதவுடல்களைப் பொதுமக்களுக்குக் காட்ட வேண்டுமென அந்த இறுதிக்கிரியைகளை ஒழுங்குசெய்து கொண்டிருந்த அதிகாரிகளை குணவன்ச தேரர் வற்புறுத்தியவண்ணமிருந்தார்" என அந்நூலில் ஓர் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்நூலில் 1983 கறுப்பு ஜூலை சம்பவத்தில் குணவன்ச தேரரின் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் வகையில் உதாரணங்கள் பல அந்நூலில் காட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று, அவ்வேளையில் மகாவலி அபிவிருத்தி அமைச்சராகவிருந்த காமினி திசாநாயக்கா, ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனாவைச் சந்தித்து பௌத்த துறவிகளை இனவாதக் கருத்தை வெளிப்படுத்தாது அமைதியாக இருக்கக் கேட்டுக்கொள்ள வைத்ததாகும்.

அவ்வேளையில் பதவியில் இருந்த ஜே.ஆரின் ஐதேகட்சி அரசு பௌத்த விகாரைகளில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா எனச் சோதனையிடும் அளவுக்கு பௌத்த துறவிகளின் நடவடிக்கைகளில் சந்தேகம் நிலவியது.

ஆனால், பௌத்த துறவிகளின் இனவாதப் பேச்சுக்களை எவராலும் நிறுத்த முடியவில்லை. இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணும் பொருட்டு 1983 ஆம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சகல முயற்சிகளுக்கும் எதிராக குணவன்ச தேரர் சிங்கள மக்களின் கர்பில் எதிர்ப்புக் குரல் எழுப்பிவந்தார். அவ்விதம் எதிர்த்துக் கருத்து வெளியிட்டு வந்தபோதிலும், அவர் அவ்வேளையில் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்காவுடன் நெருக்கமான உறவைப் பேணி வந்தார்.

1987 ஆம் ஆண்டில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் காமினி திசாநாயக்கா முக்கிய பங்குகொள்ள ஆரம்பித்ததை அடுத்து குணவன்ச தேரர் அப்போதைய பிரதமர் பிரேமதாசவின் பக்கம் சாய்ந்தார். அதன் தொடர்ச்சியாக, 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் குணவன்ச தேரர் பிரேமதாசவின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தார்.

இந்திய - இலங்கை ஒப்பந்த எதிர்ப்பு நடவடிக்கைகளில் அவர் ஜனாதிபதி பிரேமதாசவின் நிலைப்பாட்டைத் தீவிரமாக ஆதரித்தார். அத்தேர்தலில் வெற்றிபெற்றதன் மூலம் பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவி பேற்றதன் பின்னர் இடம்பெற்ற ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது ஜே.வி.பியினரை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளிலும் பிரேமதாசவின் நிலைப்பாட்டை ஆதரித்து இயங்கிவந்தார்.

ஜனாதிபதி பிரேமதாச இராணுவத்தினரைப் பயன்படுத்தி ஜே.வி.பியினரை அழித்தொழித்த சமயத்தில் குணவன்ச தேரர் ஜே.வி.பியினரால் கொல்லப்படும் அரச படையினருக்கான போர் எழுச்சிப் பாடல்களை எழுதிவந்தார் அந்த நாள்களில் தினமும் வானொலியில் குணவன்ச தேரரின் போர் எழுச்சிப் பாடல்களே ஒலிபரப்பாகின.

பின்னர், ஜனாதிபதி பிரேமதாச விடுதலைப் புலிகள் அமைப்புடன் மேற்கொண்ட இணக்கப்பாட்டையடுத்து, அவர்களுக்கு ஆயுதங்களும், நிதியுதவியும் வழங்கிய வேளையிலும் இந்த குணவன்ச தேரர் ஜனாதிபதிக்கு ஆதரவாகவே செயற்பட்டு வந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி வழங்கியதன் மூலம் ஜனாதிபதி பிரேமதாச அந்த அமைப்பைப் பலப்படுத்துவதாகக் குற்றஞ்சாட்டி லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்கா ஆகியோர் அடங்கிய குழுவினர் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த வேளையில் இந்த குணவன்ச தேரர் ஜனாதிபதிக்குப் பக்கபலமாக நின்று செயற்பட்டார்.

ஜனாதிபதி பிரேமதாசவை அச்சிக்கலிலிருந்து விடுவிக்கும் பொருட்டு ஸ்ரீல.சு.கட்சி உட்பட எதிரணியினரின் கடும் விமர்சனத்துக்கு உட்பட்ட நிலையிலும் குணவன்ச தேரர் பயமின்றித் துணிச்சலுடன் செயற்பட்டார்.

பின்னர் அத்துலத் முதலி கொலை செய்யப்பட்டவேளை அவரது இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்ளச் சென்ற ஸ்ரீல.சு.கட்சி உட்பட்ட எதிரணியின் ஆதரவாளர்கள் பொரளை கனத்தை மயானத்துக்குச் செல்லும் பிரதான வீதியோரம் அமைந்துள்ள குணவன்ச தேரரின் விகாரையைத் தாக்கிச் சேதப்படுத்தும் அளவுக்கு அவ்வேளையில் அவருக்கு எதிரான பகைமையுணர்ச்சி தீவிரமடைந்திருந்தது

எதிரணியினரின் தாக்குதல் பட்டியலில் குணவன்ச தேரரின் பெயர் முதலாவதாக இருந்தது. ஜனாதிபதி பிரேமதாச கொலைசெய்யப்பட்ட சம்பவத்தையடுத்து அத்தாக்குதல் பட்டியல் கைவிடப்பட்டுச் செயலிழந்தது. அதன் பின்னரும் ஐ.தே.கட்சி அரசுக்கு ஆதரவு வழங்கிவந்த தேரர், தனது முன்னைய எதிரியான காமினி திசாநாயக்காவுடன் நெருக்கமான உறவைப்பேண ஆரம்பித்தார். 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் குணவன்ச தேரர் காமினி திசாநாயக்காவின் வெற்றிக்காக உழைப்பதில் முன்னின்றார்.

வியெஸ்ரி

எதிர்பாராத விதமாக தீவிரவாதி காமினி திசாநாயக்கா கொலைசெய்யப்பட்டார். அவரது மரணத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் நெருங்கிய அரசியல் சகாவான சிறிசேன குரேயுடன் குணவன்ச தேரர் நெருக்கமானார். காமினி திசாநாயக்காவின் கொலைக்குப் பின்னர் மீண்டும் ஐ.தே.கட்சியில் இணைவதன் மூலம் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியையடைய சிறிசேன குரே விரும்பிய போதிலும், அவ்வேளையில், ஐ.தே.கட்சித் தலைவராயிருந்த ரணில் விக்கிரமசிங்க அதனை விரும்பவில்லை.

ஆனால், குணவன்ச தேரர் மீண்டும் சிறிசேன குரேயைக் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்காக ஐ.தே.கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவதில் முழுமூச்சாக ஈடுபட்டார். அதில் ஒரு பகுதியாக ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தும் பேச குணவன்ச தேரர் பலமுடைகள் முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் அம்முயற்சி கைகூடவில்லை.

சொந்த குறிக்கோள் தர்ம உபதேசம் செய்வதுடன் மட்டும் நிறுத்துக்கொள்ள வேண்டுமேயன்றி, கட்சியின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடாதெனக் கூறி ரணில் விக்கிரமசிங்க அவரைச் சந்திக்க மறுத்துவிட்டார். குணவன்ச தேரர் தனது முயற்சிகள் கைகூடாத நிலையில் ஐ.தே.கட்சிக்குள்ளேயே கிளர்ச்சி ஒன்றை உருவாக்க முற்றுமாகச் செயற்பட்டார். இதன் முதற்படியாக, முதலில் சிறிசேன குரேக்கு ஆதரவான குழுவினரை ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேற வைத்து கட்சியை நலிவுறச் செய்யும் முயற்சியை மேற்கொண்டார்.

அதன் பின்னர் 1999 ஆம் ஆண்டில் ஜனாதிபதித்தேர்தல் அண்மித்த சமயம் ஐ.தே.கட்சியிலிருந்து விலகிச்சென்ற கலாநிதி சரத் அமுனுகம, விஜேயால மெண்டிஸ், சந்திரமுனசிங்க இன்று ஐ.தே. கட்சிக்கு விரோதமாகத் தேசிய கூட்டணியொன்றை உருவாக்கும் தேவை குணவன்ச தேரருக்கு ஏற்பட்டுள்ளது. அதன் பொருட்டு ஸ்ரீல.சு. கட்சிக்குள் ஜே.வி.பியை ஒன்று சேர்ப்பது குணவன்ச தேரரின் அவசிய தேவையாகிறது. இதனை ஜனாதிபதி சந்திரிகா பெரிதும் விரும்பவில்லை. ஆனாலும் குணவன்ச தேரர் இன்று அதற்கான தன முயற்சியில் ஸ்ரீல.சு. கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அந்த முயற்சியில் மேலும் ஒருபடி மேலே சென்று சந்திரிகா இடம்பெறாத ஸ்ரீல.சு. கட்சியுடன் ஜே.வி.பியை இணைக்கத் தக்கதொரு சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொண்டு வருகிறார்.

உண்மையில் இதுவும் முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் சிறிசேன குரேயை ஐ.தே.கட்சிக்குள் மீண்டும் கொண்டு வருவதற்கு முயன்ற அவரது முயற்சி போன்ற மற்றொரு செயலாகும். சிறிசேன குரேயை மீண்டும் ஐ.தே.கட்சிக்குள் கொண்டு வரும் முயற்சியில் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை ஒன்றுதிரட்ட பௌத்த துறவிகள் முயன்றனர். அதற்கானதொரு வழியாக அன்று அவர்கள் காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசவின் நினைவஞ்சலி நிகழ்ச்சிக்கு ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளக்கூடாது என அவர்களைத் தடுக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முடியவில்லை.

இன்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் அவ்வாறானதொரு நிலைமையே ஏற்பட்டுள்ளது. இதனாலேயே தேசப்பற்று அமைப்பு ஒழுங்குசெய்த எதிர்ப்பு ஊர்வலத்தில் ஸ்ரீல. சுகட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்வதை ஜனாதிபதி அனுமதிக்க வேண்டி ஏற்பட்டது.

அன்று ரணில் விக்கிரமசிங்க எதிர்ப்புத் தெரிவித்தமையால் சிறிசேன குரேயை ஐ.தே.கட்சியில் மீண்டும் சேர்த்துக்கொள்ள முடியாத தொரு சூழ்நிலை உருவான சமயம், ரணில் விக்கிரமசிங்க பங்கு வகிக்காத ஐ.தே.கட்சியொன்றை நிறுவுவது குறித்த கருத்தை முன் வைத்தார் குணவன்ச தேரர். அதேபோன்று இன்று ஸ்ரீல.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டு முயற்சியைச் சந்திரிகா விரும்பாத தொரு சூழ்நிலையில், சந்திரிகா யங்கேற்காத ஸ்ரீல.சு கட்சியை நிறுவி அதனுடன் ஜே.வி.பியை இணைப்பது குறித்த கருத்தை குணவன்ச தேரர் முன்வைத்து வருகிறார்.

குணவன்ச தேரரின் இவ்வித நடவடிக்கைகளால் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று, கட்சியை விட்டு வெளியேறிச் சென்றது போன்று இப்போது ஸ்ரீல.சுகட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களது குழுவொன்றும் கட்சியை விட்டு வெளியேறிவிட முடியுமாகிறது?

அதுபற்றி அறிந்தவர்கள் அல்லே குணவன்ச தேரரும் ஆண்டவனும் மட்டுமே ✦

விற்பனைக்கு உண்டு

நல்ல நிலையில் வைத்துப் பராமரிக்கப்பட்டதும் யாழ்ப்பாணத்தில் BODY அடிக்கப்பட்டதுமான இரண்டு பார ஊர்திகள் விற்பனைக்கு உண்டு.
TATA 12 -10, LEY LAND TASEKAR

தொடர்பு: P.T.R. ரேடர்ஸ்
213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 021 222 5538
0777 878963

(23674) (25)

காலபோக நெற்செய்கைக்கு உதவும் வகையில் கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

வலி.தெற்கு,ஒக்.16

கட்டாக்காலி ஆடு, மாடுகள் தொடர்பாக கடும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உடுவில், தொல்புரம் கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களுக்கு பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

உடுவில் கமநல சேவை நிலையத்தில் நடைபெற்ற விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளது. இதையடுத்து உடுவில், தொல்புரம் கமநல சேவை நிலையங்களுக்கு உட்பட்ட வயல் நிலங்களில் காலபோக நெற்செய்கைக்கான விதைப்புக்களில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அதேவேளை, இப்பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை பெரும்பிரச்சினையாக உள்ளது. இவற்றால் நெற்பயிர்களுக்கு பெரும் சேதம் விளைவிக்கப்படுவதாக பல விவசாயிகள் முறைப்பாடுகள் செய்து வருகின்றனர்.

இவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படாதிருக்க கமநலசேவை நிலையங்கள் விவசாய சம்மேளனங்களுடாக நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆராய்ந்துள்ளன. காலபோக நெற்செய்கையாளர் மத்தியில் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர்கள் சென்று அறிவுறுத்தல் கூட்டங்களை நடத்தி ஆலோசனைகளும் வழங்கி வருகின்றனர்.

கட்டாக்காலி கால்நடைகளால் பயிர்கள் பாதிப்படையாமல் பாதுகாக்க விவசாய சம்மேளனங்கள் ஊடாக அவ்வப்பகுதிகளுக்கென கட்டாக்காலி ஆடு, மாடுகளைப் பிடிக்கும் இருவர் நியமனம் செய்யப்பட்டு அவர்களுக்கான அனுமதிக் கடிதங்களும் வழங்கப்பட்டுவருகின்றன.

கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்கும் அனுமதி பெற்றவர்களுக்கு ஊக்குவிப்பு செலவு; பராமரிப்புச் செலவு என்பன வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி மாடு ஒன்றைப் பிடிப்பதற்கு 100 ரூபாவும், ஆடு ஒன்றைப் பிடிக்க 80 ரூபாவும் இவர்களுக்கு வழங்கப்படும். இக்கால்நடைகளைப் பராமரிக்கும் செலவாக ஒருநாளுக்கு மாடொன்றுக்கு 30 ரூபா வீதமும் ஆடு ஒன்றுக்கு 15 ரூபா வீதமும் வழங்கப்படும்.

பயிர்ச்சேதம் விளைவித்த குற்றத்திற்காக மாடு ஒன்றுக்கு 100 ரூபாவும், ஆடு ஒன்றுக்கு 50 ரூபாவும் அவற்றின் சொந்தக்காரர்களிடமிருந்து பெறப்படும்.

இவ்வாறு பிடிக்கப்படும் கால்நடைகளுக்கான உரிமை ஒருவாரத்துக்குள் அவற்றின் சொந்தக்காரர்களிடமிருந்து கோரப்படாதுவிடின் அக்கால்நடைகளை ஏலத்தில் விற்பனை செய்யவும் -

அப்பணத்தில் இருந்து காலநடை பிடித்தோருக்கான கூலி, பராமரிப்பு செலவை வழங்கவும் கமநல சேவை நிலையங்கள் முடிவுசெய்துள்ளன.

இவ்விவரங்களை முதலில் ஒவ்வொரு விவசாய சம்மேளனங்களும் தத்தம் பகுதிகளில் உள்ள விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் போன்றோருக்கு விளக்கி போதிய அறிவுறுத்தல் வழங்கவேண்டும் எனவும் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ். சோதிநாதன் அறிவித்துள்ளார்.

(ம-152)

கடல் வள ஆசிரியர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ். மாவட்டத்தில் கடல்வளம் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரையும் இன்று வியாழக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் ஒன்றுகூடுமாறு யாழ். மாவட்ட தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை கேட்டுள்ளது. (ஒ-9)

ஓம் சாய் ராம்

சத்திய சாயி மனித மேம்பாட்டு வித்தியாலயம்

மானிப்பாய்

ஆண்டு I - அனுமதி - 2004

மேற்படி அனுமதிக்கான படிவங்கள் பாடசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.
வீண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 30.11.2003
ஆண்டு II வகுப்பில் வெற்றிடம் இல்லை.

தலைவர்
நிர்வாகசபை
சத்தியசாயி மனித மேம்பாட்டு வித்தியாலயம்.

மானிப்பாய்.
(15-19)

(23684)

VACANCY

A Vacancy exists in UN supported District Mine Action Office, Jaffna.

Administrative Assistant

Main Responsibilities

a. Maintain the administration, filing system and all correspondence.
b. Maintain and update the inventory of all non expendable items.
c. Maintain administrative control of all consumable items.
d. Maintain all relevant human resources records.
e. Liaise with other agencies.

Applicants are expected to posses the following:

a. Must be a Sri Lankan National as well as a resident of Jaffna.
b. Educated up to G.C.E. A/L standard.
c. Minimum of 2 years clerical experience in the relevant field.
d. Competent and experienced in the Microsoft Office computer package.
e. Have good command of verbal and written English and Tamil.
f. Communication skill in Sinhala would be an advantage.

Send in your detailed resume along with name and address of two referees to the address given below on or before the 22nd October 2003.

District Mine Action Office,
District Secretariat,
Jaffna.

(28679) (21-15-19)

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

15.10.2003

அராலி கிழக்கு,
வாலையம்மன் கோவிலடி
வாலேஸ்வரன் - சிவரஞ்சினி
தம்பதியினரின் செல்வப் புதல்வன்

செல்வன்

வா.விஞ்சன்

அவாகள் தனது முதலாவது பிறந்த நாளை நேற்று (15.10.2003) புதன்கிழமை சுவிஸில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமன்மார், மாமிமார், சித்தப்பா, அத்தைமார், அக்காமார், மைத்துனர்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

நா.சிதம்பரப்பிள்ளை
(அப்பப்பா)

அராலி கிழக்கு. (23688) (21-15-19)

பணிநிலை வேண்டுகை

வருவாய்ப் பகுதியின் ஆளுகையிலுள்ள புளியங்குளம், கிளிநொச்சி, வடக்கன்டல், பளை ஆகிய பகுதிகளிலுள்ள செயலகப் பணிக்குக் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தங்களது தன் வரலாறு அடங்கிய (சுயவிவரம்) வேண்டுகைகளை 2003.10.30 ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பணிநிலைகள்:

01. ஆளுகை மேலாளர் 02. உள்ளகக் கணக்காய்வாளர்
03. கணக்குப் பதிவாளர் 04. எழுதுநர்
05. வெளிக்களப் பணியாளர் 06. வரி அறவிட்டாளர்

கல்வித்தகைமை

பணிநிலை 01, பணிநிலை 02
ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருத்தமான பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு அல்லது உயர் தேசிய டிப்ளோமா அல்லது க.பொ.த.(உ/த) உடன் ஐந்தாண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

பணிநிலை 03, பணிநிலை 04
க.பொ.த. (உ/த) அல்லது க.பொ.த.(சா/த) உடன் மூன்றாண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

பணிநிலை 05, பணிநிலை 06
க.பொ.த.(சா/த) அல்லது ஓராண்டிற்குக் குறையாத தொழில்சார் பட்டறிவு.

வேண்டுகைகள் அனுப்ப வேண்டிய முகவரி:
அலுவலர்,
மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,
வருவாய்ப் பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

நேர்முகத் தேர்வு நடைபெறும்
* நாள்: 2003.10.23
நேரம்: காலை 9.00 மணி
இடம்: வருவாய்ப்பகுதி செயலகம்.
யாழ்சாலை. பளை.
* நாள்: 2003.10.23
நேரம் காலை 9.00 மணி
இடம்: வருவாய்ப்பகுதி செயலகம்.
யாழ்சாலை. கிளிநொச்சி.

குறிப்பு: நேர்முகத் தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பிரிவு,
வருவாய்ப் பகுதி. (23685) (25-15-19)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
27
-
02
-
1917

விண்ணில்
27
-
09
-
2002

திருமதி ஆறுமுகம் சின்னாச்சிப்பிள்ளை

திதி: அபரபக்க ஷஷ்டி (16-10-2003)

பிஞ்சு வயதினில் தந்தையை இழந்த எமக்கு
தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும்
அன்புடனும் பாசத்துடனும் எம்மை அழகூட்டி
வளர்த்த எம் குடும்ப விளக்கே!
ஓராண்டு சென்றாலும் ஆறாது எம்துயரம்

சரவணை மேற்கு, வேலணை.
இல.1, பணிக்கர் வளவு,
திருநெல்வேலி.
(23687) (21-15-19)

- குடும்பத்தினர்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன்

கணபதிப்பிள்ளை பிரபாகரன்

மண்ணுலகில் 1978-04-02
விண்ணுலகில் 2002-09-28

இதயம் கனக்குதையா ஈரவிழி காயவில்லை
எங்கெங்கு நோக்கினும் உன் இனியமுகம் தோன்றுதையா!
உன் புன்னகையும் மென்னகை கண்முன்னே நிற்குதையா!
ஓராண்டென்ன பிரபா ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
மண்ணில் மறையுமட்டும் மாறாது எம்துயரம்.
நம்பியிருந்த எம்மை நட்டாற்றில் கைவிட்டாய்
வெங்கனலாய் வேகுதையா வெம்பியழுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மத்தொனி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(23691) (25-15-19) (23691) (25-15-19)

சர்வதேச தரம் வாய்ந்த NIIT நிறுவனம் யாழ்ப்பாணத்திலும் இப்போது ஆரம்பம்

கணனிக் கற்கை நெறிகளை வழங்கும் உலகின் முன்னணி நிறுவனமான NIIT தற்போது தனது கிளை ஒன்றை யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கின்றது. யாழ். நகரில் இல.347, கஸ்தூரியார் வீதியில் இந்தக் கிளை அலுவலகம் இயங்கும். இதன் ஆரம்பப் பணிகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த நிறுவனத்தின் இலங்கைக்கான நிர்வாக இயக்குநர் சுனில் வீரசூரிய 'உதயனு'க்கு வழங்கிய செவ்வி இது.

கேள்வி: குடாநாட்டில் தகவல் தொழில்நுட்பத்துறையில் காலடி எடுத்து வைக்கும் என்.ஐ.ஐ.ரி (NIIT) நிறுவனம் பற்றி.....?

பதில்: என்.ஐ.ஐ.ரி. ஊடாக டிப்ளோமா கற்கை நெறிகளும் வேறு பல கற்கைநெறிகளும் கற்பிக்கப் படவுள்ளன.

விசேட பாடத்திட்டத்தின் கீழ் இந்தக் கற்கைநெறிகள் வகுக்கப்பட்டுள்ளன. புதிதுபுதிதாக உலகில் அறிமுகமாகும், மாற்றமடையும் விடயங்களும் இப்பாடத்திட்டத்தில் காலத்துக்குக் காலம் சேர்க்கப்படும். நீண்ட கால கற்கை நெறிகளும் குறுகிய கால கற்கை நெறிகளும் இந்த நிறுவனத்தில் உள்ளன.

கேள்வி: இந்தக் கற்கை நெறிகளில் உள்ள முன்னேற்றகரமான அம்சங்கள் என்ன?

பதில்: தகவல் தொழில்நுட்பத் துறையில் பல புதிய நுணுக்கங்களைக் கொண்டதாகவும், சர்வதேச அங்கீகாரம் கொண்டதாகவும் இந்தக் கற்கை நெறிகள் அமைந்துள்ளன. சுமார் 20 வருட காலம் இத்துறையில் அனுபவம் கொண்ட நிறுவனமே இந்த நெறிகளை மேற்கொள்கின்றது.

ஒரு மாணவனின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய வகையில் நவீன முறைகள் கொண்ட இந்தக் கற்கை நெறிகள் வகுக்கப்பட்டுள்ளன.

ஏனைய கற்கை நெறிகள் போன்று விரிவுரையாளர்களின் போதனைகளோ, விரிவுரைகளோ இக்கற்கை நெறியில் இல்லை. விரிவுரைகள் நடத்தி மாணவர்களின் கல்வியை விருத்தி செய்யமுடியாது என்பது ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டதை அடுத்து, மாணவனே நேரடியாகக் கணனியில் செய்முறைமூலம் பயிற்சி பெற இங்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

முதலில் பாடத்திட்டம் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கம் மட்டும் அளிக்கப்படும். பின்னர் அந்த மாணவன் தாமாகவே (ON LINE CLASS) கற்றலைத் தொடரமுடியும்.

கரும்பலகையில் எழுதி ஒரு வகுப்பில் ஒரு மாணவனை 2 அல்லது 3 மணித்தியாலங்கள் வைத்து விரிவுரை செய்வதில் பயன் இல்லை. இதன் காரணமாக சுயமாக மாணவன் தனது கற்கை நெறியைத் தொடர இப்புதிய முறை புகுத்தப் பட்டுள்ளது.

இந்தக் கற்கை நெறியில் வினாப் பத்திரம் என்று எதுவும் மாணவர் கையில் தரப்படமாட்டாது. கணனியில் வினாப்பத்திரம் இருக்கும். அதற்கு விடையைக் கொடுத்துத் தமது பரீட்சை முடிவுகளையும் உடனே பெறக்கூடிய வாய்ப்பு இக் கற்கை நெறியில் உண்டு.

கேள்வி: இக்கற்கை நெறி மூலம் கிடைக்கும் நன்மைகள் எவை?

பதில்: இந்த நிறுவனம் 38 நாடுகளில் கிளைகளைக் கொண்டு இயங்குகின்றது. யாழ்ப்பாணக் கிளையில் வழங்கப்படும் சான்றிதழும் ஏனைய கிளைகளில் வழங்கப்படும் சான்றிதழ்களும் ஒரே தகுதிவாய்ந்தவை. இவை சர்வதேச அங்கீகாரம் பெற்றவை. இந்தச் சான்றிதழ் மூலம் இலங்கையில் மட்டுமல்ல சர்வதேச நாடுகளிலும் வேலைவாய்ப்பைப் பெறமுடியும்.

இந்த நிறுவனம் உலகிலுள்ள ஒன்பது பல்கலைக்கழகங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. எமது நிறுவனத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற ஒருவர் இந்தப் பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது. மூன்று வருடப் பட்டப்படிப்பை மேற்கொள்ள வேண்டுமாயின், எமது சான்றிதழைச் சமர்ப்பித்து இரு வருட விதிவிலக்கைப் பெறமுடியும். ஒரு வருடம் மட்டும் படித்துப் பட்டம் பெறலாம்.

தற்சமயம் தகவல் தொழில் நுட்பத்துறையில் தாராளமாக வேலை வாய்ப்பு உண்டு. எனவே, எமது நிறுவனத்தில் பெறும் சான்றிதழ் உடன் வேலைவாய்ப்பைப் பெற்றுத்தரும்.

கேள்வி: கடந்த கால யுத்தத்தால் எமது பிரதேசம் அழிந்துள்ளது.

எமது மாணவர்கள் பயிற்சிநெறியைப் பின்பற்ற புலமைப்பரிசில் திட்டம் ஏதும் நடைமுறைப்படுத்தப்படுமா?

பதில்: கற்கை நெறியைப் பின்பற்றும் மாணவர்கள் தமது கட்டணத்தை சலுகை அடிப்படையில் செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. மூன்று வருடக் கற்கைநெறியைப் பின்பற்றும் ஒருவர் முதல் வருடத்தின் கற்கை நெறியைப் பின்பற்றி, அதில் கிடைக்கும் பயிற்சியைக் கொண்டு வேலைவாய்ப்பைப் பெற்று, அதன்மூலம் கிடைக்கும் பணம் மூலம் மீதியான நெறியைப் பூர்த்தி செய்யமுடியும். இல்லாவிட்டால் வேலைபார்த்துக் கொண்டே கற்கை நெறியைத் தொடரவும் வாய்ப்பு அளிக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாணவர்களின் பாதிப்பை உணர்ந்து அவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உதவும் நிறுவனங்களை அணுகியுள்ளோம். அந்த நிறுவனங்களின் உதவி கிடைக்கும் பட்சத்தில் புலமைப் பரிசில் திட்டத்தை நடைமுறைப்படுத்துவோம். *

NIIT

பட்டப்படிப்பு, வேலைவாய்ப்பை வெளிநாடுகளில் பெற சந்தர்ப்பம்

சர்வதேச கூரியர் சேவையில் சரித்திரம் படைக்கும் ரி.என்.ரி.

எங்கின் ஸ்பெஸ் தொகுதி நிறுவனத்தின் துணை நிறுவனமான 'ஏஸ் கார்கோ பிறைவேற் லிமிட்டெட்' 1980 களிலிருந்து உலகளாவிய ரீதியில் கூரியர் சேவைக்கு புகழ்பெற்ற ரி.என்.ரி. (T.N.T) நிறுவனத்தின் இலங்கைக்கான முகவராகத் தொழிற்படுகின்றது. (TNTயின் விரிவாக்கம் Thomas Nationwide Transport என்பதாகும்) நெதர்லாந்தை தலைமையகமாகக் கொண்டிருக்கும் ரி.என்.ரி. 220 இற்கும் மேற்பட்ட நாடுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அலுவலகங்களைக் கொண்டு ஒரு வலைப்பின்னலாக தொழிற்படுகின்றது. இலங்கையில் 9 ஆவது கிளையாக யாழ்ப்பாணம் ரி.என்.ரி. அலுவலகம் உள்ளது.

மிகத் துரிதமாகவும், அதி கூடிய நம்பகத்தன்மையுடனும் கூரியர் சேவையை பொதி விநியோக சேவை ஆற்றுவதே ரி.என்.ரி.யின் குறிக்கோளாகும். ரி.என்.ரி. வாடிக்கையாளரை உச்ச திருப்திப்படுத்தும் தரமான சேவையை உலகளாவிய ரீதியில் வழங்கி வருகின்றது. 'முதல் தடவையிலேயே பொதிகள் விநியோகம்' (Right first time) என்ற மகுட வாசகத்துடன் தொழிற்படும் ரி.என்.ரியின் கூரியர் சேவையை எந்த நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

வர்த்தகத்துறை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கூரியர் சேவை பற்றிய விளக்கம் பாட விதானத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

கூரியர் சேவையானது இரண்டு கதவுச் சேவையாகும் அதாவது, பொதிகள் (Parcels) மற்றும் கடிதங்களை கூரியர் சேவையில் அனுப்பும் போது அனுப்புபவரின் (Sender), வீட்டுக் கதவிலிருந்து கிடைக்கப் பெறுபவரின் (Receiver) வீட்டுக்கதவுக்கு மிக விரைவாகக் கொண்டு சென்று விநியோகிக்கப்படுகிறது.

இச்சேவைக்கும் கணனித் தொடர்பு பயன்படுத்தப்படுகின்றது. அதாவது, இங்கிருந்து பொதிகள், கடிதங்கள் அனுப்பப்படும்போது அனுப்புபவர் மற்றும் பெறுபவரின் பெயர், முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் அனுப்பப்படும் பொருள்கள் உட்பட அனைத்து விவரங்களும் கணனித் தொடர்பு மூலம் வெளிநாடுகளில் உள்ள அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இதேபோன்று பெற்றுக்கொண்டவர் பெயர், நேரம், திகதி போன்ற விவரங்களும் கணனி தொடர்புச் சேவையில் பதிவு செய்யப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே வாடிக்கையாளருக்கு விநியோகித்ததற்கான உறுதிச் சீட்டு வழங்கப்படுகின்றது. விநியோக விவரத்தை ரி.என்.ரி. உதவியின்றி வாடிக்கையாளரும் நேரடியாக அறிந்து கொள்ளலாம். அதாவது, வாடிக்கையாளரின் பொதி இலக்கத்தை www.tnt.com என்ற இணையத் தளத்தில் உள்ளீடு செய்வதன் மூலமாகவோ அல்லது track@tnt.com என்ற மின் அஞ்சல் அனுப்புவதன் மூலமாகவோ தாம் அனுப்பிய பொருள் உரிய இடத்துக்கு சென்றடைந்துள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

யாழ்ப்பாணத்திலிருந்து 'ஏஸ் கார்கோ' நிறுவனத்தின் மூலம் உலகிலுள்ள எந்த நாட்டிற்கும் மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 நாள்களில் பொதிகளை அனுப்பலாம். அதேபோன்று வெளிநாட்டில் இருந்து அனுப்புவதை இங்கு பெற்றுக்கொள்ள முடியும். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு 24 மணி நேரத்திலும், கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு 36 மணி நேரத்திலும் பொதிகளை அனுப்பக்கூடிய உள்நாட்டுக் கூரியர் சேவையும் நடத்தப்படுகிறது.

ஆ.டீன்ஸ்ராஜ்

மேலும் பெருந்தொகையான பொருள்களை விமானம் மூலமாகவோ அல்லது மிகவும் குறைந்த கட்டணத்தில் கப்பல் மூலமாகவோ வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு 'ஏஸ் கார்கோ' கைகொடுக்கும். இந்த நிறுவனமானது யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 487 ஆம் இலக்க சிற்றி மெடிக்கல் கட்டடத்தில் ஒரு வருட காலத்தைக் கடந்து இயங்கிவருகிறது. *

மூடும் நிலையில் பிரமுகவங்கி உள்ளது; மத்திய வங்கி அதிகாரி தெரிவிப்பு

சர்ச்சைக்குள்ளாகி உள்ள பிரமுக வங்கியை காலம் தாழ்த்தாது மூடிவிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றே இலங்கை மத்திய வங்கி கருதுகிறது.

- இவ்வாறு கூறியுள்ளார் மத்திய வங்கி அதிகாரி ஜோன் டி.சில்வா.

வாடிக்கையாளர்கள் வைப்பிலிட்ட பணத்தை மீளக்கொடுக்க முடியாமை உட்பட பல சிக்கல்களை கொழும்பை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பிரமுக வங்கி எதிர்நோக்கியுள்ளது. இது தொடர்பாகக் கேட்டபோதே ஜோன் டி.சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

பிரமுக வங்கியின் நிலைமையை ஆழ்ந்து உற்று நோக்குமிடத்து, மேலும் காலம் தாழ்த்தாது அதனை மூடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று மத்திய வங்கி அபிப்பிராயப்படுகிறது. இவ்வாறு மத்திய வங்கியின் மேற்பார்வையாளரான ஜோன் டி.சில்வா கருத்துத் தெரிவித்துள்ளார். பிரமுக வங்கியின் நிலைபற்றி கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளதாக அப் பத்திரிகை மூலம் தெரியவருகிறது. பெரும் வீழ்ச்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் பிரமுக வங்கியை மீளவும் புத்துயிர் பெறவைக்க வேண்டுமாயின் குறைந்த பட்சமாக 13 லட்சம் ரூபா தொகை அந்த வங்கியில் வைப்பிலிடப்பட வேண்டும். பிரமுக வங்கியை சரிவிலிருந்து காப்பதற்காக முன்னின்று முயர் செயற்பட்டு வந்தனர். ஆனால், பிரமுக வங்கி குறித்து மத்திய வங்கி திருப்திகரமான கருத்தைக் கொண்டிருக்கவில்லை என்பதை அறிந்துகொண்டதால், அந்த முயல் இருவர் பிரமுக வங்கியின் தொடர்பைத் துண்டித்துவிட்டனர்.

இதேவேளை, பிரமுக வங்கியை மீளவும் வலுப்படுத்த சட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தகவல்களை பிரமுக வங்கியின் தலைவர் கே.சி. விக்னராசாவுக்கு ஏற்கனவே நாம் வழங்கியுள்ளோம். பிரமுக வங்கியை மீட்டெடுத்த முழு ஒத்துழைப்பும் வழங்க மத்திய வங்கி தயாராகவுள்ளது.

இதேசமயம், பிரமுக வங்கியின் பணிப்பாளர்களில் பலரும் ஏமாற்று மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். இதனை மத்திய வங்கியே குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு தெரிவித்தது. ஆயினும் மோசடி இடம்பெற்றதை நீதிமன்றம் மூலம் நிரூபிக்காத வகையில் அவர்களைப் பகிரங்கப்படுத்த முடியாமலிருக்கின்றது என்றார் மத்திய வங்கி அதிகாரி.

இதேசமயம் பிரமுக வங்கியில் நிதி வைப்பிலிடுவோர் சங்கத்தின் தலைவர் பாலித்த கமகே மத்திய வங்கியின் குறைகூறல்களை ஏற்க மறுத்துள்ளார்.

விவசாயத்தை ஊக்குவிப்பதில் ஹற்றன் நஷனல் வங்கி மும்முரம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாய செய்கையை ஊக்குவிக்கும் முகமாக பயிர்செய்கையாளர்களுக்குத் தேவையான நிதியினை ஹற்றன் நஷனல் வங்கி கடனாக வழங்கி வருகின்றது.

அண்மையில் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கிளை உட்பட இந்த வங்கியின் கிளைகளில் விவசாயிகள், தோட்டக்காரர்கள் போன்றோருக்கு கடனுதவிகள் வழங்கப்படுகின்றன.

விவசாயச் செய்கைக்குத் தேவையான இயந்திர சாதனங்கள், நீர்ப்பாசன இயந்திரங்கள், தெளிகருவிகள் என்பவற்றைக் கொள்வனவு செய்யவும் புதிய நீர்ப்பாசன முறையை மேற்கொள்ளவும் கடன்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன், விலங்கு வேளாண்மைக் கடன் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களுக்கான கடன் போன்ற வசதிகளை ஹற்றன் நஷனல் வங்கிக் கிளைகள் வழங்கி வருகின்றன.

புன்னாலைக்கட்டுவன், ஈவினை போன்ற இடங்களில் உள்ள விவசாயிகள் பலருக்கு இம்மாதத்தில் விவசாய சம்மேளனங்களூடாக கடனுதவிகள் செய்யப்பட உள்ளன.

இக்கடன்களை வழங்குவதற்கு வசதியாக இவ்விடயங்களில் பயிர்ச் செய்கைக்குரிய மொத்த நிலப்பரப்பு, பயிரிடப்பட உள்ள பயிர்கள் போன்ற விவரங்கள் விவசாய சம்மேளனங்கள் ஊடாக திரட்டப்பட்டு வருகின்றன.

25 ஆயிரம் ரூபா தொடக்கம் 40 ஆயிரம் ரூபா வரையான நிதியினை ஒவ்வொரு விவசாயிகளுக்கும் வழங்க உள்ளதாகவும் தெரிய வருகின்றது.

கடந்த வருடத்தில் ஹற்றன் நஷனல் வங்கி யாழ். மாவட்டத்தில் 675 விவசாயிகளுக்கு 17 மில்லியன் ரூபாவை கடனாக வழங்கியிருந்தது. இக்கடனின் பெரும்பகுதி வலிகாமம் பகுதி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதாகவும், குறிப்பாக புன்னாலைக்கட்டுவன் பகுதியில் 30 விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கி உதவியதாகவும் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் தெரிவித்தார். (ஒ-152)

பொலீஸ்மா அதிபர் சேவை நீடிப்பு விடயத்தில்

இனவாதப் போக்கில் ஜனாதிபதி செயற்படுவது கண்டிக்கத்தக்கது!

புதிய இடதுசாரி முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.16

பொலீஸ்மா அதிபருக்கு சேவை நீடிப்பு வழங்கும் விடயத்தில் ஜனாதிபதி இனவாதப் போக்கில் செயற்படுவதைக் கண்டிப்பதாக புதிய இடதுசாரி முன்னணி தெரிவித்துள்ளது.

அக்கட்சியின் சார்பில் நிறைவேறுக்குழு உறுப்பினர் வ.திருநாவுக்கரசு வெளியிட்ட அறிக்கையிலேயே இக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பொலீஸ் மா அதிபர் ர.ஈ.ஆனந்த ராஜா தனக்கு எதிர்பார்த்த சேவை நீடிப்பு வழங்கப்படாததால் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுவிட்டார்.

அரசாங்கம் அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட வேண்டுமென சிபாரிசு செய்திருந்தபோதும் ஜனாதிபதியினால் அனுமதி வழங்கப்படாத நிலையிலேயே அவர் ஓய்வுபெற்றுள்ளார். இவர் சேவை நீடிப்புப் பெறுவதைத் தடுப்பதற்காக சில சக்திகள் செயற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகி இருந்தன. அத்தோடு, ஒரு பத்திரிகை அவர் கடந்த காலத்தில் போதைப்பொருள் கடத்தல் நபர் ஒருவர் நடத்திய விருந்துபசாரத்தில் கலந்து கொண்டதாக செய்தி பரப்பியது.

இவருக்குச் சேவை நீடிப்பு வழங்கக் கூடாது என்ற விதத்தில் சிஹல உறுமய, ஜே.வி.பி. போன்ற சக்திகள் காய்கள் நகர்த்தி இருந்தன. பின்னர் ஜனாதிபதியின் அனுமதியும் மறுக்கப்பட்டுவிட்டது. கடந்த காலத்தில் சில ஆயுதப்படைத் தளபதிகளுக்கு குறிப்பாக கடற்படைத் தளபதிக்கு, எதிராக பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகள் கடந்த காலத்தில் வெளிக்கொணரப்பட்டிருந்த போதும் ஒரு வருடத்திற்கு மேலாக ஒரு தடவையிலேயே சேவை நீடிப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே, ஜனாதிபதி இனவாத சக்திகளின் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயற்படுவது நன்கு புலனாகின்றது. இவ்வாறான கேவலமான இனவாதப் போக்கில் நாட்டுத் தலைவர் செயற்படுவது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

- என்றுள்ளது.

(ஒ)

போலிச் சான்றிதழ்களுடன் 10வருடம் ஆசிரியராகப் பணி

சந்தேக நபர் விளக்கமறியலில்

பதுளை,ஒக்.16

போலி கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து ஆசிரிய நியமனம் பெற்று, 10 வருடங்கள் கடமையாற்றிய ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

பண்டாரவளை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அந்த நபரை நீதிபதி பி.ஏ.ஆர்.சோமசிங்க விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

மேற்படி நபர் எண்கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களில் திறமைச்சித்தி பெற்றார் என்பதற்கான போலிக் கல்விச் சான்றிதழ்களை கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் இடம் பெற்ற நேர்முகப் பரீட்சைகளில் சமர்ப்பித்து ஆசிரிய நியமனம் பெற்றிருக்கிறார். மஹரகம தேசிய கல்வி நிறுவனத்திலும் தமிழ்மொழி மூல ஆசிரிய பயிற்சியையும் பெற்றிருக்கின்றார். பதுளை மாவட்டத்தில் நடைபெற்ற தொலைக்கல்வி நிலையத்திலும் ஆசிரிய பயிற்சி பெற்று அதற்கான சான்றிதழ்களையும் அவர் பெற்றுள்ளார்.

கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம், தேசிய கல்வி நிறுவனம், தொலைக்கல்வி நிலையம் ஆகியவற்றில் கூட மேற்படி போலி கல்விச் சான்றிதழ்கள் பிடிபடாமல் இருந்தது குறித்துப் புலனாய்வுப் பொலீஸார் தீவிரப் புலனாய்வுகளில் ஈடுபட்டுள்ளனர்.

வங்கியில் வைப்பிலிடுவதற்காக கொண்டு சென்ற பணம் கொள்ளை

வங்கியில் வைப்பிலிடுவதற்காக கொண்டு சென்ற லட்சக்கணக்கான ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் மாத்தளையில் இடம்பெற்றுள்ளது.

மாத்தளையிலிருந்து கம்புறுப்பிட்டியவுக்கு வானொன்றில் கொண்டுவரப்பட்ட பணமே கொள்ளையடிக்கப்பட்டது என்றும் -

வானைப் பின்தொடர்ந்து வாகனமொன்றில் வந்தவர்களே இந்தக் கொள்ளையை மேற்கொண்டுள்ளனர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

பணம் கொண்டு சென்ற வான், விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த ஒருவர் படுகாயமடைந்தார்.

கொள்ளையிடப்பட்ட முழுத் தொகை பற்றி கணக்கெடுக்கப்படவில்லை. பல லட்சங்கள் கொள்ளையிடப்பட்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது. பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இசை அமுதம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

வடபிராந்திய சத்தியசாயி சேவா நிறுவன இளைஞர் பிரிவு நடத்தும் 'இசை அமுதம்' நிகழ்ச்சி நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-4)

குணப்படுத்த முடியாத நோயென அஞ்சும் நிலை விரைவில் மாறும்!

உலகில் குணப்படுத்த இயலாத நோய்களெனச் சில நோய்கள் கருதப்படுகின்றன. குணப்படுத்த இயலாது என்பது, அந்நோய்க்கான மருந்து இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பதாகும். ஆயினும், தினமும், இத்தகைய நோய்கள் சம்பந்தமான பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கண்டுபிடிப்புகளும் வெளியிடப்படுகின்றன. இவற்றின் இறுதி முடிவு நோய்க்கு நிச்சயமான மருந்தொன்றைப் பெறுவதேயாகும்.

குணப்படுத்த இயலாத அல்லது சிரமமானதென இதுவரையில் கருதப்பட்ட, சில நோய்களுக்குப் பயனளிக்கக்கூடிய மருந்துகள் தயாரிக்கப்படுவதாக அண்மையில் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவற்றுள் எய்ட்ஸ், புற்றுநோய், மற்றும் மூளை சம்பந்தப்பட்ட நோய்களைத் தடுப்பதற்கான மருந்துகள் முக்கியமானவையாகும். இன்று இத்தகைய நோய்ப்பாதிப்புகள் அதிகரித்துள்ளமையால் அவைகளுக்கான மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் பெறுமதி மிக்கவையாகும்.

எய்ட்ஸ்

எய்ட்ஸ் நோய்க்கென்று இதுவரையில் தகுந்த மருந்தொன்று கண்டுபிக்கப்படாததால் அநேகமபேர் இறந்துள்ளனர். இந்நோய் ஏற்படாது பாதுகாப்பாக இருப்பது மட்டுமே இதற்கு மருந்தாக உள்ளது. ஆயினும், அநேகம்பேர் இந்நோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்நோய்க்கான மருந்தைப் கண்டுபிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டப்பட்டது. அதன் பிரதிபலனாக நீண்டகால ஆய்வுகளின் முடிவில் சில மருத்துகள் கிடைந்துள்ளன. அவற்றுள் மிக முன்னேற்றகரமான ஒரு மருந்தைக் கண்டறியும் வாய்ப்பு தற்போது கிடைத்துள்ளது.

இம்முறை கண்டுபிடிக்கப்பட்டுள்ள மருந்து, உலகடங்கிலும் தாமாகவே முன்வந்தவர்களை ஆய்வுக்குட்படுத்தியதன் மூலம் பரீட்சிக்கப்பட்டுள்ளது. இம்மருந்து இதுவரையில் இவ்வாறு 27 தடவைகள் பரீட்சிக்கப்பட்டுள்ளது. வட கலிபோர்னியாவிலுள்ள டியூக பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி பார்ட்டன் ஹாய்ன்ஸ் இம்முறை பல்வேறு விதமான தடுப்புமுறைகள பற்றி அவதானிக்கப்படுவதாகக் கூறியுள்ளார். இதன் மூலம் சிறந்த பலாபலன்களை எதிர்பார்ப்பதாக நிபுணர்க்கில் நிகழ்ந்த 'எய்ட்ஸுக்கான, மருந்தொன்றைக் கண்டறிவது' சம்பந்தமான சம்மேளனத்தின் கூட்டத்தில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இம்முறை இடம்பெற்ற இச்சம்மேளனத்தில் சுமார் ஆயிரம் ஆய்வாளர்கள் பங்கேற்றனர். அங்கு 'வைகுரி' காய்ச்சலை உருவாக்கும் வைரஸின் ஜீன்களையும் எய்ட்ஸுக்கான வைரஸின் ஜீன்களையும் ஒருங்கிணைத்து உருவாக்கக்கூடிய மருந்தொன்றினைக் கண்டறிவதற்கான கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அதேபோன்று, போலியாபோவுக்கான வைரஸையும், விலங்கின வைரஸையும் இணைத்து மருந்தொன்றைக் கண்டறிவதற்கான கருத்துக்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

'இங்கு தெளிவாகக் கூறவேண்டியது யாதெனில், நாம் இந் நோயைப் பூரணமாகக் கட்டுப்படுத்தும் மருந்தைக் கண்டறியவில்லையென்பது தான். ஆயினும், எய்ட்ஸைக் கட்டுப்படுத்தக் கூடிய திறன்வாய்ந்த சில மருந்துகளை இன்று நாம் கண்டறிந்துள்ளோம்' என்று பார்ட்டன் ஹாய்ன்ஸ் கூறினார்.

எவ்வாறாயினும், இவ்வருட ஆரம்பத்தில் அறிமுகமான "எய்ட்ஸ்வக்ஸ்" என்ற தடுப்பு மருந்து, எய்ட்ஸைக் கட்டுப்படுத்துவதில் பயனளிக்கவில்லை என்பது ஏற்கனவே தெளிவாகியுள்ளது. தற்போது கண்டுபிடிக்கப்பட்ட எய்ட்ஸுக்கான சகல மருந்துகளும், நூறு விதமான பயனைத் தராது என்பது இதன் மூலம் தெரிகிறது. என்றாலும், உலகிலுள்ள பல்வேறு விஞ்ஞானிகளும், தனியார் நிறுவனங்களும எய்ட்ஸுக்கான மருந்தொன்றைக் கண்டுபிடிக்கப் பெரிதும் முயல்கின்றன. இம்முறை நிகழ்ந்த எய்ட்ஸ் சம்பந்தப்பட்ட மாநாட்டில் அநேகமான ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் எய்ட்ஸுக்கான மருந்தொன்றைக் கண்டறிவதற்கான முயற்சிகள் பற்றிய தகவல்கள், முக்கிய இடத்தைப்பெற்றன. முன்பிருந்ததைவிட இன்று எய்ட்ஸுக்கான மருந்தைக் கண்டறியும் முயற்சிகள் மிக மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன.

எய்ட்ஸ் நோய்க்கான வைரஸ் எமது உடலுக்குள் புகுந்தவுடன், நோயெதிர்ப்புச் சகதியை ஊக்குவிக்கும் புரோட்டீன்கள் அவ்வைரஸ்களுக்கு எதிராகப் போரிடுகின்றன. ஆயினும், ஏற்கனவே றெட்ரோ ஆய்வுகளுக்கு அமைய "T" செல்களோடு புரோட்டீனையும் இதற்கு எதிராகப் பயன்படுத்த வேண்டியுள்ளதாக அறியப்பட்டுள்ளது. இத்தகைய ஆய்வுகளுக்கு அதிகமானோரை ஆய்வுகளுக்குட்படுத்த வேண்டியேற்படலாமெனவும் தெரிகிறது. தற்போது நிகழ்த்தப்படும் ஆய்வுகளில் 25சதவீதம் வெற்றியளிக்குமாயின், பயனளிக்கக்கூடிய மருந்தொன்றைக் கண்டுபிடிக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்படும்.

இன்று வரையில் உலகில் எய்ட்ஸ் தாக்கத்தினால் 2 கோடியே 80லட்சம பேர் இறந்துள்ளதாகக் கணிக்கப்படடுள்ளது. 2001 ஆம் ஆண்டில் மட்டும் இந்நோய்த் தாக்கத்தால் 50 லட்சம் பேர் இறந்துள்ளதாகத் தெரிகிறது. இதனால் உடனடியாக இந்நோய்க்கான மருந்தொன்றைக் கண்டறிவது மிக அவசியமானதாகக் கருதப்படுகிறது.

பாகின்ஸன்

பாகின்ஸன் நோய் உள்ளிட்ட, ஏனைய மூளை சம்பந்தமான நோய்களுக்கு, குளோனிங் முறையில் மருந்தொன்றை உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக, அமெரிக்க விஞ்ஞானிகள் அண்மையில் தெரிவித்துள்ளனர். எலிகளைப் பயன்படுத்தி நிகழ்த்தப்பட்ட அதற்கான ஆய்வுகள், மூளையின் செல்கள் பாதிக்கப்படுவதால் உருவாக்கும் மூளை சம்பந்தமான நோய்களுக்கு, குளோனிங் முறையில் உருவாக்கப்படும் செல்களைப் பயன்படுத்துவதன மூலம் அதிக பயன்களைப் பெற முடியுமென நிரூபித்துள்ளன. நியூயோர்க்கிலுள்ள புற்றுநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள், பாகின்ஸன் நோய்த தாக்கத்திற்குற்பட்ட எலிகளின் மூளைக்கு விருத்தியாக்கப்பட்ட வேறு செல்களை உட்செலுத்துவதன் மூலம், பாதிப்படைந்த செல்களை முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வர முடியுமெனத் தெரிவித்துள்ளன.

இதற்கமைய ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆறு எலிகளுக்குச், செல்கள் உட்புகுத்தப்பட்ட பின்னர் அவை முன்பிருந்த நிலையை அடைந்துள்ளதோடு, அவற்றின் மூளையை ஆய்வுகளுக்குட்படுத்தியதின் விளைவாக அவற்றின் மூளையில் பாதிப்படைந்த செல்கள் முன்பிருந்த நிலையைப் பெற்றுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

இதற்கமைய, மனிதர்களுக்கு ஏற்படும் பாகின்ஸன் போன்ற நோய்களின் போதும் இத்தகைய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த முடியுமென விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இச் செயல்முறை வெற்றியளிக்குமாயின், இடத்துக்கேற்ப தம்மை மாற்றிக்கொள்ளும், ஆரம்ப நிலையிலிருக்கும் செல்களை, மூளைக்கு உட்செலுத்துவதன் மூலம், நோயைக் குணப்படுத்த முடியுமென, விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

மார்பகப் புற்றுநோய்

மார்பகப் புற்றுநோய் என்றதும் அநேகர் பீதியடைகின்றனர். இப்பீதி காரணமாகவே மார்பகப் புற்றுநோய்க்கான மருந்தொன்றைக் கண்டறிவதற்கு நீண்டகால ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அண்மையில் இது சம்பந்தப்பட்ட இரண்டு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. "டொக்டெக்ஸல்" மற்றும் "பெக்லி டெக்ஸல்" என்னும் இவ்விரு மருந்துகளும் மார்பகப் புற்றுநோய்க்கு அநேகரால் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும், இவை இரண்டிலும் சிறந்த ஒன்றைக் கண்டறிவதற்கு நீண்டகால முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்படி "டொக்டெக்ஸல்" மருந்தைப் பயன்படுத்திய மார்பகப் புற்றுநோயாளர்கள் சுமார் 15 மாதங்களில் அந்நோயிலிருந்து விடுபட்டுள்ளனர். மற்றைய மருந்து சுமார் 12மாதங்களில் பயன்தந்துள்ளது.

இம் மருந்துகளின் செயற்பாடு, மார்பகப் புற்றுநோய்க்குக் காரணமான செல்களை அழிப்பதாகும். அதேவேளை, சரீரத்தின் ஏனைய பகுதிகளுக்குப் பரவுவதற்குக் காரணமாயுள்ள செல்களை அழிப்பதற்கான திறனையும் இம்மருந்துகள் கொண்டுள்ளன. மேலும், மார்பகப் புற்றுநோயின ஆரம்ப நிலையை இனங்கண்டு, இம் மருந்தைப் பயன்படுத்துவதன் மூலம சுலபமாக இந்நோயைக் குணப்படுத்த முடியும் ஆயினும், இதன் பக்க விளைவுகள் அதிகமாக உள்ளன. குருதியிருள்ள வெண் அணுக்களின் அளவைக் குறைத்தல், உடலின் சக்தியைப் பலவீனப்படுத்தல் போன்ற பக்க விளைவுகள் இதனால் ஏற்படலாம். எனவே, மார்பகப் புற்றுநோயினால் தாக்கப்பட்டோர் இம்மருந்தைப் பயன்படுத்துவதற்கு முன்னர் இருமுறை சிந்திக்க வேண்டியுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். ஆயினும், இன்றைய நிலையில் இம் மருந்து பயனளிக்கக்கூடிய ஒன்று என்றே கூற வேண்டியுள்ளது.

இதற்கிடையில், சிறு குழந்தைகளைப் புற்றுநோயிலிருந்து பாதுகாக்க வேண்டிய நிலை கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் அதிகரித்துள்ளதாக ஐரோப்பாவில் மேற்கொள்ளப்பட்ட புற்றுநோய்க்கான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. புற்றுநோயின் தாக்கத்திற்கு உள்ளான பகுதி மேலும் விரிவடையாது உடலில் ஒரே நிலையில் நிலைகொண்டிருக்கும் கால அளவு அதிகரித்துள்ளதற்கான சான்றுகளும் இவ்வாய்வுகளின் மூலம் வெளிப்பட்டுள்ளது. புற்றுநோயால் பாதிப்புறும் குழந்தைகள், குறைந்தபட்சம் ஐந்து வருடங்களுக்கு மேலாக உயிர் வாழ்ந்துள்ளதாகவும் இவ்வாய்வுகள் மூலம் நிரூபணமாகியுள்ளன.

- சரா -

ஆயினும், புற்றுநோய்க்கான மருந்துகளைப் பெறும் குழந்தைகள், பக்க விளைவுகளை அதிகமாக எதிர்கொள்வது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. குழந்தைகளின் ஞாபக சக்தி அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதும், தீர்மானித்தலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது. ஆயினும், ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளின் மூலம், அதிக பலாபலன்களைப் பெறும் நிலை இன்று உருவாகியுள்ளது.

புதிய மருந்துகளின் திறன் இத்தகையதே ஆயினும், உயிர்கொல்லி நோய்களுக்கு நிரந்தரமான சிகிச்சைகள் இன்னமும் கண்டறியப்படவில்லை. இவ்வாறான முயற்சிகள், அத்தகைய நிரந்தரமான கண்டுபிடிப்புகளுக்கு அடித்தளமாக அமைவது நிச்சயம்.

2 ஆம் கட்ட போலியோ தடுப்பு மருந்து குடாநாட்டில் சனியன்று வழங்கப்படும்

வடக்கு - கிழக்கில் 10வயதுக் குட்பட்ட சகல பிள்ளைகளுக்கும் இந்த ஆண்டுக்குரிய இரண்டாம் கட்ட போலியோ தடுப்பு சொட்டு மருந்து நாளைமறுதினம் சனிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் மாகாண பதில் பிரதிப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி இந்தச் சொட்டு மருந்தைப் பெற்றுக் கொண்ட 10 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளும் எதிர்வரும் சனிக் கிழமை இரண்டாவது தடவையாகவும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் பிரதிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 150 இற்கு மேற்பட்ட நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் -

இந்த நிலையங்களில் காலை 7 மணியில் இருந்து மாலை 4 மணி வரையும் சொட்டு மருந்து வழங்கும் பணிகள் நடைபெறும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், சூழல் மற்றும் சுகாதார வசதிக் குறைபாடுகள் என்பவற்றாலும் அண்டை நாடுகளிலிருந்து போலியோ நோய் தொற்றக்கூடிய சாத்தியம் உள்ளதாலும் போலியோ நோய் தடுப்பு சொட்டு மருந்தை 10 வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரதிப் பணிப்பாளர் வலியுறுத்தினார். (ம-10-30)

அரசியலில் இருந்து பிக்குகள் விடுபட்டால் சமாதானம் வரும்

சமாதானக் குழுக் கூட்டத்தில் சந்திரநேரு எம்.பி.

பிக்குமார் அரசியல் நடவடிக்கையிலிருந்து என்று விடுபடுகிறார்களோ அன்றுதான் சமாதானம் மலரும்.

அக்கரைப்பற்று சமாதானக் குழுக கூட்டத்தில் பேசிய அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு இவ்வாறு தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஸ்ரீவிஜயராம விகாராதிபதி தேவகொட சொரத்த தேரோ தலைமையில் கடந்த 11 ஆம் திகதி சமாதானக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய சந்திர நேரு எம்.பி. மேலும் கூறியதாவது:-

முழு நாடும் சமாதானத்தைத் தேடிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், தெற்கில் ஜே.வி.பியினரும் பிக்குகளும் சமாதானத்தை குழப்ப முயன்று வருகின்றனர். இந்த நிலையில் அக்கரைப்பற்று விகாராதிபதி சமாதானக் கூட்டத்தைக் கூடியிருப்பது வரவேற்கத்தக்கது.

கொழும்பிலுள்ள பிக்குகள் பென்ஸ காரில் வலம்வந்து சொகுசு வாழ்க்கையில் ஈடுபடுகின்றனர். அதேவேளை இப்பகுதிவாழ் பிக்குகள் கஷ்டத்தின் மத்தியில் வாழ்வது வேதனை தருகின்றது - என்று கூறினார்.

அங்கு அக்கரைப்பற்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி புகாரி பேசுகையில், யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும்போது கஷ்டப்பட்டவர்களைக் கண்டு வேதனையடைந்தேன் ஆனால் எமது முகாம்களில் உணவு விரயமாகச் சிந்தப்படுகிறது. எனவே, இவ்விடயத்தில் சமநிலை வேண்டும். அதற்குச் சமாதானம் தேவை - என்றார்.

தீவுப் பகுதிக்கெனக் கட்டப்பட்ட அம்புலன்ஸ் மோட்டார் படகு சமுத்திர தீபம் கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்து ஊர்காவற்றுறைக்கு எடுத்து வரப்படுவதற்கு முன்னதாக இடம்பெற்ற சமய நிகழ்ச்சிகளின் போது யாழ். அரச அதிபர் கே.பத்மநாதன் தேங்காய் உடைத்து நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்த போது எடுத்த படம் இது. படகு கட்டுமானப் பணிக்குப் பொறுப்பாக இருந்த ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் காணப்படுகின்றார். (படம்: நெடுந்தீவு நிருபர்)

தீவுப்பகுதிக்கான அம்புலன்ஸ் படகு சுகாதார சேவைகள் திணைக்களத்திடம்

நெடுந்தீவு,ஒக்.16

தீவுப்பகுதி நோயாளர் சேவைக்கென கட்டப்பட்ட அம்புலன்ஸ் மோட்டார் படகான 'சமுத்திர தீபம்' நேற்று புதன்கிழமை ஊர்காவற்றுறையில் வைத்து சுகாதாரச் சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் படகை யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ்.சிவபாதத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

'சமுத்திர தீபம்' பாதுகாப்புக் காரணங்களுக்காக நயினாதீவில் நிறுத்தப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், இந்தப் படகுச் சேவையை நெடுந்தீவில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்று நெடுந்தீவு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

'சமுத்திர தீபம்' படகின் பணிகளுக்கென அகதிகளுக்கான ஐநா. தூதரகம் 50 லட்சம் ரூபாவை வழங்கியிருந்தது. (ம-111)

சட்ட விரோதமாக மின்பெறுவோரால் மக்களுக்கு சிரமம்

கரவெட்டி,ஒக்.16

வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோரின் தொகை அதிகரித்துக் காணப்படுவதால் அங்கு அடிக்கடி மின் தடை ஏற்படுவதாக தெரிவிக்கின்றனர்.

அத்துடன், வீதியோரங்களில் காணப்படுகின்ற மரங்களும் இந்த மின் தடைக்குக் காரணமாக உள்ளன. அவை வெட்டப்படாமல் உள்ளன.(ஒ-10-70)

கொடிகாமத்தில் இராணுவ நடமாட்டம் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.16

கொடிகாமம், நாகநாதன் வீதியில் அமைந்துள்ள குடிமனைப் பகுதிகளில் இரவு நேரங்களில் இராணுவத்தினரின் நடமாட்டம் கடந்த வாரம் முதல் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாகநாதன் வீதியில் இரவு 9 மணிக்குப் பின்னர் படையினர் நடமாடுகின்றமையினால் அப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-6)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள

600 மருத்துவ மாதுக்கள் வெற்றிடங்களுக்கு 14 விண்ணப்பங்கள் மட்டுமே கிடைத்தன!

காரைதீவு,ஒக்.16

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 600 மருத்துவ மாதுக்களுக்கு (Midwives) வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதும், 14 விண்ணப்பங்களே கிடைத்தன என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்திருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இருந்து இப்பதவிக்கென பலர் விண்ணப்பித்திருந்தனர். எனினும், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களை இப்பதவிக்கு சேர்க்கக்கூடாது என்றும், ஜி.சீ.ஈ. (உயர்தர்ப்) பரீட்சையில் சித்தியெய்தியவர்களையே இப்பதவிக்கு சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றும் மருத்துவ மாதுக்களின் தொழிற்சங்கம் வலியுறுத்தியிருந்தது.

இதனால், மீண்டும் இப்பதவிக்கு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களை விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டது.

அதற்கான முடிவுதிகதி வரைக்கும் 14 விண்ணப்பங்களே கிடைத்துள்ளன.

இப்பதவிக்கு 600 வெற்றிடங்கள் நிலவுகின்றபோதும் 14 விண்ணப்பங்களே கிடைத்திருப்பதால், மருத்துவ மாது பதவிக்கான வெற்றிடம் மேலும் நிலவுமென்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது. (ம)

தலைமைத்துவ பயிற்சிகள்

நெடுந்தீவு,ஒக்.16

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் ஜே.எக்ஸ் செல்வநாயகம் தலைமையிலான தலைமைத்துவ பயிற்சி முகாம எதிர்வரும் 20ஆம், 21ஆம், 23ஆம் திகதிகளில் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சி முகாமில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு தொடர்பான விடயங்களில் மக்களைப் பங்காளர்களாக்குவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (ம-10-111)

தமிழர் ஒற்றுமையின் அவசியத்தை அமைச்சர் சந்திரசேகரன் வலியுறுத்து

கொழும்பு,ஒக்.16

உலகம் முழுவதும் பரந்து வாழும் தமிழர்கள் ஒற்றுமைப்பட வேண்டும் என்றுதான் நான் நேர்வேயில் உரையாற்றினேன். ஆனால், சில சிங்கள ஊடகங்கள் 'உலகத் தமிழர்களின் தலைவர் பிரபாகரன் என்று நான் நேர்வேயில் உரையாற்றினேன் என்று செய்தி வெளியிட்டன.

அமைச்சர் பெ.சந்திரசேகரன் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றிய விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

உலகத் தலைவர்களைத் தமிழர்கள் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தவர் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான். இலங்கையில் தமிழர்கள் ஒன்றுபடவேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்கள், மட்டக்களப்பு தமிழர்கள், மலையகத் தமிழர்கள், கொழும்புத் தமிழர்கள் என்று இலங்கையில் தமிழர்கள் பல கூறுகளாகப் பிரிந்துள்ளனர். தமிழர்கள் ஒன்றுபட்டால் தான் உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

மக்களின் உணர்வுகளுக்கு அங்கீகாரம் வழங்குவது போல் பத்திரிகையாளர்கள் செயற்படுகின்றார்கள். இதேவேளை, சில ஊடகங்கள் மக்கள் மனதில் நச்சு விதைகளைத் தூவுவதுபோல செய்திகளை வெளியிடுகின்றன. நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குபவர்கள் நடுநிலையான செய்தியாளர்கள். இவர்களை சமூக சிற்பிகளாகவே நான் காண்கின்றேன். அதிகாலை வேளையில் எமது இல்லங்களில் பத்திரிகையாளன் செய்தி வடிவில் அனுமதியின்றி உள்ளே நுழைகின் றான்.

சமஷ்டி ஆட்சியென்பது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டது. இங்கு சமஷ்டி ஆட்சியைத் தீண்டத் தகாததைப்போல் பலர் பார்க்கின்றார்கள். இது குறித்து பத்திரிகையாளர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் ரீதியில் எழுதவேண்டும்.

- இவ்வாறு அமைச்சர் கூறினார்.(ம)

நள்ளிரவில் நடமாடியோர் பொது மக்களிடம் பிடிபட்டனர்

நள்ளிரவு வேளையில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நால்வரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்த சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12.30 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் இடம்பெற்றது.

இரவு 11.00 மணியளவில் இவர்களின் நடமாட்டத்தை அவதானித்த பொதுமக்கள் விழிப்புடன் இருந்ததாகவும் -

நள்ளிரவு வேளையில் இந்த நால்வரும் தமது மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளை மறைவாக ஓரிடத்தில் நிறுத்திவிட்டு வீடொன்றுக்குள் நுழைய முற்பட்ட வேளையில் பொதுமக்கள் சுற்றி வளைத்துப் பிடித்ததாகவும் - தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இந்த நால்வரையும் அவர்களின் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவற்றையும் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் பொதுமக்கள் ஒப்படைத்தனர். (ஒ-117)

இந்தியாவிலிருந்து திரும்பியோருக்கு நெடுந்தீவில் அவசர உதவிகள்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கியது

யாழ்ப்பாணம்,ஒக்.16

நீண்டகாலத்தின் பின் இந்தியா விலிருந்து சொந்த இடமாகிய நெடுந்தீவுக்கு வந்து மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஒரு தொகுதி அவசர அடிப்படை மனிதாபிமான உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட பணிப்பாளர் சு.ஜெயராஜ் தலைமையில் நேற்றுமுன்தினம் நெடுந்தீவு சென்ற குழுவினரால் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ், தமிழர் புனர்வாழ்வுக்கழக தீவக மக்கள் அபிவிருத்தி நலன் காப்பக இணைப்பாளர் மா.சுகுனேஸ்வரன், நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ்.பேரானந்தம், அனலைதீவு உப தபால் அதிபர் எஸ்.கணேசலிங்கம் ஆகியோர் இம்மனிதாபிமான உதவிப் பொருள்களை வழங்கினர்.

இதில் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா இரண்டாயிரத்து 500 ரூபா பெறுமதியான பாய்கள், படுக்கை விரிப்புகள், உடுபுடைவைகள், பால் மா பைக்கற்றுகள், சவர்க்காரங்கள், பானை, வாளி, கேத்தல் என்பன வழங்கப்பட்டன.

இதேவேளை -

நெடுந்தீவுக்குச் சென்ற புனர்வாழ்வுக் கழகத்தினர் அப்பிரதேசத்தில் உள்ள முன்பள்ளிகளுக்கு நேரில் சென்று மாணவர்களும் ஆசிரியர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் ஆராயந்ததோடு, பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் பெற்றோர்களுடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர். (ம-5)

முதியோர், நலிவுற்றோர் கௌரவிப்பு விழா

குரும்பசிட்டி நலிவுற்றோர் நலனோம்பு நிலையம் நடத்தும் முதியோர், நலிவுற்றோர் கௌரவிப்பு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி உரும்பிராய் சைவத் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா எ.லி. வடக்கு பிரதேச செயலாளர் க.குணராசா, சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் செ.யோகராசா மற்றும் உள்ளூராட்சித் திணைக்கள சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஹேமலா சிவசோதி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

இவ்விழாவிற்கு குரும்பசிட்டியைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களையும், நலிவுற்றவர்களையும் கலந்துகொள்ளுமாறு நலிவுற்றோர் நலனோம்பு நிலையத் தலைவர் ரி.வி.கிருஸ்ணசாமி கேட்டுள்ளார். (ம-5)

இந்தியாவில் இருந்து தமது சொந்த இடமாகிய நெடுந்தீவில் மீளக்குடியேறியுள்ள குடும்பங்களுக்கு அவசர மனிதாபிமான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ். பேரானந்தம் ஆகியோர் உதவிப் பொருள்களை வழங்குகின்றனர். (படங்கள் : வசந்தன்)

அனாகோர்ணிகோவா ஓய்வு?

டென்னிஸ் உலகின் கவர்ச்சி வீராங்கனையான அனாகோர்ணிகோவா போட்டிகளில் இருந்து தாம் ஓய்வு பெற்றுவிட்டார் என்று சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவைச் சேர்ந்த 22 வயதான கோர்ணிகோவா, முதுகெலும்பில் ஏற்பட்டுள்ள உபாதையினால் பாதிக்கப்பட்டுள்ளார். இவ்வருடம் 5 சுற்றுப் போட்டிகளில் மாத்திரமே அவர் பங்கு பற்றினார். சில கண்காட்சி இரட்டையர் போட்டிகளில் தற்போது பங்கு பற்றிவருகிறார்.

இந்நிலையில் 'உலக இசை விருது' வழங்கல் நிகழ்வில் பங்குபற்றிய கோர்ணிகோவா, நிருபர்களிடம் பேசுகையில்,

"100 சதவீதம் குணமடையாமல் முக்கிய போட்டிகளில் விளையாட விரும்பவில்லை. தற்போதும் கண்காட்சிப் போட்டிகளில் பங்குபற்றுகின்றேன் ஆனால் முக்கிய சுற்றுப்போட்டிகளின் அட்டவணைக்கு என்னால் ஈடுகொடுக்க முடியாது.

ஒவ்வொரு நாளின் இறுதியிலும் நான் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என எண்ணுகிறேன் அதை இழக்க நான் விரும்பவில்லை.

5 வயதில் நான் டென்னிஸ் விளையாட ஆரம்பித்தேன், அதன் பின் 17 வருடங்களாக தினமும் கடினப் பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறேன்.

டென்னிஸ் தான் எனது வாழ்க்கை அடுத்து என்ன என்பதை இப்போது கூற முடியாது ஆனால் ஜனவரி மாதம் நிலைமையைப் பார்க்கலாம்" என்றார்.

இரட்டையர் போட்டிகளில் பல சம்பியன் பட்டங்களை கோர்ணிகோவா வென்றுள்ளார். எனினும், 100 இற்கு மேற்பட்ட ஒற்றையர் போட்டிகளில் விளையாடியபோது அவர் இப்பிரிவில் சம்பியன் பட்டங்களைப் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், 'மொடலிங்' துறை யில் அவர் கோடிக்கணக்கான டொலர்களை சம்பாதித்துள்ளார்.

விளையாட்டு

கிரிக்கெட் ஒளிபரப்பு உரிமைக்கு ஐந்து நிறுவனங்கள் போட்டி

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை வெளிநாடுகளில் ஒளிபரப்புவதற்கான உரிமைக்கு 5 நிறுவனங்கள் விண்ணப்பித்துள்ளன.

- இவ்வாறு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

டென் ஸ்போர்ட்ஸ் (தாஜ் ரீ.வி), பி.சி.எம்.ஸ்போர்ட்ஸ் (இந்தியா), பிரைவட் லிமிட்டட், வேர்ல்ட் ஸ்போர்ட்ஸ் நிம்பஸ் (டபிள்யூ. எஸ்.என்), டிரான்ஸ் வேர்ல்ட் இன்டர்நெஷனல், செட் சட்டலைட் (சோனி என்டர் டெய்ன்மண்ட் ரீ.வி) ஆகியனவே இந்நிறுவனங்களாகும்.

இதேவேளை, ஈ.எஸ்.பி.என் மற்றும் தூர்தர்ஷன் ஆகிய நிறுவனங்கள் இந்திய அணியின் இலங்கை விஜயத்தின்போது நடைபெறும் போட்டிகளை மாத்திரம் ஒளிபரப்பும் உரிமையைப்பெற விண்ணப்பித்துள்ளன.

இவ்விடயங்களை கையாள்வதற்கான பொறுப்பை கணக்காய்வு நிறுவனமொன்றிடம் ஸ்ரீ லங்கா - கிரிக்கெட் கையளித்துள்ளது.

சிநேகபூர்வ உதைபந்தாட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.16

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

16, 18, 20 வயதுப்பிரிவினர்களுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ம-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஒக்.16

சென்ற்றிக்ஸ் கல்லூரிக்கும், ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் சென்ற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் கல்லூரிகளின் 14, 16, 18 மற்றும் 20 வயதுக்குட்பட்ட அணிகள் மோதுகின்றன. (எ-9)

யங்ஸ்ரார் சம்பியன்

வலி.வடக்கு,ஒக்.16

உடுவில் கல்விக் கோட்ட ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் அமரர் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்தமாக கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் நடத்திய ஆறுபேர் கொண்ட அணிகளுக்கிடையேயான 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் சென்றலைட் (சொக்ஸ்) விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறுதியாட்டம் இடம்பெற்றது.

மட்டுப்படுத்திய 5 ஓவர்களில் 3 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களை யங்ஸ்ரார் அணி பெற்றது.

சென்றலைட்ஸ் சொகஸ அணி 3 இலக்குகளை இழந்து 62 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இப்போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இரண்டாவது போட்டி ஆரம்பம்; சௌரவ் கங்குலி விலகினார்!

இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பஞ்சாபிலுள்ள மொஹாலி நகரில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டியிலிருந்து இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி விலகியுள்ளார். இதனால் ராகுல் திராவிட் இந்திய அணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அஹமதாபாத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் போது சௌரவ் கங்குலிக்கு இடது தொடையில் உபாதை ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் அவர் வலைப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது அதிக வலியை உணர்ந்தார். அதையடுத்து, அவருக்கு சத்திரசிகிச்சையொன்று மேற்கொள்ளப்பட்டது. கங்குலி குறைந்தபட்சம் 24 மணித்தியாலயம் ஓய்வு பெறவேண்டுமென மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இதனால் இன்று ஆரம்பமாகவுள்ள போட்டியில் கங்குலி விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"எனக்கு வலி அதிகமாக உள்ளது. இப்போட்டியிலிருந்து விலகுவதைத் தவிர வேறு வழியில்லை"

- இவ்வாறு கங்குலி கூறினார்.

கங்குலியின் தலைமையில் இந்திய அணி இதுவரை 13 டெஸ்ட் போட்டிகளில் வென்றுள்ளது.

அதிக டெஸ்ட் வெற்றிகளைப் (14) பெற்ற இந்திய அணித்தலைவர் எனும் மொஹமட் அஸாருதீனின் சாதனையை சமன்செய்வதற்கு கங்குலிக்கு இன்னும் ஒரேயொரு டெஸ்ட் வெற்றியே தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கங்குலி விலகியுள்ளமையால் இந்திய அணிக்கு ராகுல் திராவிட் தலைமை தாங்கவுள்ளார்.

2001-02ஆம் ஆண்டு தென்னாபிரிக்க சுற்றுலாவின்போது டெஸ்ட் போட்டியொன்றில் இந்திய அணிக்கு திராவிட் தலைமை தாங்கினார். இந்தியா அப்போட்டியில் தோல்வியுற்றது.

பாக். அணிக்கு யூஹானா தலைவர்! மொயின்கான் மீண்டும் அணியில்!!

தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டிக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு யூஜுப் யூஹானா அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை தலைவராகக் கடமையாற்றிய இன்ஸமாம் உல் ஹக் காயமடைந்துள்ளமையே இதற்குக் காரணம்.

அதேவேளை, முன்னாள் அணித் தலைவர் மொய்ன் கான் நீண்ட காலத்தின் பின் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாக். - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது. (ம)

கண்ணீர் அஞ்சலி

எமது தந்தையாருடைய பிரிய நண்பர்
சுப்பிரமணியத்தின் அருமைப் பத்தினி
திருமதி சு.இரத்தினம்
அவர்களின் மறைவுச்செய்திகேட்டு பெரும் அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத் தினைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

சாரங்கன் நகைமாடம்
45, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 021- 2226059

சாரங்கா நகைமாடம்,
157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-222 2480,
222 6972.

(C-30823)(16-17-31)

கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி லலிதாமலர் முகுந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்
கதிர்காமர் கணபதிப்பிள்ளை
அவர்கள் 15.10.2003 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதோடு, அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம். (23710) (16-17-31) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

டோறா வீடியோ
நெல்லியடி

புதிய வீடியோ ஒடியோ CDக்களையும் போஸ்டர்களையும் வடமராட்சியில் பெற்றுக்கொள்ள
டோறா வீடியோ
(C-30824)

துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் பிரதி அதிபர்
திரு.க.தவகீஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தையாரான பிரபல வர்த்தகர்
கதிர்காமர் கணபதிப்பிள்ளை
அவர்களின் மரணச்செய்திகேட்டு ஆழ்ந்த வேதனை அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
கிளி/பளை மத்திய கல்லூரி.

பளை. (23713)(16-17-31)

தவறிவிட்டது

லோறன்ஸ் மேபிள் என்பவரது தே.அ.அட்டை (678051357V), விசேட அ.அட்டை (0905020749) என்பவற்றுடன் சிறுதொகைப்பணமும், ஒரு சோடி தோடும், கொண்ட கைப்பை ஒன்று யாழ். பஸ் நிலையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். பஸ் நிலையத்தில் உள்ள தயாளன் கூல் பாரில் ஒப்படைக்கவும். அல்லது 077 6165350 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(சி-30819)

மரண அறிவித்தல்கள்

வினாசித்தம்பி நடராஜா
(மண்டலாய், ஓய்வுபெற்ற ஆசிரியர்)

புலோலி தெற்கைச் சேர்ந்த வினாசித்தம்பி நடராஜா (மண்டலாய் மாஸ்டர்) அவர்கள் நேற்று (15.10.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - சீதேவிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும் ராஜதேவி (ராசு அன்ரி) அவர்களின் அன்புக் கணவரும் கந்தையா - பொன்னம்மா ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.10.2003) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தகவல்:
ந.ராஜதேவி (மனைவி).

கல்லூரி வீதி,
புலோலி தெற்கு, புலோலி.

(சி-30825) (31-16-17)

பாராட்டு வாழ்த்துகின்றோம்

உயர்திரு.த.கணேசன்
(உப தபாலதிபர்)

உயர்திரு. மா.விஜயரத்தினம்
(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், பரு.தெ.ப.வ.அ.கூ.சங்கம்)

ஆகிய இருவரும் யாழ். மாவட்ட சமாதான நீதிவான்களாகப் பதவியேற்றமையையிட்டு அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்கள் எல்லா நலமும் பெற்றுத் தங்கள் சேவையைத் தொடர இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

சமரபாகு, வல்வெட்டித்துறை. (23709) (31-16-17) செ.நாதன் குடும்பத்தினர்.

திருமதி இரத்தினம் சுப்பிரமணியம்

புலோலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சுப்பிரமணியம் அவர்கள் பிரான்ஸிலிருந்து வந்தபோது 13.10.2003 திங்கட்கிழமை நல்லூரில் காலமானார்.

அன்னார் செ.சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற சாரதிப் போதனாசிரியர், இ.போ.ச., பருத்தித்துறை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகளும் தவசீலன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (பிரான்ஸ்), பிரபா (ஜேர்மனி), சத்தியா (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர்மடம்), தனப்பிரியா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கசனியா (பிரான்ஸ்), யசோதா (பிரான்ஸ்), பகீரதன் (ஜேர்மனி), இரவீந்திரன் (ஆசிரியர், சென்.சாள்ஸ் மகா வித்தியாலயம்), விஜயகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் யோகேஸ்வரன், சண்முகநாதன், தர்மரத்தினம், மனோரஞ்சிதம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ரூபி, லாவண்யா, திலகர், நவீன், சஞ்ஜை, ஆரபி, அடானா, அல்வினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2003) வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சுப்பிரமணியம்
(கணவர்).

167/2, கோயில் வீதி,
நல்லூர்.

(சி-30826) (31-16-17)

விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்

யாழ்ப்பாணம், ஒக்.16

படையினரின் வாகனங்கள் மோதி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும். - இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன.

இது குறித்து அவர் விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த இரண்டு வாரமாக வடக்கு - கிழக்கில் குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் இராணுவ வாகனங்களால் மோதப்பட்டு சிலர் இறந்துள்ளனர்; பலர் படுகாயங்களுக்குள்ளாகி மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். யாழ் நகரில் நடந்த முதலாவது சம்பவத்தில் 2 பேர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளனர். பின்பு இடம்பெற்ற மேதல்களில் காயமுற்ற பலரே சிகிச்சைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சம்பவங்களை எதிர்ப்பதற்கு அணிதிரளும் பொதுமக்களையும், ஆயுதப்படையினர் மோசமாகத் தாக்கி வருகின்றனர்.

தொடர்கின்ற இச்சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு படை அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், ஆத்திரமூட்டி தமிழீழ விடுதலைப் புலிகளைச் சண்டைக்கு இழுக்கும் திட்டம் திணமறைவில் தீட்டப்படுகிறதா? என்ற சந்தேகமும், அச்சமும் மக்கள் மனதில் எழுந்துள்ளது.

இச்சம்பவங்களை அறிவிப்பதற்கு ஈடுபடும் ஊடகவியலாளர்களும் மேசமாகத் தாக்கப்பட்டு வருவது மட்டுமல்லாமல் அவர்களின் புகைப்படக் கருவிகளும் அடித்து நொறுக்கப்படுகின்றன அல்லது பறித்தெடுக்கப்படுகின்றன.

இப்படியான மிலேச்சத்தனமான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவை தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு பங்கம் ஏற்படுத்தக்கூடுமாகையால் அரசு இவற்றுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைப்பதுடன், குற்றவாளிகளைத் தண்டிப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் - என்று அதில் உள்ளது. (எ)

சுசந்திகா ~ தம்மிக தம்பதியர் பிணையில்

பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த, இலங்கையின் முன்னணி வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்கவும் அவரின் கணவர் தம்மிக நந்தகுமாரவும் நேற்று நீதிமன்றில் ஆஜராகினர்.

வாகன விபத்தொன்றையடுத்து ஏற்பட்ட தகராறு தொடர்பாக மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜராகுமாறு தம்மிக நந்தகுமாரவுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால், குறித்த தினத்தில் தம்மிக ஆஜராகவில்லை. அதனால், தம்மிகவையும் அவருக்கு பிணையாக கையெழுத்திட்ட சுசந்திகா ஜயசிங்கவையும் கைது செய்யுமாறு மாளிகாகந்தை நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் இந்நீதிமன்றில் தம்மிகவும் சுசந்திகாவும் ஆஜராகினர். இவ்விருவரும் தலா 25,000 ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் பிரிவில் மீள்குடியமர்வு கொடுப்பனவு

வலி.வடக்கு,ஒக்.16

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள சுமார் நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு மீள் குடியமர்வு கொடுப்பனவிற்காக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் கையொப்பம் பெறப்படவுள்ளது.

யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் உரிய கிராம அலுவலர் பிரிவுகளுக்குச் சென்று நேரடியாக பயனாளிகளிடம் கையொப்பங்களைப் பெறவுள்ளனர்.

இதனால் ஏ-9 பாதை திறக்கப்பட்டபின்னர் மீள் குடியமர்ந்தவர்கள் தத்தமது கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு கையெழுத்திட வேண்டியோர் பட்டியலில் தமது பெயர் இடம்பெறுவதை தெரிந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-86)

மாநகராட்சி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ். மாநகரசபையின் பொது வேலைப்பகுதி ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைத் தவிர வேறு பணிகளிலும் ஈடுபடுமாறு மாநகராட்சி நிர்வாகம் தம்மை வற்புறுத்துவதாகவும் இதனைக் கண்டித்தே தாம் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாகவும் - ஊழியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வீடியோப் படக்காட்சி

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக்காட்சித் தொடரில் சிவாஜி கணேசன் நடித்துள்ள "கப்பலோட்டிய தமிழன்" எனும் தமிழ்த் திரைப்படம் எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு, புவியியலாற்றுகை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் வெறும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (எ)

கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் வருடாந்தம் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்ட கற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை மாலை 4மணிக்கு யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் யாழ். பல்லைக்கழக அணியை எதிர்த்து யாழ் பற்றசியன் விளையாட்டுக் கழக அணி மோதும். (ம)

ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந்த், கிரண், வடிவேல், நம்பியார் நடிப்பில்

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (மு.ப.)

நாகம்ஸ் சுன்னாகம்

சத்யராஜ், விஜயலட்சுமி, பாண்டியராஜன் நடித்த

ராமச்சந்திரா (ரீல்ஸ்)

காட்சி நேரம் : 11.00, 3.00

வெள்ளி, சனி, ஞாயிறு, திங்கள் இரவு 7.00 மணி

காட்சியைக் காணக்கிடைப்பது.

(23800)(11-16-20)

நிறைஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், ஜோதிகா, விவேக்

தூள் (ரீல்ஸ்)

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (மு.ப.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இந்தி

ஜுக்கிஜான் நடித்த சாகஸம்மயம்

TUXE DO

(11-16-20)(23801)

கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த 51 சீனர்கள் திருமலைக் கடலில் கைது!

கொழும்பு,ஒக்.16

திருகோணமலைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடலட்டை பிடித்துக்கொண்டிருந்த சீனர்கள் 51 பேரை கடற்படையினர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்தனர்.

சிறிய கப்பலொன்றில் வாகரை கடற்பரப்பிலிருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் கடலட்டை பிடித்துக் கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

திருகோணமலை கடற்படை முகாமிற்கு நேற்று கொண்டுவரப்பட்ட சீனர்கள், அங்கு தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அனைவரும் நீதிமன்றில் இன்று ஆஜர் செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஹிக்கடுவ பகுதியில் சிறிய ரக கப்பலொன்று நேற்று கரை ஒதுங்கியுள்ளது. எந்தவிதமான சேதமும் ஏற்படாத இந்தக் கப்பலில் இருந்த ராடர்கருவி மட்டும் அகற்றப்பட்டுள்ளது என பொலீஸார் தெரிவித்தனர். (எ)

பரந்தன் ஊழியருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம்,ஒக்.16

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 20ஆம் திகதி திங்கட்கிழமை வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும் என்று தொழில் முகாமையாளர் கா.சிவபாதசுந்தரம் அறிவித்துள்ளார். (ம-10)

திருமுறை விழா போட்டிகள்

வலிகாமம்,தெற்கு,ஒக்.16

உடுவில் கலைக் கோட்டத்தில் இடம்பெறவுள்ள சைவத் திருமுறை விழா தொடர்பான போட்டிகள் இன்றும் நாளையும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. பாடசாலைப் பிரிவு 'அ' இற்குரிய (தரம் 1 முதல் 5 வரையான) போட்டிகள் இன்று வியாழக்கிழமை ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயத்திலும் பாடசாலைப் பிரிவு 'ஆ' இற்குரிய போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை இணுவில் மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புகளுக்குரிய சகல பாடசாலைகளுக்குமான மனன முற்றோதல், திருமுறை, பண்ணிசைப்போட்டிகள் என்பன கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் -

தொண்டுபடும் செயல்முறைபோட்டிகள் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையிலும் -நடைபெறவுள்ளன.

மரண அறிவித்தல்கள்

கதிர்காமர் கணபதிப்பிள்ளை

(முன்னாள் பிரபல வர்த்தகர், கணபதிப்பிள்ளை கள்ளுச்சியம், பளை)

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமர் கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (15.10.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் புதல்வரும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் ஞானேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்), இரஞ்சிதமலர் (ஆசிரியை, யா/ கொடிகாமம் அதக. பாடசாலை), காலஞ்சென்ற யோகேஸ்வரன், மங்களேஸ்வரன் (அதிபர், யா/கச்சாய் அதக.பாடசாலை), விக்னேஸ்வரன் (ஆசிரியர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்.), ஜெகதீஸ்வரன் (பிரதி அதிபர், கா/நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி), லலிதாம்பிகை (ஆசிரியை, யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), தவகீஸ்வரன் (பிரதி அதிபர், கிளி/ பளை மத்திய கல்லூரி), இரத்தினமலர் (ஆசிரியை, யா/வரனி ம.வி.), சிவதிவ்வரன் (பிரான்ஸ்), அனுஷியலர், இராஜீஸ்வரன் (2ஆம் வருட மாணவன், கல்வியியற்கல்லூரி, மட்டக்களப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இராஜேந்திரமணி (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்), பா. திருஞானசம்பந்தமூர்த்தி (நெடுந்தீவு), புஷ்பராணி (ஆசிரியை, யா/அல்லாரை அ.த.வி.), வசந்தகௌரி (ஆசிரியை, யா/யாவின்னன் மகா வித்.), மலர்வேணி (ஆசிரியை, கிளி/ முகமாலை அதக. பாடசாலை), முகுந்தன் (ஆசிரியர், யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்), சிவகௌரி (ஆசிரியை, வேலணை மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேன்மதுரன், தேனுஷன், நிவேதிகா, ரிஷிகேசன், மதுராங்கன், அபராஜிதன், சௌமியா, தர்மியா, வேஜனா, வேணுகானன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2003) வியாழக்கிழமை பி.ப.3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வேவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவபாக்கியம் (மனைவி).

கண்டி வீதி, மடத்தடி, கொடிகாமம். (23716)(31-14-16)

சிவகுரு குணரத்தினம்

(சவரிக் குணம், மரதகல்)

மாதகலைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு குணரத்தினம் 13.10.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் திருத்தணிகாசலம், விக்னேஸ்வரன், ஞானபத்மா, கமலாதேவி, புவனேஸ்வரி, ரோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காசிநாதன், அமரர் ஜெயவிக்கிரமகுமாரன், கோமளாவதி, அனுசியா, குகசுதன், ஏகாதரன் ஆகியோரின் அருமை மாமனாரும் சபாபதிப்பிள்ளை, திருநாவுக்கரசு ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.10.2003) வியாழக்கிழமை கனடாவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சபாபதிப்பிள்ளை (சகோதரன்)
மாதகல் கிழக்கு, மாதகல்.

கனடா
T.P.: 001 - 416 - 262 4722.
(23714)(31-14-16)

திருமதி தியாகராசா விசாலாட்சி அம்மா

சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருமதி தியாகராசா விசாலாட்சி அம்மா நேற்று (15.10.2003) புதன்கிழமை அதிகாலை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசாவின் (சன்னாகம்) அன்பு மனைவியும் புஷ்பராணி, காலஞ்சென்ற சண்முகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மரத்தினம், பஞ்சவர்ணம் ஆகியோரின் மாமியாரும் சுரேஸ்குமார், ரமேஸ்குமார், பரிஸ்குமார், ரேணுகா, தனேஸ்குமார், சண்முகப்பிரியா ஆகியோரின் பேர்த்தியாரும் இராசமுடதீ, காலஞ்சென்ற சுகராசா மற்றும் மரா சக்தி, ஜெயராசா (புனித இசிதோர் பாடசாலை-ஏழாலை) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (15-10-2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளானெரி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயராசா (சகோதரன்).

சண்டிலிப்பாய் வடக்கு, சங்கானை. (23720)(31-14-16)

கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி இ.திருஞானசம்பந்த மூர்த்தி
அவர்களின் அன்புத் தந்தையார்
திரு.க.கணபதிப்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் கழகம்,
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.
(23718)(14-16-31)

கண்ணீர் அஞ்சலி

பளைப் பிரதேசத்தின் பிரபல வர்த்தகரும் கணபதிப்பிள்ளை அன்ஸன்ஸ் உரிமையாளருமான
கதிர்காமர் கணபதிப்பிள்ளை

அவர்கள் நேற்று (15.10.2003) புதன்கிழமை காலமானதையிட்டு துன்புற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

புலோப்பளை மேற்கு, பளை. (23717)(14-16-31)

அமரர் கு.கிருஸ்ணபிள்ளை குடும்பம் (சாமியார்).

மரண அறிவித்தல்

திருமதி பொன்னுத்துரை நாகபிள்ளை (கனகம்மா)

வேலணை மேற்கு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கோவில் வீதி, சுண்டுக்குளியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை நாகபிள்ளை நேற்று (15.10.2003) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-- செல்லமுத்து தம்பதிகளின், அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் சரவணை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னுத்துரை (முன்னாள் பிரபல வர்த்தகர் - தெனியாய) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, நாகேந்திரா (கொழும்பு), தெய்வேந்திரா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் மனோசிவநாதனின் (நியூ லக்ஷனா ஸ்ரோஸ் - தெனியாய) அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சிவகாமிப்பிள்ளை மற்றும் கணேசபிள்ளை, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, எருத்தாசலம் மற்றும் மீனாக்ஷினி, குலசேகரம் பிள்ளை, போகம்மா, செல்லம்மா, இராசம்மா, ஏகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் விருத்தாம்பிகை, யோகேஸ்வரன் (விக்கினேஸ்வரா நகைப்பூங்கா - மல்லாவி), சிவசக்திவேல் (கொழும்பு), விவேகானந்தன் (லண்டன்), சிவகுமார் (விக்கினேஸ்வரா நகைப் பூங்கா - வவுனியா, கொழும்பு), தமிழ்ச்செல்வன் (ஆசிரியர்) ஆகியோரின் சிறிய தாயாரும் பிரியலக்ஷ்மி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - மானவி), அனுஷ்பிரியா (மானவி - கொழும்பு), ராதிகா (ஆசிரியர்), விஜிதா (யாழ். பல்கலைக்கழகம் - விஞ்ஞான பீடம்), நிஷாந்தி (உயர் தொழில்நுட்ப நிறுவனம்), ஸ்ரீகிருஸ்ணன், பார்த்தசாரதன் (ஸ்ரான்லிக் கல்லூரி - மானவர்கள்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (16.10.2003) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

40/2, கோவில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (23715)(16-14-31)

தகவல்:
பொ.நாகேந்திரா (மகன்).

'உதயன்' மீது தொடர்ந்தும் வசைபாடுகிறார் மகேஸ்வரன்

யாழ்ப்பாணம்,ஒக்.16

அமைச்சர் மகேஸ்வரனின் அறிக்கையைபொட்டி 'உதயனை மிரட்டிப் பார்க்கிறார் அமைச்சர் தி.மகேஸ்வரன்' என்ற தலைப்பில் நேற்றைய உதயனின் முதலாம் பக்கத்தில் வெளியான செய்தியையடுத்து இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் கடிதத்தலைப்பில் 'பக்ஸ்' மூலம் இரண்டு பக்க அறிக்கை ஒன்று நேற்றுமாலை 'உதயன்' அலுவலகத்திற்குக் கிடைத்தது.

அதில் -

வழமைபோல அறிக்கையை வெளியிட்டவர் பெயரோ அல்லது ஒப்பமோ இல்லை. எனினும், அதில் உள்ள கருத்துக்களின் போக்கு அமைச்சர் தி.மகேஸ்வரனே அதனை வெளியிட்டார் எனக் கருதவைத்தது.

பிரச்சினைக்குரிய விடயங்களுக்கு அப்பால் - தொடர்பற்ற விதத்தில் பல்வேறு நிறுவனங்களையும் கட்சிகளையும் 'உதயன், சுடரொளி' நிறுவனங்களுடன் சம்பந்தா சம்பந்தமில்லாமல் தொடர்புபடுத்தி - கற்பனைக் குற்றச்சாட்டுகள் பலவற்றை ஆதாரம் அடிப்படை ஏதுமின்றி வாயில் வந்தபடி அள்ளி வீசும் தனது அரசியல் அபாவத்தனப் போக்கிற்கு அமைய - தனது பதவிக்குப் பொறுப்பற்ற விதத்தில் - இந்த அறிக்கையில் அடுக்கியிருக்கிறார் அமைச்சர்.

★ விடயத்துடன் தொடர்பற்றதாகவும் அதை வரைந்தவரின் அறிவு மற்றும் தகுதி நிலையை வெளிப்படுத்துகின்ற விதத்திலும் உள்ள இந்த அறிக்கை, பிரசுரத்துக்குப் பரிசீலிப்பதற்கே தகுதியற்றது என்பதால் பிரசுரிக்கப்படவில்லை.

★ 'சுவாமி பிரேமானந்தாவுக்கு வணக்கம் செலுத்தும் பட விவகாரம் தொடர்பாக படம், அதன் பிலிம்ரோல், அதற்கு அப்பால் வீடியோ பிரதியும் தருவதற்கு ஆயத்தம்' - என்ற தகவலும் அந்த அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

உண்மையில், இந்த அறிக்கையை அனுப்பியவர் அமைச்சர் தி.மகேஸ்வரனாக இருந்தால் -

தான் பிரகடனப்படுத்தியபடி படம் பிலிம்ரோல், வீடியோ பிரதி ஆகியவற்றை முதலில் பகிரங்கப்படுத்திய பின்னர் -

விடயத்தைத் திசை திருப்பும் வகையில் தான் வெளியிடும் அர்த்தமற்ற - அறிவற்ற - ஆதாரமற்ற அபாண்டமான, குற்றச்சாட்டுக்களை கண்ணை மூடிக்கொண்டு முழங்குகின்ற - அறிக்கைகளை தொடரும்படி அவருக்கு மீளவும் 'உதயன்' சவால் விடுக்கிறான்.

மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை ஏற்றிவைத்தார். தொடர்ந்து அரங்க ஆற்றுகைகள் நடைபெற்றன.

அரங்க ஆற்றுகை நடுவே பொங்கு தமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அரங்க நிகழ்வுகள் மன்னார் மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ம.ரீகன் தலைமையில் இடம்பெற்றன.

அமைச்சர் பி.சந்திரசேகரன், மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் ஆண்டகை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் உட்பட பலர் உரையாற்றினர்.

'பொங்குதமிழ்' நிகழ்வை முன்னிட்டு நண்பகல் 12 மணிக்கு மன்னார் நகரக்கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. நகர வீதிகள் சிவப்பு, மஞ்சள் நிற மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீதிகளின் குறுக்கே சுலோகங்கள் அடங்கிய பாதாகைகள் கட்டப்பட்டிருந்தன.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து மக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு திரும்புவதற்காக உயிலங்குளம் வழியை இரவுவரை திறப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்திருந்தனர். நகரில் இராணுவத்தினரும் பொலீஸாரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (எ-12)

தலதா மாளிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறையில் இந்த வழக்கு விசாரணை 25 நாள்களாக இடம்பெற்றது. 63 பேர் சாட்சியமளித்தனர்.

முதலாம் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டு, 15 பேரின் மரணத்திற்கு உடந்தையாக இருந்ததற்காகவும் 19 பேருக்கு காயங்களை உண்டு பண்ணியதற்காகவும் தலா 20 வருட கால கடுழியச் சிறையும் -

3ஆம் எதிரிக்கு மரணதண்டனையும் 20 வருடகால கடுழியச் சிறைத் தண்டனையும், 4ஆம் எதிரிக்கு மரண தண்டனையும் 20 வருடகால கடுழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டன.

2ஆம் எதிரியான சீவராஜா அல்லது மாஸ்டர் இந்த வழக்கில் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டார். மூன்று எதிரிகள் குற்றவாளிகள் என்று தீர்ப்பு வழங்கிய நீதிபதி, இந்த வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தியிடம் இதுபற்றி எதுவும் கூற விரும்புகிறீர்களா என்று வினவினார்.

இதற்கு அவர், மூன்றாம், நான்காம் எதிரிகள் கடந்த 6 வருடங்களாக விளக்கமறியலில் இருந்து வருகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இந்த வழக்கில் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு 20 வருடத்திற்கும் குறைந்த சிறைத்தண்டனைக்கும் மரணதண்டனைக்கும் குறைந்த தண்டனையை வழங்க இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றும் நீதிபதி தெரிவித்தார்.

அதையடுத்து, மூன்றாம், எதிரியை நோக்கி நீதிபதி ஏதும் இது பற்றி கூற விரும்புகிறீரா என வினவினார். தனக்கும் இந்தச் சம்பவத்திற்கும் எதுவிதத் தொடர்பும் இல்லை என்று அவர் கூறினார்.

இதேபோன்று நான்காம் எதிரியிடமும் வினவப்பட்டது. எனக்கும் இந்தச் சம்பவத்திற்கும் எதுவித தொடர்பும் இல்லை. நான் 2 பிள்ளைகளின் தந்தை. மிகவும் ஏழை. நாடகூலியாக உழைத்து வந்தேன். 48 வயதான நான் உடபேராதனையைச் சேர்ந்தவன் என்று கண்ணீர் மல்கிய நிலையில் கூறினார்.

இதன்பின்னர் நீதிமன்றத்தின் உள்ளே திடீரென விளக்குகள் அணைக்கப்பட்டன. வழக்குத் தீர்ப்பைப் பார்வையிட வந்த 30இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் உட்பட அனைவரும் எழுந்து நின்றனர். அதனை அடுத்து நீதிபதி முதலாம் மூன்றாம், நான்காம் எதிரிகளுக்கு மரணதண்டனையும் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

நீதிமன்றத்துக்கு வெளியே ஆயுதம் தாங்கிய பொலீஸார் கடமையில் அமர்த்தப்பட்டிருந்தனர். வெளியே சனக்கூட்டம் நிரம்பியிருந்தது. தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ணவும் நீதிமன்றத்தில் காணப்பட்டார்.

இந்தத் தீர்ப்புத் தொடர்பாக தாங்கள் மேன்முறையீடு செய்யப் போவதாக எதிரிகள் நிருபர்களிடம் தெரிவித்தனர். (எ)

பேச்சுக்குத் திரும்புமாறு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதான நடவடிக்கைகளின் முக்கியமான கட்டத்தில், சமாதானத்திற்கான கடனாவின் தொடர்ச்சியான - தீவிர - ஆதரவைத் தெரிவிப்பதற்காக நான் இங்கு வந்துள்ளேன்.

இலங்கைக்கு நான் மேற்கொள்ளும் முதல் விஜயம் இது. எனினும், இங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பல வருடங்களாக நான் அவதானித்து வந்துள்ளேன். எனது தொகுதியைச் சேர்ந்த பலர் யுத்தம் நடைபெற்ற வருடங்களில் இங்கிருந்து வந்தவர்கள் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் போற்றிப் பாதுகாக்கும் எனக்கும் மற்றும் சகல கனேடிய மக்களுக்கும் இந்த நாட்டின் நிகழ்வுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

பிரதமர் ரணில், அமைச்சர் ஜி. எவிரிஸ், அமைச்சர் ரவூப் ஹக்கீம், சரேஷ் அரச நாடாளுமன்ற மற்றும் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரை நான் சந்தித்துள்ளேன். எதிர்கால நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதே இந்தச் சந்திப்பின் நோக்கமாகும்.

சமாதான நடவடிக்கைகளை முதலில் ஆரம்பித்தவரும், சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்கு அவசியமான ஆதரவைத் தரவேண்டியவருமான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நான் சந்திக்க இருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்திற்குப் பயணம் செய்வது எனது நோக்கமாகும். நீண்ட காலம் இடம்பெற்றதும் கவலையை அளிப்பதுமான பிரச்சினைகளினால் ஏற்பட்ட அழிவுகளை நேரடியாக அவதானிப்பதும், வடபகுதியின் தற்போதைய நிலைமை குறித்து நேரில் அறிந்துகொள்வதும் எனது விஜயத்தின் நோக்கமாகும்.

யாழ்ப்பாணத்தில் - பாதுகாப்புப் படையினரின் தளபதிகள், சிவில் சமூகத்தின் தலைவர்கள், பிரச்சினைகள் ஏற்பட்ட காலத்திலும் தொடர்ந்து அங்கு வாழ்ந்த மக்கள், சீர்குலைந்த வாழ்க்கையைப் புனரமைப்பதற்கு உதவுவதில் அர்ப்பணித்துப் பணிபுரிவோர் ஆகியோரை நான் சந்திக்க இருக்கின்றேன். உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவத்தினரின் கடமைகள், யாழ்ப்பாண இராணுவத் தளபதியின் சிக்கலான நிலைமை என்பன பற்றியும் ஆராய்வது எனது நோக்கமாகும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டுவரும் இலங்கை அரசின் துணிவையும் நம்பிக்கையையும் இந்தத் தருணத்தில் நான் பாராட்டுகின்றேன்.

பேச்சுக்களின் அடிப்படையிலான தீர்வின் மூலமே நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும். அத்தகைய பேச்சு அடிப்படையிலான தீர்வு மொழி, இனம், மதம் என்பனவற்றைக் கருத்திற்கொள்ளாது இலங்கை மக்கள் அனைவரினதும் சட்டபூர்வமான அபிலாஷைகளை பூர்த்தி செய்யும் வகையில் - அமைந்திருப்பதும் அவசியமாகும்.

சமஷ்டி அடிப்படையில் தீர்வு ஒன்றைக் காணும் நோக்கில் மிக முக்கிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்தமைக்காக இலங்கை அரசையும், புலிகளையும் நான் பாராட்டுகின்றேன் - என்றார்.

கனேடிய வெளிவிவகார அமைச்சரின் உரையின் மிகுதிப் பகுதி நாளை வெளிவரும். (எ-12)

திருமலை எண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் தொடர்பில் பல விடயங்கள் இரகசியமாக உள்ளன. அவை பற்றி அதிகம் வெளிப்படையாகக் கூறமுடியாது.

நோர்வேயின் ஏற்பாட்டில் இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு வழங்குகிறது. ஆனால், அது நேரடியாக இந்தப் பேச்சுக்களில் பங்குபற்றவில்லை.

அரசு - புலிகள் சமாதானப் பேச்சுகளின் ஆறாவது சுற்றுக்குப் பின் ஏழாவது சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாவதில் தாமதம் காணப்படுகின்றது. சமாதான முயற்சிகளில் ஏற்படும் முறிவுகளால் இரண்டு, மூன்று மாதங்கள் முயற்சிகள் தடைப்பட்டிருப்பதை பேச்சுமுறிவு போன்ற பெரிய விடயமாகக் கருதத் தேவையில்லை.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலாக தீர்வு சாதகமானது என்று இந்தியா எண்ணுகிறது. ஆனால், தீர்வு உள்நாட்டில், உருவாக்கப்பட்டதாக இருக்கவேண்டும். சமாதானப் பேச்சுக்களில் வெளிநாடுகள் வழிகாட்டிகளாகவோ, செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகவோ இருக் கக்கூடாது - இப்படி அவர் தெரிவித்தார். (எ)

காஞ்சிரங்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் பலரும் விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், பாவா, ஜனார்த்தனன், குயிலின்பன், சுதா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அடுத்த சந்திப்பு எதிர்வரும் 12ஆம் திகதி காலை அக்கரைப்பற்று பேர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெறுமென தீர்மானிக்கப்பட்டது. (எ)

இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 8மணிவரை)
ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660, 021-2226188
(14-10) (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (23489)

SCC விஷேட கணனிப்பயிற்சி நெறிகள்
இந்தியா, மலேசியா, கனடா மற்றும் அமெரிக்கா எங்கும் வியாபித்திருக்கும் பெருந்தொகையான கணனிசார் வல்லுனர்களை உருவாக்கியதும், IBM மற்றும் Microsoft நிறுவனங்களின் ஆதரவைப் பெற்றுள்ளதுமான Aram Limited (இந்தியா) நிறுவனத்தினரும், SCC நிறுவனத்தினரும் இணைந்து இவ்வருடமில் யாழ் மாவட்டத்தில் அறிமுகப்படுத்தும் பாடத் திட்டங்களுடன் தனது சேவையைத் தொடர்கின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP — Duration 6 - 7 Months Fee 2750/=
DIPLOMA IN DESKTOP PUBLISHING — Duration 4 Months Fee 3750/=
DIPLOMA IN COMPUTER PROGRAMMING — Duration 12 Months Fee 6250/=
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING — Duration 4 -5 Months Fee 4250/=
DIPLOMA IN VISUAL BASIC — Duration 4 Months Fee 3250/=
DIPLOMA IN VISUAL FOXPRO — Duration 4 Months Fee 3250/=
DIPLOMA IN AUTOCAD — Duration 4 Months Fee 3750/=
DIPLOMA IN C++ — Duration 4 - 5 Months Fee 4000/=
DIPLOMA IN NETWORK ENGINEERING — Duration 4 Months Fee 6250/=
2003ஆம் ஆண்டிற்கான இறுதிப் பயிற்சிநெறி ஆரம்பம் 18.10.2003
Note : இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்பட மாட்டாது.
Soft View Computer College
www.arammenporulagam.com
43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka. T.P: 021 2225170
Arammenporulagam@eth.net
Arya Gowdar Road, West mambalam Road, Chennai 600 033, India. TP:+91-44-4891286

புதிய பிரிவுகள் ஆரம்பம்
இக்கல்வியாண்டுக்கான இறுதிப்பிரிவுகள்
18-10-2003 பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.
புலமைப் பரிசில் திட்டம் 2003 இன் கீழ் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் இந்த இறுதிச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.
இப்பிரிவில் அனைத்து Diploma கற்கைநெறிகளும் ஆரம்பமாகும்.
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.

IIS
புலமைப்பரிசில் திட்டம் 2004
கல்வியாண்டு 2004/2005இல் புலமைப்பரிசில் திட்டம் 2004இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயில விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி:15.11.2003
விண்ணப்பப்படிவங்களை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
மேலதிக விவரங்களுக்கு:
இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
A/L 2005
வங்கிக் கணக்கிணக்கக்கூற்று
Sat.,Sun. - 9- 10 a.m.
ஆரம்பம்: 18.10.03 - Sat. 9 a.m.
விக்னா கல்வி நிறுவனம்

கணக்கீடு
A/L 2004 Day Class
கிரயக் கணக்கீடு
ஆரம்பம் : நாளை 12.30
A/L 2004 ஒற்றைப் பதிவு
ஆரம்பம் : இன்று 3.30 p.m.
A/L 2005 பிரிவு II செம்மையாக்கல்கள்
ஆரம்பம் : இன்று 5 p.m.
S.தவா
B.Com.(Hons) [Acc. Spl.]
New Science College Jaffna.

IBMS
சீர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்களை மெருகிலும் எமது நிறுவனத்தில் இணைவதினூடாக நீங்களும் கணனித்துறை வல்லுனர்களாகுங்கள்.
4ஆம் ஆண்டு நிறைவில் விஷேட கட்டணத்தில்
புதிய பிரிவுகள் ஆரம்பம் - 18.10.2003
Diplomas
Dip. in Business Applications (MS Office) — Ms Word, Ms Excel, Ms Access, Ms Power Point, Internet & E . mail — Duration - 4 Months — Fee : 1500.00
Dip. in Digital Science (Information Technology) — Visual Basic, C++, Pascal, Ms Excel, Ms Access, Foxpro, Internet & E . Mail — Duration - 8 Months — Fee : 4000.00
Dip. in Desktop Publishing — Ms Word, Page Maker, Corel DRAW, Photo Shop — Duration - 4 Months — Fee : 2500.00
Dip. in Hard Ware — Basic Concept of Computer & Computer Parts, O/S, Partition, Trouble Shooting, Net Works — Duration - 3 Months — Fee : 3000.00
Certificates
MS Word Fee : 750.00
MS Excel 750.00
MS Access 750.00
Page Maker 1000.00
Photo Shop 1000.00
Visual Basic Fee : 1500.00
Pascal 1000.00
Java 1500.00
C++ 1000.00
Hard Ware 1500.00
Institute of Business Management Studies
Head Office : 701, K.K.S. Road, Jaffna.
Branches : N.M.V. Road, Nelliyadv. Chankathithanai, Chavakachcheri.
TP:-021-222-3165
எமது சாவகச்சேரி கிளையிலும் Dip. in Desktop Publishing கற்கைநெறி ஆரம்பமாகின்றது.

இப்பத்திரிகை நீயூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.